ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ ஸ்ரீ தேசிகப்பிரபந்தம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading the entire document.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | அமிருதரஞ்சனி | 5 |
| 2 | அதிகாரசங்கிரகம் | 13 |
| 3 | அமிருதாசுவாதினி | 25 |
| 4 | பரமபதசோபானம் | 35 |
| 5 | பரமதபங்கம் | 41 |
| 6 | மெய்விரதமான்மியம் | 53 |
| 7 | அடைக்கலப்பத்து | 61 |
| 8 | அருத்தபஞ்சகம் | 63 |
| 9 | ஸ்ரீ வைணவதினசரி | 65 |
| 10 | திருச்சின்னமாலை | 67 |
| 11 | பந்நிருநாமம் | 71 |
| 12 | திருமந்திரச்சுருக்கு | 75 |
| 13 | துவயச்சுருக்கு | 77 |
| 14 | சரமச்லோகச்சுருக்கு | 79 |
| 15 | கீதார்த்தசங்கிரகம் | 81 |
| 16 | மும்மணிக்கோவை | 85 |
| 17 | நவமணிமாலை | 89 |
| 18 | ப்ரபந்தசாரம் | 93 |
| 19 | ஆகாரநியமம் | 99 |
| 20 | பிள்ளையந்தாதி | 107 |

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# ॥ அமிருதரஞ்சனி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡தம்பரம் என்றிரங்கித்⋆ தளராமனம் தந்தருளால்⋆
உம்பர் தொழும் திருமால்⋆ உகந்தேற்கும் உபாயமொன்றால்⋆
நம்பிறவித் துயர்மாற்றிய⋆ ஞானப் பெரும் தகவோர்⋆
சம்பிரதாயம் ஒன்றிச்⋆ சதிர்க்கும் நிலை சார்ந்தனமே (1)

கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த⋆ திருமால்
அடிகாட்டிய⋆ நம் தேசிகர் தம்⋆ நிலை பற்றிச் சேர்ந்தோமே (2)

முத்திக்கருள் சூட⋆ மூன்றைத் தெளிமுன்னம்⋆
இத் திக்கால் ஏற்கும் இதம் (3)

மூன்றில் ஒருமூன்றும்⋆ மூவிரண்டும் முந்நான்கும்⋆
தோன்றத் தொலையும் துயர் (4)

உயிருமுடலும்⋆ உடலாக வோங்கித்⋆
தயிர் வெண்ணெய்⋆ தாரணியோடுண்டான் பயிரில்⋆
களைபோல்⋆ அசுரரைக் காய்ந்தான்⋆ தன் கையில்
வளைபோல்⋆ எம் ஆசிரியர் வாக்கு (5)

அலையற்ற ஆரமுதக்கடல்⋆ அக்கடல் உண்ட முகில்⋆
விலையற்ற நன்மணிவெற்பு⋆ வெயில் நிலவோங்கு பகல்⋆
துலையுற்றன என்பர்⋆ தூமறை சூடுந்துழாய் முடியாற்கு⋆
இலையொத்தன அவன் பாதம்⋆ பணிந்தவர்க்கெண்ணுதற்கே (6)

உத்தி திகழும்⋆ உரை மூன்றின் மும்மூன்றும்⋆
சித்தம் உணரத் தெளிவித்தார்⋆ முத்தி தரும்
மூல மறையின்⋆ முடிசேர் முகில்வண்ணன்⋆
சீலமறிவார் சிலர் (7)

எனக்குரியன் எனது பரம் என் பேறென்னாது⋆
இவையனைத்தும் இறையில்லா இறைக்கடைத்தோம்⋆
தனக்கிணை ஒன்றில்லாத திருமால் பாதம்⋆
சாதனமும் பயனும் எனச் சலங்கள் தீர்ந்தோம்⋆
உனக்கிதமென்றொரு பாகன் உரைத்ததுற்றோம்⋆
உத்தமனாம் அவன் உதவி எல்லாம் கண்டோம்⋆
இனிக்க வருமவை கவர இகந்தோம் சோகம்⋆
இமையவரோடொன்றினி நாம் இருக்கும் நாளே (8)

தத்துவங்கள் எல்லாம்⋆ தகவால் அறிவித்து⋆
முத்தி வழி தந்தார் மொய்கழலே⋆ அத் திவத்தில்
ஆரமுதம் ஆறாம்⋆ இரு நிலத்தில் என்றுரைத்தார்⋆
தாரமுதல் ஓதுவித்தார் தாம் (9)

திருநாரணனெனும் தெய்வமும்⋆ சித்தும் அசித்தும் என்று⋆
பெரு நான்மறை முடிபேசிய⋆ தத்துவம் மூன்றிவை கேட்டு⋆
ஒரு நாள் உணர்ந்தவர்⋆ உய்யும் வகையன்றி ஒன்றுகவார்⋆
இரு நால் எழுத்தின்⋆ இதயங்கள் ஓதிய எண்குணரே (10)

காரணமாய் உயிராகி அனைத்தும் காக்கும்⋆
கருணை முகில் கமலையுடன் இலங்குமாறும்⋆
நாரணனார் வடிவான உயிர்கள் எல்லாம்⋆
நாம் என்று நல் அடிமைக்கேற்குமாறும்⋆
தாரணிநீர் முதலான மாயை காலம்⋆
தனிவான் என்றிவை உருவாம் தன்மைதானும்⋆
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக்⋆
குறிப்புடன் நாம் கண்டவகை கூறினோமே (11)

அப்படி நின்ற⋆ அமலன் படியெல்லாம்⋆
இப்படி எம் முள்ளத்தெழுதினார்⋆-எப்படியும்
ஏரார் சுருதி ஒளியால்⋆ இருள்நீக்கும்⋆
தாராபதி அனையார் தாம் (12)

செம்பொன் கழலிணைச்⋆ செய்யாள் அமரும் திருவரங்கர்⋆
அன்பர்க்கடியவராய்⋆ அடிசூடிய நாமுரைத்தோம்⋆
இன்பத் தொகையென எண்ணிய⋆ மூன்றில் எழுத்தடைவே⋆
ஐம்பத்தொரு பொருள்⋆ ஆருயிர் காக்கும் அமுதெனவே (13)

யான் அறியும் சுடராகி நின்றேன்⋆ மற்றும் யாதுமலேன்⋆
வான் அமரும் திருமால் அடியேன்⋆ மற்றோர் பற்றுமிலேன்⋆
தான் அமுதாம் அவன் தன்⋆ சரணே சரணென்றடைந்தேன்⋆
மானமிலா அடிமைப்⋆ பணி பூண்ட மனத்தினனே (14)

சீலம் கவர்ந்திடும்⋆ தேசிகர் தேசின் பெருமையினால்⋆
தூலங்கள் அன்ன⋆ துரிதங்கள் மாய்த்தன துஞ்சல் தரும்⋆
கோலம் கழிந்திடக்⋆ கூறியகாலம் குறித்து நின்றோம்⋆
மேலிங்கு நாம் பிறவோம்⋆ வேலை வண்ணனை மேவுதுமே (15)

வண்மை உகந்த அருளால்⋆ வரந்தரும் மாதவனார்⋆
உண்மை யுணர்ந்தவர்⋆ ஓதுவிக்கின்ற உரைவழியே⋆
திண்மைதரும் தெளிவொன்றால்⋆ திணியிருள் நீங்கியநாம்⋆
தண்மை கழிந்தனம்⋆ தத்துவம் காணும் தரத்தினமே (16)

நாராயணன் பரன்⋆ நாம் அவனுக்கு நிலை அடியோம்⋆
சோராதனைத்தும்⋆ அவன் உடம்பென்னும் சுருதிகளால்⋆
சீரார் பெருந்தகைத்⋆ தேசிகர் எம்மைத் திருத்துதலால்⋆
தீரா மயல் அகற்றும்⋆ திறம்பாத் தெளிவுற்றனமே (17)

ஒன்றே புகலென்று⋆ உணர்ந்தவர் காட்டத் திருவருளால்⋆
அன்றே அடைக்கலம் கொண்ட⋆ நம் அத்திகிரித் திருமால்⋆
இன்றே இசையின் இணையடி சேர்ப்பர்⋆ இனிப் பிறவோம்⋆
நன்றே வருவதெல்லாம்⋆ நமக்குப் பரம் ஒன்றிலதே (18)

சிறு பயனில் படியாத தகவோர் எம்மைச்
    சேர்க்க⋆ அடைக்கலம் கொண்ட திருமால் தானே⋆
மறுபிறவியறுத்தழியா வானில் வைக்கும்⋆
    மனமே! நீ மகிழாதே இருப்பதென் கொல்⋆
உறுவதுனக்குரைக்கேன் இங்கிருக்குங்காலம்⋆
    ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி வேண்டிப்⋆
பெறுவதெல்லாம் இங்கே நாம் பெற்று வாழப்⋆
    பேரடிமையால் ஏதென்றிகழேல் நீயே (19)

சாக்கியர் சைனர்கள்⋆ சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும்⋆
    தாக்கியர் நூல்கள் சிதையத்⋆ தனிமறையின் கருத்தை⋆
வாக்கியம் முப்பதினால்⋆ வகை செய்து வியாகரித்தோம்⋆
    தேக்கி மனத்துள் இதனைத்⋆ திணியிருள் நீங்குமினே (20)

தள்ளத் துணியினும்⋆ தாய்போல் இரங்கும் தனித் தகவால்⋆
    உள்ளத்துறைகின்ற⋆ உத்தமன் தன்மை உணர்ந்துரைத்தோம்⋆
முள்ளொத்த வாதியர்⋆ முன்னேவரின் எங்கள் முக்கியர்பால்⋆
    வெள்ளத்திடையில் நரிபோல்⋆ விழிக்கின்ற வீணர்களே (21)

செய்யேல் மறமென்று⋆ தேசிகன் தாதை அவனுரைத்த⋆
    மெய்யே அருள் பொருள் சூடிய⋆ எண்மதி காதலியாம்⋆
பொய்யே பகைபுலன்⋆ ஐயிரண்டொன்று பொருங்கருவி⋆
    கையேறு சக்கரக் காவலன்⋆ காவல் அடைந்தவர்க்கே (22)

அந்தமில் ஆதிதேவன் அழிசெய்தடைத்த⋆
    அலை வேலை ஓத மடையச்⋆
செந்தமிழ் நூல் வகுத்த சிறு மா மனிச்சர்⋆
    சிறுகைச் சிறாங்கையது போல்⋆
சந்தம் எலாம் உரைப்ப இவையென்று⋆ தங்கள்
    இதயத்தடக்கி⋆ அடியோம்
பந்தம் எலாம் அறுக்க அருள் தந்துகந்து⋆
    பரவும் பொருள்கள் இவையே (23)

முக்குண மாயையின்⋆ மூவெட்டின் கீழ்வருமூவகையும்⋆
இக்குணமின்றி இலங்கிய⋆ காலச் சுழி இனமும்⋆
நற்குணமொன்றுடை நாகமும்⋆ நாராயணன் உடம்பாய்ச்⋆
சிற்குணம் அற்றவையென்றுரைத்தார்⋆ எங்கள் தேசிகரே (24)

எனதென்பதும்⋆ யான் என்பதும் இன்றித்⋆
தனதென்று தன்னையும் காணாது⋆-உனதென்று
மாதவத்தால் மாதவற்கே⋆ வன்பரமாய் மாய்ப்பதனில்⋆
கைதவத்தான் கைவளரான் காண் (25)

பல் வினை வன்கயிற்றால்⋆ பந்த முற்றுழல்கின்றனரும்⋆
நல்வினை மூட்டிய⋆ நாரணனார் பதம் பெற்றவரும்⋆
தொல்வினை என்றும் இல்லாச்⋆ சோதி வானவரும் சுருதிச்⋆
செல்வினை ஓர்ந்தவர்⋆ சீவர் என்றோதச் சிறந்தனமே (26)

ஆரணங்கள் எல்லாம்⋆ அடிசூட மேல் நின்ற⋆
காரணமாய் ஒன்றால் கலங்காதான்⋆-நாரணனே
நம்மேல் வினை கடியும்⋆ நல் வழியில் தான் நின்று⋆
தன் மேனி தந்தருளும் தான் (27)

குடல்மிசை ஒன்றியும்⋆ கூடியும் நின்ற கொடுந்துயரும்⋆
உடல்மிசைத் தோன்றும் உயிரும்⋆ உயிர்க்குயிரும் இறையும்⋆
கடல்மிசைக் கண்ட⋆ தரளத்திரள் அவை கோத்த பொன்னூல்⋆
மடல்மிசை வார்த்தை⋆ அதன் பொருள் என்ன வகுத்தனமே (28)

தத்துவம் தன்னில்⋆ விரித்திடத் தோன்றும் இரண்டுதனில்⋆
பத்தி விலக்கிய⋆ பாசண்டர் வீசுறும் பாசமுறார்⋆
எத்திசையும் தொழுதேத்திய⋆ கீர்த்தியர் எண் திசையார்⋆
சுத்தர் உரைத்த⋆ சுளகம் அருந்திய தூயவரே (29)

வினைத் திரள் மாற்றிய⋆ வேதியர் தந்த நல் வாசகத்தால்⋆
அனைத்தும் அறிந்தபின்⋆ ஆறும் பயனுமென அடைந்தோம்⋆
மனத்தில் இருந்து⋆ மருந்தமுதாகிய மாதவனார்⋆
நினைத்தல் மறத்தல் அரிதாய⋆ நன்னிழல் நீள்கழலே (30)

ஓது மறை நான்கதனில்⋆ ஓங்கும் ஒரு மூன்றினுள்ளே⋆
நீதிநெறி வழுவா நிற்கின்றோம்⋆-போதமரும்
பேராயிரமும்⋆ திருவும் பிரியாத⋆
நாராயணன் அருளால் நாம் (31)

ஊன் தந்து நிலை நின்ற உயிரும் தந்து⋆ ஓர்
உயிராகி உள் ஒளியோடுறைந்த நாதன்⋆
தான் தந்த இன்னுயிரை எனதென்னாமல்⋆
நல்லறிவும் தந்தகலா நலமும் தந்து⋆
தான் தந்த நல் வழியால் தாழ்ந்த என்னைத்⋆
தன் தனக்கே பாரமாகத் தானே எண்ணி⋆
வான் தந்து மலரடியும் தந்து⋆ வானோர்
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட்டானே (32)

திருமால் அடையிணையே⋆ திண் சரணாக் கொண்டு⋆
திருமால் அடி இணையே சேர்வார்⋆-ஒரு மால்
அருளால் அருளாத⋆ வானோர்கள் வாழ்ச்சி⋆
அருளால் நமக்களித்தார் ஆய்ந்து (33)

சேர்க்கும் திருமகள் சேர்த்தியில்⋆ மன்னுதல் சீர்ப் பெரியோற்கு⋆
ஏற்கும் குணங்கள்⋆ இலக்காம் வடிவில் இணை அடிகள்⋆
பார்க்கும் சரண் அதில்⋆ பற்றுதல் நன்னிலை நாம் பெறும்பேறு⋆
ஏற்கின்ற எல்லைகள் எல்லாக்⋆ களை அறவெண்ணினமே (34)

திருமால் அடியிணை சேர்ந்து⋆ திகழ்ந்த அடிமை பெறத்⋆
திரு நாரணன் சரண்⋆ திண்சரணாகத் துணிந்தடைவோர்⋆
ஒரு நாள் உறைக்க⋆ உயிர்தரும் மந்திரம் ஓதிய நாம்⋆
வருநாள் பழுதற்று வாழும்⋆ வகையதில் மன்னுவமே (35)

மற்றொரு பற்றின்றி⋆ வந்தடைந்தார்க்கெல்லாம்⋆
குற்றம் அறியாத கோவலனார்⋆-முற்றும்
வினை விடுத்து⋆ விண்ணவரோடொன்ற விரைகின்றார்⋆
நினைவுடைத்தாய் நீ மனமே நில்லு (36)

எல்லாத் தருமமும்⋆ என்னை இகழ்ந்திடத் தான் இகழாது⋆
 எல்லாந் தனதென⋆ எல்லாம் உகந்தருள் தந்த பிரான்⋆
மல்லார் மதக்களிறொத்த⋆ வினைத்திரள் மாய்ப்பன் என்ற
 சொல்லால்⋆ இனி ஒருகால் சோகியாத் துணிவுற்றனமே (37)

வினைத் திரள் மாற்றிய⋆ வேதியர் தந்தருள் வாசகத்தால்⋆
 அனைத்தும் அறிந்தபின்⋆ ஆறும் பயனுமென அடைந்தோம்⋆
மனத்திலிருந்து⋆ மருந்தமுதாகிய மாதவனார்⋆
 நினைத்தல் மறத்தல் அரிதாகி⋆ நின்றன நீள் கழலே (38)

‡எட்டில் ஆறிரண்டில் ஒன்றில்⋆ எங்கும் ஆறியம்புவார்⋆
 விட்ட ஆறு பற்றும் ஆறு⋆ வீடு கண்டு மேவுவார்⋆
சிட்டரான தேசுயர்ந்த⋆ தேசிகர்க்குயர்ந்து மேல்⋆
 எட்டு மூன்றும் ஊடறுத்தது⋆ எந்தை மால் இரக்கமே (39)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ அதிகாரசங்கிரகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார்⋆ தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டுசித்தன்⋆
துய்ய குலசேகரன் நம் பாணநாதன்⋆
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி⋆
வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்⋆
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்⋆
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித்⋆
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே (1)

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில்⋆
இகழாத பல்லுறவில் இராகமாற்றில்⋆
தன்பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில்⋆
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்⋆
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க⋆
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு⋆
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்⋆
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே (2)

‡என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு⋆
யான் அடைவே அவர்குருக்கள் நிரை வணங்கிப்⋆
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்⋆
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி⋆
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்⋆
நாதமுனி சடகோபன் சேனை நாதன்⋆

இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு⋆
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே (3)

ஆரணநூல் வழிச் செவ்வை⋆ அழித்திடும் ஐதுகர்க்கு⋆ ஓர்
வாரணமாய்⋆ அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்⋆
ஏரணி கீர்த்தி⋆ இராமானுசமுனி இன்னுரைசேர்⋆
சீரணி சிந்தையினோம்⋆ சிந்தியோம் இனித் தீவினையே (4)

நீள வந்தின்று விதிவகையால்⋆ நினைவொன்றிய நாம்⋆
மீள வந்தின்னும் வினையுடம் பொன்றி⋆ விழுந்துழலாது⋆
ஆளவந்தார் என வென்று⋆ அருள் தந்து விளங்கிய சீர்⋆
ஆளவந்தார் அடியோம்⋆ படியோமினி அல்வழக்கே (5)

காளம் வலம்புரியன்ன⋆ நற்காதல் அடியவர்க்குத்⋆
தாளம் வழங்கித்⋆ தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்⋆
மூளும் தவநெறி மூட்டிய⋆ நாதமுனி கழலே⋆
நாளும் தொழுதெழுவோம்⋆ நமக்கார் நிகர் நானிலத்தே (6)

‡ஆளும் அடைக்கலம் என்றெமை⋆ அம்புயத்தாள் கணவன்⋆
தாளிணை சேர்ந்து⋆ எமக்கும் அவை தந்த தகவுடையார்⋆
மூளும் இருட்கள் விள⋆ முயன்றோதிய மூன்றின் உள்ளம்⋆
நாளும் உகக்கவிங்கே⋆ நமக்கோர் விதி வாய்க்கின்றதே (7)

‡திருவுடன் வந்த செழுமணிபோல்⋆ திருமால் இதயம்⋆
மருவிடம் என்ன மலரடி சூடும்⋆ வகைபெறுநாம்⋆
கருவுடன் வந்த கடு வினையாற்றில்⋆ விழுந்தொழுகாது⋆
அருவுடன் ஐந்தறிவார்⋆ அருள் செய்ய அமைந்தனரே (8)

அமையாவிவை எனும் ஆசையினால்⋆ அறு மூன்றுலகில்⋆
சுமையான கல்விகள் சூழவந்தாலும்⋆ தொகை இவை என்று⋆
இமையா இமையவர் ஏத்திய⋆ எட்டிரண்டெண்ணிய⋆ நம்
சமயாசிரியர்⋆ சதிர்க்கும் தனி நிலை தந்தனரே (9)

நிலை தந்த தாரகனாய்⋆ நியமிக்கும் இறைவனுமாய்⋆
இலதொன்றெனாவகை எல்லாம்⋆ தனதெனும் எந்தையுமாய்த்⋆

துலையொன்றிலையென நின்ற⋆ துழாய் முடியான் உடம்பாய்⋆
விலையின்றி நாம் அடியோம் எனும்⋆ வேதியர்
மெய்ப்பொருளே (10)

பொருளொன்றென நின்ற⋆ பூமகள் நாதன் அவன் அடி சேர்ந்து⋆
அருள் ஒன்றும் அன்பன்⋆ அவன்கொள் உபாயம் அமைந்தபயன்⋆
மருளொன்றிய வினை வல் விலங்கென்று⋆ இவையைந்தறிவார்⋆
இருள் ஒன்றிலாவகை⋆ எம்மனம் தேறவியம்பினரே (11)

தேற வியம்பினர்⋆ சித்தும் அசித்தும் இறையும் என⋆
வேறுபடும் வியன் தத்துவ மூன்றும்⋆ வினையுடம்பில்⋆
கூறுபடும் கொடு மோகமும்⋆ தான் இறையாம் குறிப்பும்⋆
மாற நினைந்தருளால்⋆ மறை நூல் தந்த வாதியரே (12)

வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின்⋆ மறை குலையச்⋆
சாது சனங்கள் அடங்க நடுங்கத்⋆ தனித்தனியே⋆
ஆதியெனாவகை⋆ ஆரண தேசிகர் சாற்றினர்⋆ நம்
போதமரும்⋆ திருமாதுடன் நின்ற புராணனையே (13)

நின்ற புராணன் அடியிணை ஏந்தும்⋆ நெடும் பயனும்⋆
பொன்றுதலே நிலையென்றிடப்⋆ பொங்கும் பவக்கடலும்⋆
நன்றிது தீயதிதென்று⋆ நவின்றவர் நல் அருளால்⋆
வென்று புலன்களை⋆ வீடினை வேண்டும் பெரும் பயனே (14)

வேண்டும் பெரும் பயன்⋆ வீடென்றறிந்து விதி வகையால்⋆
நீண்டும் குறுகியும் நிற்கும்⋆ நிலைகளுக்கேற்கும் அன்பர்⋆
மூண்டொன்றில் மூல வினை மாற்றுதலில்⋆ முகுந்தன் அடி
பூண்டன்றி⋆ மற்றோர் புகலொன்றிலை என நின்றனரே (15)

நின்ற நிலைக்குற நிற்கும் கருமமும்⋆ நேர் மதியால்⋆
நன்றென நாடிய ஞானமும்⋆ நல்கும் உட்கண் உடையார்⋆
ஒன்றிய பத்தியும்⋆ ஒன்றுமிலா விரைவார்க்கருளால்⋆
அன்று பயன் தரும்⋆ ஆறும் அறிந்தவர் அந்தணரே (16)

அந்தணர் அந்தியர்⋆ எல்லையில் நின்ற அனைத்துலகு⋆
நொந்தவரே முதலாக⋆ நுடங்கி அனன்னியராய்⋆
வந்தடையும் வகை⋆ வன் தகவேந்தி வருந்திய⋆ நம்
அந்தமில் ஆதியை⋆ அன்பர் அறிந்தறிவித்தனரே (17)

அறிவித்தனர் அன்பர்⋆ ஐயம் பறையும் உபாயமில்லாத்⋆
துறவித் துனியில்⋆ துணையாம் பரனை வரிக்கும் வகை⋆
உறவித்தனையின்றி⋆ ஒத்தார் என நின்ற உம்பரை நாம்⋆
பிறவித் துயர் செகுப்பீரென்று⋆ இரக்கும் பிழையறவே (18)

அறவே பரமென்று⋆ அடைக்கலம் வைத்தனர் அன்று நம்மைப்⋆
பெறவே கருதிப்⋆ பெரும் தகவுற்றபிரான் அடிக்கீழ்⋆
உறவேய் இவனுயிர் காக்கின்ற⋆ ஓருயிர் உண்மையை⋆ நீ
மறவேல் என⋆ நம்மறை முடி சூடிய மன்னவரே (19)

மன்னவர் விண்ணவர்⋆ வானோர் இறையொன்றும் வான் கருத்தோர்⋆
அன்னவர் வேள்வி⋆ அனைத்தும் முடித்தனர் அன்புடையார்க்கு⋆
என்ன வரம் தரவென்று⋆ நம் அத்திகிரித் திருமால்⋆
முன்னம் வருந்தி⋆ அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே (20)

முக்கிய மந்திரம் காட்டிய⋆ மூன்றில் நிலையுடையார்⋆
தக்கவையன்றித்⋆ தகாதவையொன்றும் தமக்கிசையார்⋆
இக்கருமங்கள் எமக்குளவென்னும்⋆ இலக்கணத்தால்⋆
மிக்கவுணர்த்தியர்⋆ மேதினி மேவிய விண்ணவரே (21)

விண்ணவர் வேண்டி⋆ விலக்கின்றி மேவும் அடிமையெலாம்⋆
மண் உலகத்தில்⋆ மகிழ்ந்தடைகின்றனர்⋆ வண் துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக்⋆ கடன்கள் கழற்றிய⋆ நம்
பண்ணமரும்⋆ தமிழ் வேதம் அறிந்த பகவர்களே (22)

வேதம் அறிந்த பகவர்⋆ வியக்க விளங்கிய சீர்⋆
நாதன் வகுத்த வகை பெறுநாம்⋆ அவன் நல் அடியார்க்கு⋆
ஆதரமிக்க அடிமை இசைந்து⋆ அழியா மறை நூல்⋆
நீதி நிறுத்த⋆ நிலை குலையாவகை நின்றனமே (23)

நின்றனம் அன்புடை வானோர்⋆ நிலையில் நிலமளந்தான்⋆
நன்றிது தீயதிதென்று⋆ நடத்திய நான் மறையால்⋆
இன்று நமக்கிரவாதலின்⋆ இம்மதியின் நிலவே⋆
அன்றி அடிக்கடி⋆ ஆரிருள் தீர்க்க அடியுளதே (24)

உளதான வல் வினைக்கு⋆ உள்ளம் வெருவி உலகளந்த⋆
வளர் தாமரையிணை⋆ வன் சரணாக வரித்தவர் தாம்⋆
களைதான் எனவெழும்⋆ கன்மம் துறப்பர் துறந்திடிலும்⋆
இளைதா நிலை செக⋆ எங்கள் பிரானருள் தேன் எழுமே (25)

‡தேனார் கமலத் திருமகள் நாதன்⋆ திகழ்ந்துறையும்⋆
வானாடுகந்தவர்⋆ வையத்திருப்பிடம்⋆ வன் தருமக்-
கானார் இமயமும்⋆ கங்கையும் காவிரியும் கடலும்⋆
நானா நகரமும்⋆ நாகமும் கூடிய நன்னிலமே (26)

நன்னிலமாம் அது⋆ நற்பகலாம் அது நன் நிமித்தம்⋆
என்னலுமாம் அது⋆ யாதானும் ஆமங்கடியவர்க்கு⋆
மின்னிலை மேனி விடும் பயணத்து⋆ விலக்கிலதோர்⋆
நன்னிலையாம் நடு நாடி வழிக்கு⋆ நடைபெறவே (27)

நடைபெற அங்கி பகல் ஒளிநாள்⋆ உத்தராயணம் ஆண்டு⋆
இடை வருகாற்றிரவி⋆ இரவின் பதி மின் வருணன்⋆
குடையுடை வானவர் கோமான்⋆ பிரசாபதி என்றிவரால்⋆
இடையிடை போகங்கள் எய்தி⋆ எழிற்பதம் ஏறுவரே (28)

ஏறி எழிற்பதம்⋆ எல்லா உயிர்க்கும் இதமுகக்கும்⋆
நாறு துழாய் முடி⋆ நாதனை நண்ணி அடிமையில் நம்⋆
கூறு கவர்ந்த⋆ குருக்கள் குழாங்கள் குரை கழற்கீழ்⋆
மாறுதல் இன்றி⋆ மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே (29)

‡மன்னும் அனைத்துறவாய்⋆ மருள் மாற்றருள் ஆழியுமாய்த்⋆
தன் நினைவால் அனைத்தும்⋆ தரித்தோங்கும் தனி இறையாய்⋆
இன் அமுதத்தமுதால்⋆ இரங்கும் திருநாரணனே⋆
மன்னியவன் சரண்⋆ மற்றோர் பற்றின்றி வரிப்பவர்க்கே (30)

வரிக்கின்றனன் பரன்⋆ யாவரை என்று மறையதனில்⋆
விரிக்கின்றதும் குறியொன்றால்⋆ வினையரை ஆதலின் நாம்⋆
உரைக்கின்ற நன்னெறி⋆ ஓரும் படிகளில் ஓர்ந்து⋆ உலகம்
தரிக்கின்ற தாரகனார்⋆ தகவால் தரிக்கின்றனமே (31)

தகவால் தரிக்கின்ற⋆ தன் அடியார்களைத் தன் திறத்தில்⋆
மிகவாதரம் செயும்⋆ மெய்யருள் வித்தகன் மெய்யுரையின்⋆
அகவாய் அறிந்தவர்⋆ ஆரண நீதி நெறி குலைதல்⋆
உகவாரென⋆ எங்கள் தேசிகர் உண்மை உரைத்தனரே (32)

உண்மை உரைக்குமறைகளில் ஓங்கிய⋆ உத்தமனார்⋆
வண்மை அளப்பரிதாதலின்⋆ வந்துகழல் பணிவார்⋆
தண்மை கிடந்திடத்⋆ தாமளவென்ன இயப்பிலதாம்⋆
உண்மை உரைத்தனர்⋆ ஓரம் தவிர உயர்ந்தனரே (33)

உயர்ந்தனன் காவலன் அல்லார்க்கு⋆ உரிமை துறந்துயிராய்⋆
மயர்ந்தமை தீர்ந்து⋆ மற்றோர் வழியின்றி அடைக்கலமாய்ப்⋆
பயந்தவன் நாரணன்⋆ பாதங்கள் சேர்ந்து பழவடியார்⋆
நயந்த குற்றேவல் எல்லாம்⋆ நாடும் நன் மனுவோதினமே (34)

ஓதுமிரண்டை இசைத்து⋆ அருளால் உதவும் திருமால்⋆
பாதம் இரண்டும் சரணெனப் பற்றி⋆ நம் பங்கயத்தாள்⋆
நாதனை நண்ணி⋆ நலந்திகழ் நாட்டில் அடிமையெல்லாம்⋆
கோதில் உணர்த்தியுடன்⋆ கொள்ளுமாறு குறித்தனமே (35)

குறிப்புடன் மேவும் தருமங்களின்றி⋆ அக்கோவலனார்⋆
வெறித்துளவக் கழல்⋆ மெய்யரணென்று விரைந்தடைந்து⋆
பிரித்த வினைத்திரள்⋆ பின் தொடராவகை அப்பெரியோர்⋆
மறிப்புடை மன்னருள் வாசகத்தால்⋆ மருளற்றனமே (36)

மருளற்ற தேசிகர்⋆ வான் உகப்பால் இந்த வையமெலாம்⋆
இருளற்றிறைவன்⋆ இணையடி பூண்டுயவெண்ணுதலால்⋆
தெருளற்ற செந்தொழில்⋆ செல்வம் பெருகிச் சிறந்தவர்பால்⋆
அருளுற்ற சிந்தையினால்⋆ அழியா விளக்கேற்றினரே (37)

ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை⋆ இருள் அனைத்தும்⋆
மாற்றினவர்க்கொரு கைம்மாறு⋆ மாயனும் காணகில்லான்⋆
போற்றி உகப்பதும்⋆ புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்⋆
சாற்றி வளர்ப்பதும்⋆ சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே (38)

முன் பெற்ற ஞானமும்⋆ மோகம் துறக்கலும் மூன்றுரையில்⋆
தன்பற்ற தன்மையும்⋆ தாழ்ந்தவர்க்கீயும் தனித்தகவும்⋆
மன் பற்றி நின்ற வகை⋆ உரைக்கின்ற மறையவர்பால்⋆
சின்பற்றி என்பயன்⋆ சீர் அறிவோர்க்கிவை செப்பினமே (39)

‡செப்பச் செவிக்கமுதென்னத் திகழும்⋆ செழும் குணத்துத்⋆
தப்பற்றவருக்குத்⋆ தாமே உகந்து தரும் தகவால்⋆
ஒப்பற்ற நான்மறை⋆ உள்ளக்கருத்தில் உறைத்துரைத்த⋆
முப்பத்திரண்டிவை⋆ முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே (40)

(திருவுடன் வந்த செழுமணிபோல்⋆ திருமாலிதயம்⋆
மருவிடம் என்ன மலரடி சூடும்⋆ வகைபெறுநாம்⋆
கருவுடன் வந்த கடுவினையாற்றில்⋆ விழுந்தொழுகாது⋆
அருவுடன் ஐந்தறிவார்⋆ அருள் செய்ய அமைந்தனரே)

‡புருடன் மணிவரமாகப் பொன்றா மூலப்⋆
பிரகிருதி மறுவாக மான் தண்டாகத்⋆
தெருள் மருள் வாளுறையாக ஆங்காரங்கள்
சார்ங்கம் சங்காக⋆ மனம் திகிரியாக⋆
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்களாக⋆
இருபூத மாலை வனமாலையாகக்⋆
கருடன் உருவாம் மறையின் பொருளாம்⋆ கண்ணன்
கரிகிரி மேல் நின்றனைத்தும் காக்கின்றானே (41)

‡ஆராதவருள் அமுதம் பொதிந்த கோயில்⋆
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்களித்த கோயில்⋆
தோலாத தனிவீரன் தொழுத கோயில்⋆
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்⋆

சேராத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்⋆
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்⋆
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்⋆
திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே (42)

‡கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு⋆
கடு வினையர் இரு வினையும் கடியும் வெற்பு⋆
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு⋆
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு⋆
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு⋆
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு⋆
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு⋆
வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே (43)

‡உத்தமமர்த்தலம் அமைத்ததோர்
எழில் தனுவின்⋆ உய்த்த கணையால்⋆
அத்திரவரக்கன் முடி பத்தும்
ஒரு கொத்தென⋆ உதிர்த்த திறலோன்⋆
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய்
வைத்ததுணும்⋆ அத்தனிடமாம்⋆
அத்திகிரி பத்தர் வினை தொத்தற
அறுக்கும்⋆ அணி அத்தகிரியே (44)

எட்டு மா மூர்த்தியெண் கணன்⋆ எண் திக்கு
எட்டிறை எண் பிரகிருதி⋆
எட்டுமா வரைகள் ஈன்றவெண் குணத்தோன்⋆
எட்டெணுமெண் குணமதியோர்க்கு⋆
எட்டு மா மலர் எண் சித்தி எண் பத்தி⋆
எட்டு யோகாங்கம் எண் செல்வம்⋆
எட்டு மா குணம் எட்டெட்டெணும் கலை⋆
எட்டிரத மேலதுவும் எட்டினவே (45)

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி⋆
ஒருநினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய⋆

வண் துவரை நகர் வாழ வசுதேவற்காய்⋆
மன்னவற்குத் தேர்ப் பாகனாகி நின்ற⋆
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன⋆
தனித்தருமம் தான் எமக்காய்த் தன்னையென்றும்⋆
கண்டு களித்தடி சூட விலக்காய் நின்ற⋆
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே (46)

மூண்டாலும் அரியதலின் முயல வேண்டா⋆
முன்னம் அதில் ஆசைதனை விடுகை திண்மை⋆
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு⋆
வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கிநிற்கும்⋆
நீண்டாகுநிறை மதியோர் நெறியில் கூடா⋆
நின் தனிமை துணையாக என்தன் பாதம்
பூண்டால்⋆ உன் பிழைகளெலாம் பொறுப்பனென்று⋆
புண்ணியனார் புகழ் அனைத்தும் புகழுவோமே (47)

சாதனமும் நற்பயனும் நானேயாவன்⋆
சாதகனும் என் வயமாய் என்னைப்பற்றும்⋆
சாதனமும் சரணநெறியன்றுமக்குச்⋆
சாதனங்கள் இந்நிலைக்கோர் இடையில் நில்லா⋆
வேதனை சேர் வேறங்கமிதனில் வேண்டா⋆
வேறெல்லாம் நிற்கு நிலை நானே நிற்பன்⋆
தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச்⋆
சோகம் தீரென உரைத்தான் சூழ்கின்றானே (48)

தன் நினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார்⋆
நினைவனைத்தும் தான் விளைத்தும் விலக்கு நாதன்⋆
என் நினைவை இப்பவத்தில் இன்று மாற்றி⋆
இணையடிக்கீழ் அடைக்கலம் என்றெம்மைவைத்து⋆
முன் நினைவால் யாம் முயன்ற வினையால் வந்த⋆
முனிவயர்ந்து முத்திதர முன்னே தோன்றி⋆
நன் நினைவால் நாம் இசையும் காலம்⋆ இன்றோ
நாளையோ என்று நகை செய்கின்றானே (49)

‡பாட்டுக்குரிய பழையவர் மூவரைப்⋆ பண்டொருகால்⋆
மாட்டுக்கருள் தரு மாயன்⋆ மலிந்து வருத்துதலால்⋆
நாட்டுக்கிருள் செக⋆ நான்மறை அந்தி நடை விளங்க⋆
வீட்டுக்கிடைகழிக்கே⋆ வெளிக்காட்டும் மெய்விளக்கே (50)

‡உறு சகடம் உடையவொரு காலுற்றுணர்ந்தன⋆
உடன் மருதம் ஒடிய ஒருபோதில் தவழ்ந்தன⋆
உறி தடவும் அளவில் உரலோடுற்று நின்றன⋆
உறுநெறியோர் தருமன் விடு தூதுக்குகந்தன⋆
மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன⋆
மலர்மகள் கை வருட மலர்போதில் சிவந்தன⋆
மறுபிறவி அறுமுனிவர் மாலுக்கிசைந்தன⋆
மனு முறையில் வருவதோர் விமானத்துறைந்தன⋆
அறமுடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன⋆
அடலுரக படமடிய ஆடிக் கடிந்தன⋆
அறு சமயம் அறிவரிய தானத்தமர்ந்தன⋆
அணி குருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன⋆
வெறியுடைய துளவமலர் வீறுக்கணிந்தன⋆
விழுகரியோர் குமரன் என மேவிச் சிறந்தன⋆
விறலசுரர் படையடைய வீயத் தொடர்ந்தன⋆
விடலரிய பெரிய பெருமாள் மெய்ப் பதங்களே (51)

மறை உரைக்கும் பொருளெல்லாம் மெய்யென்றோர்வார்⋆
மன்னிய கூர்மதி உடையார் வண் குணத்தில்⋆
குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால்⋆
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை⋆
சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால்⋆
சிதையாத திண் மதியோர் தெரிந்ததோரார்⋆
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும்⋆ எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே (52)

இது வழியின் அமுதென்றவர்⋆ இன்புலன் வேறிடுவார்⋆
இதுவழியாம் அல்லவென்றறிவார்⋆ எங்கள் தேசிகரே⋆

இதுவழி எய்துகவென்று⋆ உகப்பால் எம்பிழை பொறுப்பார்⋆
இது வழியா மறையோர் அருளால்⋆ யாம் இசைந்தனமே (53)

எட்டுமிரண்டும் அறியாத எம்மை⋆ இவை அறிவித்து⋆
எட்டவொண்ணாத இடம் தரும்⋆ எங்கள் அம்மாதவனார்⋆
முட்ட வினைத்திரள் மாள⋆ முயன்றிடும் அஞ்சலென்றார்⋆
கட்டெழில் வாசகத்தால்⋆ கலங்கா நிலை பெற்றனமே (54)

‡வானுள் அமர்ந்தவருக்கும்⋆ வருந்த வரு நிலைகள்⋆
தான் உளனாய் உகக்கும்⋆ தரம் இங்கு நமக்குளதே⋆
கூனுள நெஞ்சுகளால்⋆ குற்றமென்னி இகழ்ந்திடினும்⋆
தேனுள பாத மலர்த்⋆ திருமாலுக்குத் தித்திக்குமே (55)

‡வெள்ளைப் பரிமுகர் தேசிகராய்⋆ விரகால் அடியோம்⋆
உள்ளத்தெழுதியதோலையில் இட்டனம்⋆ யாம் இதற்கென்⋆
கொள்ளத் துணியினும் கோதென்றிகழினும்⋆ கூர் மதியீர்⋆
எள்ளத்தனையுகவாதிகழாது⋆ எம்மெழில் மதியே (56)

॥சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ அமிருதாசுவாதினி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡மூலம் கிளையென⋆ ஒன்றிரண்டான மொழி இரண்டும்⋆
மேலொன்றிலையென நின்ற⋆ அவ்வித்தகன் தன்னுரையும்⋆
காலம் கழிவதன் முன்னம்⋆ கருத்துறக் கண்டிடவே⋆
ஞாலம் புகழும்⋆ நம் தேசிகர் தாம் நமை வைத்தனரே (1)

காரணமும் காவலனும் ஆகி⋆ என்றும்
கமலையுடன் பிரியாத நாதனான⋆
நாரணனுக்கடியேன் நான் அடிமை பூண்ட⋆
நல்லடியார்க்கல்லால் மற்றொருவர்க்கல்லேன்⋆
ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டால்⋆
அறிவாகி அறிவதுமாய் அறு நான் கன்றிச்⋆
சீரணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன்⋆
சிலை விசயன் தேரனையச் சிறு வேதத்தே (2)

யான் எனதென்பதொன்றில்லை⋆ என் செய்வதவனையல்லால்⋆
ஆனதறிந்திடும்⋆ தன் அடியார்க்கெனை ஆட்படுத்தித்⋆
தானெனை நல்கி நடத்துகின்றான்⋆ தன் அருள் வழியே⋆
நான் உனை வீடு செய்வேன் என்ற⋆ நம் திருநாரணனே (3)

யாதாம் இவை அனைத்தும்⋆ படைத்தேந்தும் இறைவனுமாய்க்⋆
கோதாம் குணங்களுடன்⋆ குறுகாத குணத்தனுமாய்⋆
மாதா பிதா என⋆ மன்னுறவாய்க் கதி யென்ன நின்றான்⋆
போதார் திருவுடன்⋆ பொன்னருள் பூத்த நம் புண்ணியனே (4)

இருவிலங்கு கழித்திடராம் உடலம் தன்னில்⋆
    இலங்கு நடு நாடியினால் எம்மை வாங்கி⋆
ஒருவிலங்கு நெறியல்லா வழியால் மன்னும்⋆
    உயர் வானில் ஏற்றி உயிர் நிலையும் தந்து⋆
பெருவிலங்காம் அருள் தன்னால் தன் அடிக்கீழ்ப்⋆
    பிரியாத அமரருடன் பிணைத்துத் தன்னார்⋆
உருவில் அங்கு மிசைவிக்கும் உம்பர் போகம்⋆
    உகந்து தரும் திருமாலை உகந்தோம் நாமே (5)

உறவை இசைந்திறை இல்லா ஒருவர்க்கென்றும்⋆
    ஒண்சுடராய் ஓர் எழுத்தில் ஓங்கி நின்றோம்⋆
துறவறமும் தூமதியும் துயரம் தீர்வும்⋆
    தூயவர்கட்கானமையும் இரண்டில் உற்றோம்⋆
அறமுயலும் அனைத்துறவாய் அனைத்தும் ஏந்தும்⋆
    அம்புயத்தாள் கணவனை நாம் அணுகப் பெற்றோம்⋆
பிறவி அறுத்தடிசூடி அடிமை எல்லாம்⋆
    பிரியாத அமரருடன் பெற்றோம் நாமே (6)

கருமமென ஞானமென அதனால் கண்ட⋆
    உயிர்கவரும் காதலெனக் கானில் ஓங்கும்⋆
அருமறையால் தருநிலையில் இன்னாள் எல்லாம்⋆
    அடியேனை அலையாத வண்ணம் எண்ணித்⋆
தருமமுடையார் உரைக்க யான் அறிந்து⋆
    தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித்⋆
திருமகளோடொரு காலும் பிரியா நாதன்⋆
    திண் கழலே சேதுவெனச் சேர்கின்றேனே (7)

வினைவிடுத்து வியன் குணத்தால் எம்மையாக்கி⋆
    வெருவுரை கேட்டவை கேட்க விளம்பி நாளும்⋆
தனை அனைத்தும் அடைந்திடத் தான் அடைந்து நின்ற⋆
    தன் திருமாதுடன் இறையும் தனியாநாதன்⋆
நினைவழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும்⋆
    நிகரில்லா நெடுங்குணங்கள் நிலை பெறத்⋆ தன்

கனை கழல் கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து⋆
காரணனாந் தன் காவல் கவர்கின்றானே (8)

என்னது யான் செய்கின்றேன் என்னாதாருக்கு⋆
இன்னடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும்⋆
பொன்னுலகில் திருவுடனே அமர்ந்த நாதன்⋆
புனலாரும் பொழிலரங்கன் திகழ மன்னித்⋆
தன்னகலம் அகலாத தகவால் ஓங்கும்⋆
தகவுடனே தன் கருமம் தானே எண்ணி⋆
அன்னையென அடைக்கலம் கொண்டஞ்சல் தந்து⋆ என்
அழலாற நிழலார அளிக்கின்றானே (9)

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி⋆
ஒரு நினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய⋆
வண் துவரை நகர் வாழ வாசுதேவற்காய்⋆
மன்னவற்குத் தேர்ப் பாகனாகி நின்ற⋆
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன⋆
தனித்தருமம் தான் எமக்காய்த் தன்னையென்றும்⋆
கண்டு களித்தடி சூட விலக்காய் நின்ற⋆
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே (10)

துய்ய மனத்தர்⋆ துறை அணுகாத துணையிலியேன்⋆
ஐயம் அறுத்துனதாணை⋆ கடத்தல் அகற்றினை நீ⋆
கையமர் சக்கரக்⋆ காவல் காக்கும் திருவருளால்⋆
வையமளந்த அடிக்கீழ்⋆ அடைக்கலம் வைத்தருளே (11)

அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்⋆
அம்புயத் தாளுடன் அந்நாள் அவதரித்த⋆
குறையாதும் இல்லாத கோவிந்தா⋆ நின்
குரை கழல் கீழ் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய்⋆
வெறியாரும் மலர்மகளும் நீயும் விண்ணில்⋆
விண்ணவர்கள் அடி சூட இருக்கும் மேன்மை⋆
குறையாத வினையகற்றி அடிமை கொள்ளக்⋆
குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே (12)

தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும்⋆
தாரமுதல் இருநான்கும் தன் கருத்தால்⋆
முத்திவழி நாமுயலும் வகையே காண⋆
முகுந்தன் இசைத்தருள் செய்த ஐந்நாலைந்தும்⋆
பத்திதனில் படிவில்லார் பரம் சுமத்தப்⋆
பார்த்தன் தேர் முன்னே தாம் தாழ நின்ற⋆
உத்தமனார் உத்தம நல்லுரை நாலெட்டும்⋆
உணர்ந்தவர் தாமுகந்தெம்மை உணர்வித்தாரே (13)

பரக்கும் புகழ் வரும்⋆ பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய்⋆
இரக்கின்றவர்க்கிவை ஈந்தால்⋆ அறம் உளதென்றியம்பார்⋆
கரக்கும் கருத்துடை⋆ தேசிகர் கன்றென நம்மை எண்ணிச்⋆
சுரக்கும் சுரவிகள் போல்⋆ சொரிகின்றனர் சொல் அமுதே (14)

சோகம் தவிர்க்கும்⋆ சுருதிப் பொருள் ஒன்று சொல்லுகின்றோம்⋆
நாகம் தனக்கும் இராக்கதற்கும்⋆ நமக்கும் சரணாம்⋆
ஆகண்டலன் மகனாகிய⋆ ஆவலிப்பேறிய⋆ ஓர்
காகம் பிழைத்திடக்⋆ கண் அழிவே செய்த காகுத்தனே (15)

ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்⋆
உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்⋆
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்⋆
அஞ்சேல் என்றருள் கொடுப்பன் இதுதான் ஓதும்⋆
இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்⋆
இவை அறிவார் செயலுடன் என் இசை வினாலும்⋆
நெருக்காத நீள் விரதம் எனக்கொன்றென்னும்⋆
நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றோமே (16)

பொன்னை இகழ்ந்து விருகங்கள்⋆ புல்லிய புல் உகந்தால்⋆
மன்னர் எடுப்பதப்பொன் அலதே⋆ மன்னுலகனைத்தும்⋆
தன்னை அடைந்திடத்⋆ தான் அருள் செய்யும் தனிச் சிலையோன்⋆
பொன்னடி நாம் அடைந்தோம்⋆ புறமார் என்கொல்
செய்திடினே (17)

வேதத்திரளின் விதி உணர்ந்தோர்கள்⋆ விரித்துரைத்த⋆
காதல் கதியையும்⋆ ஞானத்தையும் கருமங்களையும்⋆
சாதிக்கவல்ல சரணாகதி⋆ தனி நின்ற நிலை⋆
ஓதத் தொடங்கும் எழுத்தின் திறத்தில்⋆ உணர்மின்களே (18)

மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்ற⋆
முனிவர்களும் தேவர்களுமுனிந்த அந்நாள்⋆
தாவரிதாய் எங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த⋆
தனிக் காகம் தானிரந்த உயிர் வழங்கிக்⋆
காவல் இனியெமக்கெங்கும் கடன் என்றெண்ணிக்⋆
காண நிலை இலச்சினை அன்றிட்ட வள்ளல்⋆
ஏவல் பயன் இரக்கம் இதற்காறென்றோதும்⋆
எழில் உடையார் இணை அடிக்கீழ் இருப்போம் நாமே (19)

திருத்தம் பெரியவர்⋆ சேரும் துறையில் செறிவிலர்க்கு⋆
வருத்தம் கழிந்த⋆ வழி அருளென்ற நம் மண்மகளார்⋆
கருத்தொன்ற⋆ ஆதிவராகம் உரைத்த கதி அறிவார்⋆
பொருத்தம் தெளிந்துரைக்கப்⋆ பொய்யிலா மதி பெற்றனமே (20)

இடம்பெற்றார் எல்லாம் என் உடலாய் நிற்ப⋆
இடர்பிறப்பென்றிவையில்லா என்னை அன்பால்⋆
அடம் பற்றாம் அவனென்று நினைந்தான் யாவன்⋆
அவன் ஆவி சரியும்போதறிவு மாறி⋆
உடம்பில் தாருபலம்போல் கிடக்க நானே⋆
உய்யும் வகை நினைந்துயர்ந்த கதியால்⋆ என்றன்
இடம் பெற்றென்னுடன் வாழ எடுப்பன் என்ற⋆
எம்பெருமான் அருள் பெற்று மருள் செற்றோமே (21)

இரண்டுரையாத⋆ நம் ஏனம் உரைத்த உரை இரண்டின்⋆
திரண்ட பொருள்கள்⋆ தெளிந்தடி சூடினம் திண் அருளால்⋆
சுருண்ட நம் ஞானச் சுடரொளி⋆ சுற்றும் பரப்பதன் முன்⋆
புரண்டது நம் வினை⋆ போமிடம் பார்த்தினிப் போமளவே (22)

மலையும் குலையும் என்றெண்ணியும்⋆ வன்பெரும் புண் திரங்கித்⋆
    தலையும் வெளுத்த பின்⋆ தானே அழிய இசைகின்றிலீர்⋆
அலையும் கடல் கொண்ட⋆ வையம் அளித்தவன் மெய்யருளே⋆
    நிலை என்று நாடி⋆ நிலை நின்ற பொய்ம்மதி நீக்குமினே (23)

கண்ணன் கழல் தொழக்⋆ கூப்பிய கையின் பெருமைதனை⋆
    எண்ணம் கடக்க⋆ யமுனைத் துறைவர் இயும் புதலால்⋆
திண்ணம் இதுவென்று⋆ தேறித் தெளிந்த பின் சின்மதியோர்⋆
    பண்ணும் பணிதிகள் பாற்றிப்⋆ பழந்தொழில் பற்றினமே (24)

பொங்கு புனல் ஆறுகளில் புவனம் எல்லாம்⋆
    பொற்கழலால் அளந்தவன் தன் தாளால் வந்த⋆
கங்கையெனும் நதி போலக் கடல்கள் ஏழில்⋆
    கமலை பிறந்தவனுகந்த கடலே போலச்⋆
சங்குகளில் அவன் ஏந்தும் சங்கே போலத்⋆
    தாரில் அவன் தண் துளவத் தாரே போல⋆
எங்கள் குல பதிகள் இவைமேலாம் என்றே⋆
    எண்ணிய நல்வார்த்தைகள் நாம் இசைக்கின்றோமே (25)

சீர்க்கடலின் திரை என்னத் தகவால் மிக்க⋆
    தேசிகராய்த் திண் இருளாம் கடலை நீக்கிப்⋆
பாற்கடலோன் திருவணையாய் நின்று⋆ பாரம்
    காணாத பவக்கடலைக் கடத்துகின்றான்⋆
ஈர்க்குமரக்கலமென்ன இறைவர் இன்பம்⋆
    எழுந்தழியும் குமிழியென இகந்தொழிந்தோம்⋆
ஆர்க்கினி நாம் என் கடவோம் நமக்கும் ஆரென்
    கடவாரென்று⋆ அடைந்தவர்கட்கறிவித்தோமே (26)

‡காசினியின் மணி அனைத்தும் காயா வண்ணன்⋆
    கடைந்தெடுத்த கவுத்துவத்தின் சீர்மைக்கொவ்வா⋆
காசி முதலாகிய நல் நகரி எல்லாம்⋆
    கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா⋆
மாசின் மனந்தெளி முனிவர் வகுத்ததெல்லாம்⋆
    மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக் கொவ்வா⋆

வாசி அறிந்திவை உரைத்தோம் வையத்துள்ளீர்⋆
வைப்பாக இவை கொண்டு மகிழ்மினீரே (27)

‡அந்தமிலாப் பேரின்பம் அருந்த ஏற்கும்⋆
அடியோமை அறிவுடனே என்றும் காத்து⋆
முந்தைவினை நிரைவழியில் ஒழுகாதெம்மை⋆
முன் நிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து⋆
மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி⋆
வழிப்படுத்தி வானேற்றி அடிமை கொள்ளத்⋆
தந்தை எனநின்ற தனித் திருமால் தாளில்⋆
தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே (28)

தான் தனக்குத் தன்னாலே தோன்றித்⋆ தன்னோர்
ஒளி அணைக்கும் குணத்தாலும் தன்னைக் கண்டு⋆
தான் தனக்கென்றறியாத தன் குணத்தைத்⋆
தன் குணத்தால் தான் இறையில் தானே கூட்டி⋆
ஊன் மருத்துப் புலன் மனமானாங்காரங்கள்⋆
ஒரு மூலப் பிரகிருதி அன்றி நின்ற⋆
நான் தனக்குத் தான் தனக்கென்றிசைவுதந்த⋆
நாரணனை நான் மறையால் நான் கண்டேனே (29)

கழியாத கருவினையில் படிந்த நம்மைக்⋆
காலமிதுவென்றொருகால் காவல் செய்து⋆
பழியாத நல்வினையில் படிந்தார் தாளில்⋆
பணிவித்துப் பாசங்கள் அடைய நீக்கிச்⋆
சுழியாத செவ்வழியில் துணைவரோடே⋆
தொலையாத பேரின்பம் தரமேல் ஏற்றி⋆
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும்⋆
அந்தமிலா உதவியெலாம் அளப்பாராரே (30)

‡நின் அருளாம் கதியன்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக்கினிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்

மன்னிருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை
இன்னருளால் இனி எனக்கோர் பரமேற்றாமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே (31)

பரவுமறைகள் எலாம்⋆ பதம் சேர்ந்தொன்ற நின்ற பிரான்⋆
இரவன்றிரவியின்⋆ காலத் தழைத்த எழில் படையோன்⋆
அரவும் கருடனும் அன்புடன் ஏந்தும்⋆ அடியிரண்டும்⋆
தர என் தமக்கருளால்⋆ தளரா மனம் தந்தனனே (32)

‡அலர்ந்த அம்புயத்திருந்து தேனருந்தி இன்னகல்⋆
அல்குலார் அசைந்தடைந்த நடை கொளாததுனமெனோ⋆
நலம் தவிர்ந்ததால் அதென்கொல் நாவின் வீறிழந்ததால்⋆
நா அணங்கு நாதர் தந்த நாவின் வீறிழந்ததென்⋆
சலம் தவிர்ந்து வாதுசெய்து சாடிமூண்ட மிண்டரைச்⋆
சரிவிலேன் எனக்கனைத்துரைத்த எதிராசர் தம்⋆
வலம் தரும் கை நாயனார் வளைக்கிசைந்த கீர்த்தியால்⋆
வாரி பாலதாம் அதென்று மாசில்வாழி வாழியே (33)

சடையன் திறலவர்கள்⋆ பெருஞானக் கடலதனை⋆
இடை அமிழாது கடக்கினும்⋆ ஈதளவென்றறியார்⋆
விடையுடன் ஏழன்றடர்த்தவன்⋆ மெய்யருள் பெற்றநல்லோர்⋆
அடைய அறிந்துரைக்க⋆ அவ்வடியோமும் அறிந்தனமே (34)

பா வளரும் தமிழ் மறையின் பயனே கொண்ட⋆
பாண் பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்⋆
காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற⋆
காரணனைக் கருத்துற நாம் கண்ட பின்பு⋆
கோவலனும் கோமானுமான அந்நாள்⋆
குரவை பிணை கோவியர்தம் குறிப்பே கொண்டு⋆
சேவலுடன் பிரியாத பெடை போல் சேர்ந்து⋆
தீவினையோர் தனிமையெலாம் தீர்ந்தோம் நாமே (35)

‡ஆதி மறை என வோங்கும் அரங்கத்துள்ளே⋆
அருள் ஆரும் கடலைக் கண்டவன் நம் பாணன்⋆
ஓதியதோரிரு நான்கும் இரண்டுமான⋆
ஒரு பத்தும் பற்றாக உணர்ந்துரைத்தோம்⋆
நீதி அறியாத நிலை அறிவார்க்கெல்லாம்⋆
நிலை இதுவேயென்று நிலை நாடி நின்றோம்⋆
வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்⋆
விதையாகும் இதுவென்று விளம்பினோமே (36)

‡காண்பனவும் உரைப்பனவுமற்றொன்றிக்⋆
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்⋆
பாண்பெருமாள் அருள் செய்த பாடல் பத்தும்⋆
பழமறையின் பொருள் என்று பரவுகின்றோம்⋆
வேண் பெரிய விரிதிரை நீர் வையத்துள்ளே⋆
வேதாந்த ஆரியென் என்றியம்ப நின்றோம்⋆
நாண் பெரியோம் அல்லோம் நாம் நன்றும் தீதும்⋆
நமக்குரைப்பார் உளரென்று நாடுவோமே (37)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ பரமபதசோபானம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
    பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
    வானேறப் போமளவும் வாழ்வு

வ்யாசீக்ருத்ய விமுக்தி சௌதபதவீ சோபாந சத்வர்ணநம்
    சாரீரார்ணவ ரத்நசாதமிகய: ப்ராசீகசத் சர்வச: ।
தச்மிந் திஷ்டதி வேங்கடேச்வர கவௌ ஸ்ரீ பாஷ்யகாரோபமே
    யம் கஞ்சித் புருஷம் க்யுபாசிதுமயோ மாகாமந: ச்வச்தி தே ॥

தச்மை நமோऽச்து குரவே தாத்ருச விபவாய வேங்கடேசாய ।
ப்ராவர்தயச்சநாநாம் பூமௌ பரமபத கர்ம்யசோபாநம் ॥

தேனேறு தாமரையாள் திருமார்பன் தன்
    திண் அருளால் அவனடியில் விவேகம் பெற்றிங்கு
ஊனேறு பவக்குழியை வெறுத்ததற்பின்
    ஊர் விரத்தியுடன் வினையின் திரளுக்கஞ்சிக்
கூனேறு பிறையிறையோன் சாபம் தீர்த்தான்
    குரை கழலே சரணடைந்து குரம்பை விட்டு
வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட
    வண்புகழ்த் தூப்புல் வள்ளல் அருள் பெற்றோமே

‡அடல் புள் அரசினும்⋆ அந்தணர் மாட்டினும்⋆ இன்னமுதக்
    கடற்பள்ளி தன்னினும்⋆ காவிரி உள்ளம் உகந்த பிரான்⋆
இடைப்பிள்ளை ஆகி உரைத்ததுரைக்கும்⋆ எதிவரனார்⋆
    மடைப்பள்ளி வந்த மணம்⋆ எங்கள் வார்த்தையுள் மன்னியதே (1)

கள்ள மனத்துடன்⋆ கண்டு முயன்ற கடு வினையால்⋆
    நள்ளிருள் ஆழியில்⋆ நற்சுவை ஐந்தென நாடிய ஓர்⋆

அள்ளலில் நாளும்⋆ விழுந்தழியாவகை ஆரணநூல்⋆
வள்ளல் வழங்கிய⋆ வான் படியான வழியிதுவே (2)

அருவுருவானவை அனைத்தும் அறிவாரேனும்⋆
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லாரேனும்⋆
தரும வழி அழியாமல் காப்பாரேனும் ⋆
தனி மறையின் தாத்பரியம் தருவாரேனும்⋆
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது⋆
இங்கே நாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்⋆
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்⋆
தேறாதார் திண் படியில் ஏறாதாரே (3)

மறுத்தார் திருவுடன்⋆ மார்பில் தரித்தவன் வாசகத்தை⋆
மறுத்தார் மயக்கமும்⋆ மற்றதனால் வந்த மாநரகும்⋆
நிறுத்தார் பவத்தில்⋆ நெடுநாள் உழன்றமை கண்டதனால்⋆
வெறுத்தாரணநெறியே⋆ வெள்கியோட விரைவர்களே (4)

வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும்⋆
மறித்தொருகால் எனையூழி சென்றால் அன்றோர்⋆
ஊன்பட்ட உடலாழி வினை ஒழுக்கில்⋆
ஒரு கரையும் காணாதே ஒழுகு மாறும்⋆
தேன் பட்ட விடம்போலத் தித்திக்கின்ற⋆
சிறுபயனே உறுபயன் என்றருந்துமாறும்⋆
தான் பட்டபடி இந்நேர் தானே கண்டு⋆
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே (5)

உலகத்துயர்ந்தவர்⋆ ஒன்றும் பயனில் உறும் துயரும்⋆
அலகில் படாத⋆ அப்போகம் கவர்ந்தெழும் அம்புயத்தோன்⋆
கலகத் தொழில் மது கைடபரால்⋆ படும் கட்டம் எண்ணில்⋆
பலகற்ற மெய்யடியார்⋆ படியார் இக்கடும் பவத்தே (6)

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க⋆
தார்வேந்தர் தொழவையம் ஆண்டார் மாண்டார்⋆

சந்திரனும் சூரியனும் வீயும் காலம்⋆
    தாரகையின் வடமுமற்றுத் தனிவானாளும்⋆
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும்⋆
    ஈரிரண்டு முகத்தானும் இல்லா அந்நாள்⋆
நம் திருமால் நிலை கண்டார் நாகமெல்லாம்⋆
    நரகென்று நற்பதமே நாடு வாரே (7)

துறவறமே துணிவார்⋆ துணுக்கற்ற இளம் துணிவோர்⋆
    உறவிலர் ஆதலின்⋆ நாம் உயர்ந்தாருடன் ஒன்றி நின்றோம்⋆
மறவழி மாற்றி⋆ எம் மையலைத் தீர்த்தவர் மன்னருளால்⋆
    கறவை உகந்த பிரான்⋆ கழல் சூடும் கருத்தினமே (8)

வந்தனபோல் வருவனவும் அனந்த மாகி⋆
    மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக்கு⋆
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்⋆
    இன்னமும் இப்பவக்குழிக்கே இழியா வண்ணம்⋆
வெந்ததொரு குழவியை நற்குமரனாக்கும்⋆
    வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்⋆
பந்தனமாம் அவை அனைத்தும் பாறுகைக்குப்⋆
    பழ மறையின் பரமநெறி பயிலுவாரே (9)

கருமாலையில் வரும்⋆ கட்டம் கழிக்கும் கருத்துடையார்⋆
    ஒருமால் பெருகும்⋆ உயோகில் முயன்றும் அதன்றியும் நம்⋆
திருமால் அடியிணை⋆ திண் சரணாகும் என வரித்தும்⋆
    தருமால் இனியவை தானேயெனத்⋆ தகவெண்ணுவரே (10)

முன் செய்த வினைத்திரளில் முளைத்ததன்றி⋆
    முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்⋆
தன்செய்ய திருவருளால் இசைவு பார்த்துத்⋆
    தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்⋆
பின் செய்த வினையில் நினைவொன்றா தொன்றும்⋆
    பிழை பொறுத்து வேறுளது விரகால் மாற்றும்⋆
என் செய்ய தாமரைக்கண் பெருமான் எண்ணம்⋆
    எண்ணாதார் எட்டிரண்டும் எண்ணாதாரே (11)

உறையிட்ட வாளென⋆ ஊனுள் உறையும் யோகியரை⋆
நறைமட்டொழிவற்ற⋆ நற்றுளவேந்திய நாயகன் தான்⋆
நிறை மட்டிலாத⋆ நெடும்பயன் காட்ட நினைந்து⋆ உடலச்
சிறை வெட்டிவிட்டு⋆ வழிப்படுத்தும் வகை செய்திடுமே (12)

முன்கருவி ஈரைந்தும் மனத்தில் கூட்டி⋆
முக்கியமாமருத்தில் அவைசேர்த்ததெல்லாம்⋆
நன்குணரும் உயிரினில் சேர்த்தைம்பூதத்தை⋆
நண்ணுவித்துத் தான் தன்பால் வைக்கும் நாதன்⋆
ஒன்பதுடன் வாசல் இரண்டுடைத்தாய் உள்ளே⋆
ஒரு கோடி துயர்விளைக்கும் உடம்பாய் ஒன்றும்⋆
வன் சிறையின் தலைவாசல் திறந்து நம்மை⋆
வானேற வழிப் படுத்த மனமுற்றானே (13)

தெருளார் பிரமபுரத்திறை சேர்ந்து⋆ இடர் தீர்ந்தவர் தாம்⋆
மருளார் பிரமபுரச் சிறை தீர்ந்தபின்⋆ வந்தெதிர் கொண்டு⋆
அருளால் அமரர் நடத்த⋆ இம்மாயை கடந்ததன் பின்⋆
சுருளார் பவநரகச் சுழல்⋆ ஆற்றின் சுழற்சியிலே (14)

விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர்⋆
மேனியல்லால் வில்லில்லை மீனவற்கு⋆
மொழியல்லால் அமுதில்லை என்று முன்னாள்⋆
முத்திவழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம்⋆
கழியல்லால் கடலில்லை என்பார் போலக்⋆
காரியமே காரணமென்றுரைப்பார் காட்டும்⋆
வழியல்லா வழியெல்லாம் கடந்தோம் மற்றும்⋆
வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே (15)

வன்பற்றுடன் மயல் பூண்டு⋆ மற்றோர் கதியால் இனநாள்⋆
என் பற்றது பெறும் தானமும்⋆ எத்தனை போதுளதாம்⋆
துன்பற்ற தன் துணிவால்⋆ துயர்தீர்க்கும் துழாய் முடியான்⋆
இன்புற்ற நல் வழியால்⋆ ஏற்று நற்பதம் எண்ணுவமே (16)

பண்டை இருவினை ஆற்றில் படிந்து⋆ பாரம்
    காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால்⋆
வண்டமருமலர் மாதர் மின்னாய் மன்ன⋆
    வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்⋆
கொண்டல் அருள் மழை பொழிய வந்த தொப்பாம்⋆
    குளிர்ந்து தெளிந்தமுதாய விரசை ஆற்றைக்⋆
கண்டணுகிக் கருத்தாலே கடந்து⋆ மீளாக்
    கரை கண்டோர் கதி எல்லாம் கதித்திட்டோமே (17)

பூவளரும் திருமாது புணர்ந்த⋆ நம் புண்ணியனார்⋆
    தாவளமான தனித்திவம் சேர்ந்து⋆ தமருடனே⋆
நா வளரும் பெரு நான்மறை⋆ ஓதிய கீதம் எல்லாம்⋆
    பா வளரும் தமிழ்ப்⋆ பல்லாண்டிசையுடன் பாடுவமே (18)

அடலுரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல⋆
    அழுக்கடைந்து கழுவிய நல் தரளம் போலக்⋆
கடலொழுகிக் கரை சேர்ந்த கலமே போலக்⋆
    காட்டுத்தீக்கலந்தொழிந்த களிறே போல⋆
மடல்கவருமயல்கழிந்த மாதர் போல⋆
    வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார் போல⋆
உடன்முதலா உயிர்மறைக்கும் மாயை நீங்கி⋆
    உயர்ந்த பதமேறி உணர்ந்தொன்றினோமே (19)

‡மண்ணுலகில் மயல் தீர்ந்து மனம் ததும்பி⋆
    மன்னாத பயன் இகந்து மாலேயன்றிக்⋆
கண் இலதென்றஞ்சி அவன்கழலே பூண்டு⋆
    கடும் சிறை போய்க் கரையேறும் கதியே சென்று⋆
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு⋆
    விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம் பாடிப்⋆
பண் உலகில் படியாத இசையால் பாடும்⋆
    பல்லாண்டே பல்லாண்டும் பாடு வோமே (20)

‡மாளாத வினை அனைத்தும் மாளநாம் போய்⋆
    வானேறி மலர்மகளார் அன்பு பூணும்⋆

தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு⋆
    தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடிக்⋆
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்⋆
    கிடையாத பேரின்பம் பெருக⋆ நாளும்
மீளாத பேரடிமைக்கன்பு பெற்றோம்⋆
    மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே (21)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ‖ பரமதபங்கம் ‖

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡எண்டள வம்புயத்துள்⋆ இலங்கும் அறுகோணமிசை⋆
வண்பணிலம் திகிரி⋆ வளைவில் வளைவாய் முசலம்⋆
திண்கையில் அங்குசம் சீர்⋆ திகழும் கதை செங்கமலம்⋆
எண்படை ஏந்தி நின்றான்⋆ எழிலாழி இறையவனே (1)

விடுநெறி அஞ்சி விடத் தொடக்கிய⋆
விதியர் அடைந்து தொழத் தழைத்தெழு⋆
விழியருள் தந்து விலக்கடிக்களை⋆
விரகில் இயம்பி விலக்கி வைத்தனர்⋆
கொடு வினை என்பதனைத் தினைத்தனை⋆
கொணர்தல் இகந்த குணத் தனத்தினர்⋆
குருகையில் வந்து கொழுப்படக்கிய⋆
குல பதி தந்த குறிப்பில் வைத்தனர்⋆
கடுநரகன்பு கழற்றி மற்றொரு⋆
கதி பெறும் அன்பில் எமைப் பொருத்தினர்⋆
கமலை உகந்த கடல் கிடைக்கடல்⋆
கருணை உயர்ந்த திடர்க்கொருக்கினர்⋆
படுமுதல் இன்றி வளர்த்த நற்கலை⋆
பல பல ஒன்ற எமக்குரைத்தனர்⋆
பழ மறையந்தி நடைக்கிடைச்சுவர்⋆
பரமதம் என்றதிடித்த பத்தரே (2)

போமுரைக்கும் பொருள் யாமறியோம்⋆ பொருளார் மறையில்⋆
தாம் உரைக்கின்றன⋆ தாமே அறியும் தரமுடையார்⋆
ஆம் உரைக்கென்றிவை ஆய்ந்தெடுத்து⋆ ஆரண நூல் வழியே⋆
நாம் உரைக்கும் வகை⋆ நல்லருள் ஏந்தி நவின்றனரே (3)

சித்தும் அசித்தும் இறையுமெனத்⋆ தெளிவுற்று நின்ற⋆
தத்துவமூன்றும்⋆ தனித்தனி காட்டும் தனி மறையால்⋆
முத்தி வழிக்கிது மூலமெனத்⋆ துணிவார்களையும்⋆
கத்தி மயக்கும்⋆ கதகரை நாம் கடிகின்றனமே (4)

முத்தின் வடங்கள் என⋆ முகுந்தன் புனை மூவகையாம்⋆
சித்தில் அருஞ்சுருதிச்⋆ செவ்வை மாறிய சிந்தைகளால்⋆
பத்தில் இரண்டு மெய்க்கப்⋆ பகட்டும் பரவாதியர் தம்⋆
கத்தில் விழுந்தடைந்த⋆ அவ்வழுக்கின்று கழற்றினமே (5)

நாக்கியலும் வகை⋆ நம்மை அளித்தவர் நல்லருளால்⋆
பாக்கியம் ஏந்திப்⋆ பரனடியார் திறம் பார்த்ததற்பின்⋆
தாக்கியர் தங்கள் தலைமிசைத் தாக்கித்⋆ தனிமறை தான்⋆
போக்கியம் என்றதனில்⋆ பொய்ம்மதங்களைப் போக்குவமே (6)

தீவகை மாற்றி அன்றோர்⋆ தேரில் ஆரணம் பாடிய⋆ நம்
தேவகிசீர் மகனார்⋆ திறம்பா அருள் சூடிய நாம்⋆
மூவகையாம் அறியாத்⋆ தத்துவத்தின் முகம் அறிவார்⋆
நாவகையே நடத்தும்⋆ நடை பார்த்து நடந்தனமே (7)

வேலைப் புறமகம் காண்பது போல்⋆ வேத நன்னெறிசேர்⋆
நூலைப் புறமகம் காண்டலில்⋆ நுண் அறிவின்றி நின்றீர்⋆
மாலைப்பெற வழி காட்டிய⋆ தேசிகர் வாசகமே⋆
ஓலைப் புறத்தில் எழுதுகின்றோம்⋆ உள் எழுதுமினே (8)

சிறை நிலையாம் பவத்தில்⋆ சிறுதேன் இன்பம் உண்டுழல்வார்⋆
மறை நிலை கண்டறியா⋆ மயல் மாற்றிய மன்னருளால்⋆
துறை நிலை பாரமெனத்⋆ துளங்காவமுதக் கடலாம்⋆
இறை நிலை யாம் உரைத்தோம்⋆ எம் குருக்கள் இயம்பினவே (9)

வெறியார் துளவுடை⋆ வித்தகன் தன்மையின் மெய்யறிவார்⋆
குறியார் நெடியவர் என்று⋆ ஒரு குற்றம் பிறர்க்குரையார்⋆
அறியார் திறத்தில் அருள் புரிந்து⋆ ஆரண நன்னெறியால்⋆
சிறியார் வழிகள் அழிப்பதும்⋆ தீங்கு கழிப்பதற்கே (10)

மிண்டுரைக்க விரகு தரும் தருக்கம் கொண்டே⋆
வேண்டுங்கால் வேண்டுவதே விளம்புகின்றார்⋆
கண்டதற்கு விபரீதம் கத்துகின்றார்⋆
காணாத குறை மறையில் காட்ட நிற்பார்⋆
பண்டொருத்தன் கண்டுரைத்தேன் நானே என்னப்⋆
பலவகையில் உபாதிகளால் படிந்து வீழ்வார்⋆
கொண்டல் ஒக்கும் திருமேனி மாயக்கூத்தன்⋆
குரை கழல்சேர் விதி வகையில் கூடாதாரே (11)

கண்டது மெய்யெனில்⋆ காணுமறையில் அறிவு கண்டோம்⋆
கண்டதலாததிலதெனில்⋆ கண்டிலம் குற்றமிதில்⋆
கண்டது போல் மறை காட்டுவதும்⋆ கண்டதொத்ததனால்⋆
உண்டது கேட்கும்⋆ உலோகாயதர் என்றுமீறுவதே (12)

கண்டதனால் காணாததனுமிக்கின்றார்⋆
கண்டொருத்தன் உரைத்ததனைக் கவருகின்றார்⋆
உண்டுபசி கெடுமென்றே உணர்ந்துண்கின்றார்⋆
ஒன்றாலே ஒன்றைத் தாம் சதிக்கின்றார்⋆
பண்டுமுலை உண்டதனால் முலை உண்கின்றார்⋆
பார்க்கின்றார் பலவல்லாத் தன்மை மற்றும்⋆
கண்டு மதி கெட்ட நிலை காணகில்லார்⋆
காணாததிலதென்று கலங்குவாரே (13)

காணாதிலதெனும் கல்வியினாரைக்⋆ கடிந்ததற்பின்⋆
கோணார் குதர்க்கங்கள் கொண்டே⋆ குழப்பும் பவுத்தர்களில்⋆
நாணாதனைத்தும் இலதென்றும்⋆ நால்வகை அன்றிதென்றும்⋆
வாணாள் அறுக்கின்ற⋆ மத்திமத்தான் வழி மாற்றுவமே (14)

மானமிலை மேயமிலை என்றும் மற்றோர்⋆
வாதநெறி இலையென்றும் வாது பூண்ட⋆
தானுமிலை தன்னுரையும் பொருளும் இல்லை⋆
தத்துவத்தின் உணர்த்தி சயம் இல்லை என்றும்⋆
வானவரும் மானவரும் மனமும் வெள்க⋆
வளம் பேசுமதிகேடன் மத்திமத்தான்⋆
தேனநெறி கொண்டனைத்தும் திருடா வண்ணம்⋆
செழுமதி போல் எழுமதியால் சேமித்தோமே (15)

முற்றும் சகத்திலதென்றே⋆ பகட்டிய முட்டரை நாம்⋆
சுற்றும் துறந்து⋆ துறையில் நின்றே துகளாக்கிய பின்⋆
மற்றொன்றிலது மதி பல உண்டென்று⋆ வஞ்சனையால்⋆
சற்றும் துறந்த⋆ யோகாசாரனைச் சதிக்கின்றனமே (16)

உளக்கதியை நாம் உள்ளி உள்ளந்தேறி⋆
உலகத்தார் உகந்திசைய உலகுண்டென்றோம்⋆
இளக்க அரிதாகிய நல் தருக்கம் சேர்ந்த⋆
எழில் மறையில் ஈசனுடன் எம்மைக் கண்டோம்⋆
விளக்கு நிரை போல் மதிகள் வேறாய்⋆ வேறொன்று
அறியாதே விளங்கும் என விளம்புகின்ற⋆
களக்கருத்தன் கண்ணிரண்டும் அழித்தோம்⋆ நாணாக்
காகம்போல் திரிந்தவன் என் கதறுமாறே (17)

பொருள் ஒன்றிலதென்று⋆
போதமொன்றும் கொண்ட பொய்யரை நாம்⋆
தெருள் கொண்டு தீர்த்த பின்⋆
காணவொண்ணாப் பொருள் தேடுகின்ற⋆
மருள் கொண்ட சூதுரைக்கும்⋆
சௌத்திராந்திகன் வண்ணிக்கை நாம்⋆
இருள் கொண்ட பாழுங்கிணறென்று⋆
இகழ்ந்தோட இயும்புவமே (18)

நிலையில்லாப் பொருள் மதியை விளைத்துத் தான்சேர்⋆
நிறங்கொடுத்துத் தான் அழியும் தன்னால் வந்த⋆

நிலையில்லா மதி தன்னில் நிறத்தைக் காணும்⋆
இது காணும் பொருள் காண்கை என்ற நீசன்⋆
முலையில்லாத் தாய் கொடுத்த முலைப்பால் உண்ணும்⋆
முகமில்லா மொழியெனவே மொழிந்த வார்த்தை⋆
தலையில்லாத் தாளூரும் கணக்காய் நின்ற⋆
கட்டளை நாம் கண்டின்று காட்டினோமே (19)

காண்கின்றவன் இலை⋆ காட்சியும் கண்டதும் உண்டவை தாம்⋆
ஏண்கொண்டன அன்று⋆ இவற்றில் குணமு நிலையுமிலை⋆
சேண் கொண்ட சந்ததியால்⋆ சேர்ந்தும் ஒன்றென நிற்கும் என்ற⋆
கோண்கொண்ட கோளூரை⋆ வைபாடிகன் குறை கூறுவமே (20)

கும்பிடுவார் ஆரென்று தேடுகின்றார்⋆
குணங்களையும் தங்களுக்குக் கூறுகின்றார்⋆
தம் படியைத் தமர்க்குரைத்துப் படிவிக்கின்றார்⋆
தமக்கினிமேல் வீடென்று சாதிக்கின்றார்⋆
தம் புடவை உணல் குறித்து நெடிதெண்கின்றார்⋆
சந்ததிக்குத் தவம் பலிக்கத் தாம் போகின்றார்⋆
செம்படவர் செய்கின்ற சிற்றினிப்பைச்⋆
சேவகப் பற்றுடனே நாம் செகுத்திட்டோமே (21)

வேதங்கள் மௌலி விளங்க⋆ வியாசன் விரித்த நன்நூல்⋆
பாதங்களான பதினாறில்⋆ ஈசன் படி மறைத்துப்⋆
பேதங்கள் இல்லையென்று⋆ ஓர் பிரமப்பிச்சியம்புகின்ற⋆
போதங்கழிந்தவனைப்⋆ புத்தர் மாட்டுடன் பூட்டுவமே (22)

பிரிவில்லா இருள் ஒன்று பிணக்கொன்றில்லாப்⋆
பெரு வெயிலை மறைத்துலகம் காட்டுமென்ன⋆
அறிவில்லா அறிவொன்றை அவித்தை மூடி⋆
அகம்புறமென்றிவை அனைத்தும் அமைக்கும் என்பார்⋆
செறிவில்லாப் புத்தருடன் சேர்ந்து கெட்டார்⋆
சீவனையும் ஈசனையும் சிதைக்கப் பார்த்தார்⋆
நெறியில்லா நேர்வழியும் தானே யானான்⋆
நெடுமாலை நாம் அடைந்து நிலை பெற்றோமே (23)

சோதனை விட்டொருத்தன் சொல⋆ மெய்யெனச் சோகதரைச்⋆
 சேதனை அற்றவர் என்று⋆ சிதைத்த பின் சீவர்கட்கோர்⋆
வேதனை செய்கை வெறுமறமென்று⋆ விளம்பிவைத்தே⋆
 மா தவம் என்று மயிர் பறிப்பார்⋆ மயல் மாற்றுவமே (24)

சொன்னார் தாம் சொன்னதெலாம் துறவோம் என்றும்⋆
 சொன்னதுவே சொன்னதலதாகும் என்றும்⋆
தின்னாதும் தின்னுமதும் ஏகம் என்றும்⋆
 சிறியனுமாம் பெரியனுமாம் சீவன் என்றும்⋆
மன்னாதுமன்னுமதும் ஒன்றே என்றும்⋆
 வையம் எலாம் விழுகின்றதென்றும் என்றும்⋆
தென்னாடும் வடநாடும் சிரிக்கப் பேசும்⋆
 சினநெறியார் சினம் எல்லாம் சிதைத்திட்டோமே (25)

ஏகாந்திகம் ஒன்றும் இல்லை என்று⋆ ஆசையைத் தாம் உடுப்பார்⋆
 சோகாந்தமாகத் துறப்புண்ட பின்⋆ தொழில் வைதிகம் என்று⋆
ஏகாந்திகள் சொன்ன⋆ ஈசன் படியில் விகற்பம் எண்ணும்⋆
 லோகாந்த வீணர் தம்⋆ வேதாந்த வார்த்தை விலக்குவமே (26)

ஒன்றெனவும் பலவெனவும் தோற்றுகின்ற⋆
 உலகெல்லாம் ஒருபிரமம் தானே ஆக்கி⋆
நன்றெனவும் தீதெனவும் பிரிந்தவெல்லாம்⋆
 நன்றன்று தீதன்றே என நவின்றார்⋆
கன்றும் அலர் பசுவும் அலராகி நின்றே⋆
 கன்றாகிப் பசுவாகி நின்ற வண்ணம்⋆
இன்றுமறை மாட்டுக்கோர் இடையனான⋆
 ஏகாந்தி இசைந்திட நாம் இயம்பினோமே (27)

சாயா மறைகளில்⋆ சத்தம் தெளிந்திடச் சாற்றுதலால்⋆
 தூயார் இவரென்று⋆ தோன்ற நின்றே பல சூதுகளால்⋆
மாயா மதமும் மறுசினவாதும்⋆ பவுத்தமும் சேர்⋆
 வையாகரணர் சொல்லும்⋆ மறு மாற்றங்கள் மாற்றுவமே (28)

கலக்கத்தில் கலங்கி வரும் காணிக்கெல்லாம்⋆
கண்ணாறு சதிர வழி கட்டுவார் போல்⋆
உலகத்தில் மறைசேர்ந்த உரைகள் தம்மால்⋆
ஒரு பிழையும் சேராமல் உபகரித்தார்⋆
பலகத்தும் பவுத்தர் முதலான பண்டைப்⋆
பகற்கள்ளர் பகட்டழிக்கப் பரவும் பொய்யாம்⋆
சில கற்றுச் சித்தாந்தம் அறியகில்லாச்⋆
சிறுவர் இனி மயங்காமல் சேமித்தோமே (29)

கண்டதலாதன கட்டுதலால்⋆ கண்டவிட்டதனால்⋆
பண்டுளதான மறைக்குப்⋆ பழமையை மாற்றுதலால்⋆
கொண்டதும் ஈசனைக்⋆ கொள்ளாவகை என்று கூறுதலால்⋆
கண்ட கராய் நின்ற⋆ காணாதர் வாதம் கழற்றுவமே (30)

ஆகமத்தை அனுமானம் என்கையாலும்⋆
அழியாத மறை அழிக்க நினைத்தலாலும்⋆
போகமற்றொர் உபலம் போல் கிடக்கை தானே⋆
புண்ணியர்க்கு வீடென்று புணர்த்தலாலும்⋆
மாகம் ஒத்த மணிவண்ணன் படியை மாற்றி⋆
மற்றவனுக்கொரு படியை வகுத்தலாலும்⋆
காகம் ஒத்த காணாதன் கண்ணை வாங்கிக்⋆
காக்கைக்காரென்றலற்றக் காட்டினோமே (31)

கோதம நூல்களைக்⋆ குற்றமிலா வகை கூட்டலுமாம்⋆
கோது கழித்தொரு கூற்றில்⋆ குணங்களைக் கொள்ளவுமாம்⋆
யாதும் இகந்து⋆ ஒரு நீதியை யாமே வகுக்கவுமாம்⋆
வேதியர் நன்னய வித்தரம் என்பது⋆ மெய்யுளதே (32)

நான்மறைக்குத் துணையாக நல்லோர் எண்ணும்⋆
நாலிரண்டில் ஒன்றான நயநூல் தன்னில்⋆
கூன் மறைத்தல் கோதுலது கழித்தல் மற்றோர்⋆
கோணாத கோதில் வழி வகுத்தல் அன்றி⋆
ஊன்மறைத்த உயிரொளி போல் ஒத்த தொவ்வாது⋆
உயிரில்லாக் காணாதம் உரைத்த எல்லாம்⋆

வான்மறைக்க மடி கோலும் வண்ணம் என்றோம்⋆
மற்றிதற்கார் மறுமாற்றம் பேசுவாரே (33)

ஈசனுமற்றணங்கும் இலதென்று⋆ எழில் நான்மறையில்⋆
பேசிய நல்வினையால்⋆ பெரும் பாழுக்கு நீரிறைக்கும்⋆
நீசரை நீதிகளால்⋆ நிகமாந்தத்தின் நூல் வழியே⋆
மாசில் மனம் கொடுத்தும்⋆ மறுமாற்றங்கள் மாற்றுவமே (34)

கனை கடல் போல் ஒரு நீராம் சூத்திரத்தைக்⋆
கவந்தனையும் இராகுவையும் போலக் கண்டு⋆
நினைவுடனே நிலைத் தருமம் இகந்து நிற்கும்⋆
நீசர் நிலை நிலை நாட வண்ணம் எண்ணி⋆
வினை பரவு சைமினியார் வேத நூலை⋆
வேதாந்த நூலுடனே விரகால் கோத்த⋆
முனையுடைய முழுமதி நம் முனிவர் சொன்ன⋆
மொழிவழியே வழி என்று முயன்றிட்டோமே (35)

முக்குணமாய் நின்ற⋆ மூலப் பிரகிருதிக்கழியா⋆
அக்குணமற்ற அருத்துணை⋆ மற்றதற்கீசனிலை⋆
இக்கணனைப்படி ஐயைந்தும் எண்ணில்⋆ முன்முத்தி என்னும்⋆
பக்கணவீணர்⋆ பழம் பகட்டைப் பழுதாக்குவமே (36)

ஈசன் இலன் என்பதனால் என்றும் சீவர்⋆
எங்குமுளர் இலர் உணர்வை என்றவத்தால்⋆
பாசமெனும் பிரகிருதி தன்னால் என்றும்⋆
பலமும் இலை வீடுமிலை என்னும் பண்பால்⋆
காசினி நீர் முதலான காரியங்கள்⋆
கச்சபத்தின் கால்கை போல் என்னும் கத்தால்⋆
நாசம் அலதிலை காணும் ஞாலத்துள்ளீர்⋆
நாம் இசையாச் சாங்கியத்தை நாடுவார்க்கே (37)

தாவிப் புவனங்கள்⋆ தாளிணை சூட்டிய தந்தை உந்திப்⋆
பூவில் பிறக்கினும்⋆ பூதங்கள் எல்லாம் புணர்த்திடினும்⋆

நாவில் பிரிவின்றி⋆ நாமங்கை வாழினும் நான்மறையில்⋆
பாவித்ததன்றி உரைப்பது⋆ பாறும் பதர்த்திரளே (38)

காரணனா உலகளிக்கும் கண்ணன் தேசைக்⋆
கண்ணாடி நிழல் போலக் காண்கையாலும்⋆
தாரணையின் முடிவான சமாதி தன்னைத்⋆
தனக்கேற்றும் விளக்கென்று தனிக் கையாலும்⋆
காரணமாம் அது தனக்குப் பயனாம் சீவன்⋆
கைவலிய நிலையென்று கணிக்கையாலும்⋆
கோரணியின் கோலமெனக் குறிக்கலாகும்⋆
கோகனகத்தயன் கூறும் சமயக் கூறே (39)

சாது சனங்கள் எலாம்⋆ சச்சை என்னும் சலம் புணர்த்தார்⋆
கோதம சாபம் ஒன்றால்⋆ கொடுங்கோலங்கள் கொண்டுலகில்⋆
பூத பதிக்கடியார் என நின்று⋆ அவன் பொய் உரையால்⋆
வேதம் அகற்றி நிற்பார்⋆ விகற்பங்கள் விலக்குவமே (40)

மாதவனே பரன் என்று வையம் காண⋆
மழுவேந்தி மயல்தீர்க்க வல்ல தேவன்⋆
கைதவம் ஒன்றுகந்தவரைக் கடிய சாபம்⋆
கதுவியதால் அதன் பலத்தைக் கருதிப் பண்டை⋆
வேத நெறி அணுகாது விலங்கு தாவி⋆
வேறாக விரித்துரைத்த விகற்பம் எல்லாம்⋆
ஓதுவது குத்திரத்துக்கென்றுரைத்தான்⋆
ஓதாதே ஓதுவிக்கும் ஒருவன் தானே (41)

கந்தமலர் மகள் மின்னும் காரார் மேனிக்⋆
கருணைமுகில் கண்ட கண்கள் மயிலாய் ஆலும்⋆
அந்தமில் பேரின்பத்தில் அடியரோடே⋆
அடிமை என்னும் பேரமுதம் அருந்திவாழத்⋆
தந்தமதி இழந்தரனார் சமயம்புக்குத்⋆
தழல் வழிபோய்த் தடுமாறித் தளர்ந்து வீழ்ந்தீர்⋆
சந்தநெறி நேரறிவார் சரணம் சேர்ந்து⋆
சங்கேதத்தவமுனிவீர் தவிர்மினீரே (42)

யாதுமிலாத அன்றும்⋆ யவர்க்கும் நன்றியெண்ணிய⋆ நம்
மாதவனார் வதனத்தமுதுண்ணும்⋆ வலம்புரி போல்⋆
வாதுகளால் அழியா மறை⋆ மௌலியின் வான் பொருளே⋆
ஓதிய பஞ்சராத்திரம் உகவாரை⋆ ஒழுக்குவமே (43)

பூவலரும் திருவுந்திப் புனிதன் வையம்⋆
பொன்னடியால் அளந்திருவர் போற்ற நின்ற⋆
நாவலரும் கலைகளெலாம் தன்னை நாட⋆
நாடாத நல்நிதியா நணுகு நாதன்⋆
கோவலனாய் நிரையளித்த நிறை போல் வேதம்⋆
கோவாகக் கோமானாய் அதன் பால் சேர்த்துக்⋆
காவலிது நல் உயிருக்கென்று காட்டும்⋆
கார்த்தயுகக் கதி கண்டோம் கரை கண்டோமே (44)

நமக்கார் துணையென⋆ நாம் என்றருள் தருநாரணனார்⋆
உமக்காறிவை என்றடியிணை காட்ட⋆ உணர்ந்தடையும்⋆
எமக்கோர் பரம் இனியில்லாது⋆ இருவினை மாற்றுதலில்⋆
தமக்கே பரமென்று⋆ தாமுயலும் தரம் சாற்றுவமே (45)

பலத்தில் ஒரு துவக்கற்ற பதவி காட்டிப்⋆
பல்லுயிரும் தடுமாறப் பண்ணுகின்ற⋆
கலித்திரளின் கடும் கழுதைக் கத்து மாற்றிக்⋆
கண்ணுடையார் கண்டுரைத்த கதியைச் சொன்னோம்⋆
வலத்திலகு மறுவொன்றால் மறுவொன்றில்லா⋆
மாமணியாய் மலர்மாதர் ஒளியாம் அந்நல்⋆
நலத்தில் ஒரு நிகரில்லா நாதன் பாதம்⋆
நல்வழியாம் அல்வழக்கார் நடத்துவாரே (46)

எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும்⋆
இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும்⋆
சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும்⋆
துணிவரிதாய்த் துணை துறக்கும் சுகரத்தாலும்⋆
கல்லார்க்கும் கற்றார் சொல் கவர்தலாலும்⋆
கண்ணன் உரை முடிசூடி முடித்தலாலும்⋆

நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம்⋆
நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே (47)

பண்டை மறைக்குப்⋆ பகையென நின்ற பரமதங்கள்⋆
கொண்டவர் கொள்ளும்⋆ பயன் ஒன்றிலதெனும் கூர்மதியால்⋆
வண் துவரைக்கரசான⋆ நம் மாயனை வானுலகில்⋆
கண்டு களிப்பதெனும்⋆ காதல் ஒன்றைக் கருதுவமே (48)

கலந் திகழும் போகங்கள் கண்டு வெள்கிக்⋆
காரியமும் காரணமும் கடந்து நாம் போய்க்⋆
குலந்திகழும் குருக்கள் அடிசூடி மன்னும்⋆
குற்றேவல் அடியவர் தம் குழாங்கள் கூடி⋆
வலம் திகழும் திருமகளும் மற்றிடத்தே⋆
மன்னிய மண்மகளாரும் நீளையாரும்⋆
நலந் திகழ வீற்றிருந்த நாதன் பாதம்⋆
நமக்கிதுவே முடியென்ன நண்ணினோமே (49)

மானங்கள் இன்றி வகுத்துரைக்கின்ற⋆ மதங்கள் எலாம்⋆
தானங்கள் அன்று⋆ தரும நெறிக்கென்று சாற்றிய பின்⋆
வானம் கவர்ந்து⋆ மறைமுடி சூடிய மா தவத்தோர்⋆
ஞானங்கள் ஒன்ற நடக்கின்ற⋆ நல்வழி நாடுவமே (50)

தன் அடிக்கீழ் உலகேழையும் வைத்த⋆ தனித்திருமால்⋆
பொன்னடிக்கேற்கின்ற⋆ புண்ணியர் கேண்மின் புகலறிவார்⋆
முன்னடி பார்த்து முயலுதலால்⋆ அவர் சாயை எனப்⋆
பின்னடி பார்த்து நடந்து⋆ பெரும் பதம் ஏறுவமே (51)

வையமெலாம் இருள் நீக்கு மணி விளக்காய்⋆
மன்னிய நான்மறை மௌலி மதியே கொண்டு⋆
மெய்யலது விளம்பாத வியாசன் காட்டும்⋆
விலக்கில்லா நல்வழியே விரைந்து செல்வீர்⋆
ஐயமற அறுசமயக் குறும்பறுத்தோம்⋆
அணியரங்கர் அடியவர்க்கே அடிமை செய்தோம்⋆

மைய கடல் வட்டத்துள் மற்றும் தோற்றும்⋆
வாதியர் தம் வாய்ப்பகட்டை மாற்றினோமே (52)

‡கோதவம் ஒன்றில்லாத தகவே கொண்ட⋆
கொண்டலென வந்துலகில் ஐவர்க்கன்றோர்⋆
தூதுவனாய் ஒரு கோடி மறைகள் எல்லாம்⋆
தொடர்ந்தோடத் தனியோடித் துயரம் தீர்த்த⋆
மாதவனார் வடகொங்கில் வானியாற்றின்⋆
வண்ணிகை நன்னடம் கண்டு மகிழ்ந்து வாழும்
போது⋆ இவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள்⋆
புணராத பரம தப்போர் பூரித்தோமே (53)

‡திகிரி மழுவுயர் குந்தம் தண்டங்குசம் பொறி⋆
சிதறு சதமுக அங்கி வாள்வேல் அமர்ந்ததும்⋆
தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்வடி⋆
செழியகதை முசலம் திசூலம் திகழ்ந்ததும்⋆
அகில உலகுகள் கண்டையாய் ஓர் அலங்கலில்⋆
அடைய அடைவில் இலங்க ஆசின்றி நின்றதும்⋆
அணியும் அருகணையும் அரவாம் என்ன நின்று⋆ அடி
அடையும் அடியரை அன்பினால் அஞ்சல் என்பதும்⋆
மகிழும் அமரர் கணங்கள் வானம் கவர்ந்திட⋆
மலியும் அசுரர் புணர்த்த மாயம் துரந்ததும்⋆
வளரும் அணி மணிமின்ன வானந்தி கொண்டிட⋆
மறைமுறை முறைவணங்க மாறின்றி வென்றதும்⋆
சிகி இரவி மதியம் உமிழ் தேசுந்த எண் திசைத்⋆
திணிமருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும்⋆
திகழ் அரவணை அரங்கர் தேசென்ன மன்னிய⋆
திரிசுதரிசனர் செய்ய ஈர் எண் புயங்களே (54)

‖ *சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்* ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ மெய்விரதமான்மியம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡வாழி அருளாளர்⋆ வாழி அணி அத்திகிரி⋆
வாழி எதிராசன் வாசகத்தோர்⋆-வாழி
சரணாகதி என்னும்⋆ சார்வுடன் மற்றொன்றை⋆
அரணாகக் கொள்ளாதார் அன்பு (1)

எண்டிசையும் கடலேழு மலைகள் ஏழும்⋆
ஈரேழு வையகமும் படைத்திலங்கும்⋆
புண்டரிகத்தயன் புணர்த்த பெரிய வேள்விப்⋆
புனித நறும் போக்கியத்தை உவந்து வந்து⋆
தொண்டையெனுமண்டலத்தினடுவில் பாரில்⋆
தூநிலமெய்விரதத்துத் தோன்றி நின்ற⋆
கொண்டல் அருள் குணமே நாம் கூறுகின்றோம்⋆
கூர்மதியீர்! குறியாகக் கொண்மினீரே (2)

வம்மின் புலவீர்! அருளாளப் பெருமாள் என்றும்⋆ அருளாழி
அம்மான் என்றும்⋆ திருமகளைப் பெற்றும் என்
நெஞ்சம் கோயில் கொண்ட⋆
பேரருளாளர் என்றும்⋆ வியப்பா விருதூதும் படி கரை புரண்ட⋆
கருணைக்கடலை⋆ எவ்வண்ணம் பேசுவீர்⋆ ஈதென்ன பாங்கே (3)

ஒன்றே புகலென்று⋆ உணர்ந்தவர் காட்டத் திருவருளால்⋆
அன்றே அடைக்கலம் கொண்ட⋆ நம்மத்திகிரித் திருமால்⋆
இன்றே இசையின் இணையடி சேர்ப்பர்⋆ இனிப்பிறவோம்⋆
நன்றே வருவதெலாம்⋆ நமக்கு பரமொன்றிலதே (4)

வம்பவிழ் போதமர் மாதர் உகந்த⋆ அம் மாநிதியைத்⋆
தன்பலமே கொண்டு⋆ காணக்கருதிய தாமரையோன்⋆
முன்பல குற்றத்து⋆ வல்வினை மொய்க்க முகிழ் மதியாய்⋆
அம்புலி வேண்டிய⋆ பாலனைப் போல அழுதனனே (5)

அடங்காக் கரணங்கள்⋆ ஐந்துடன் ஆறும் அடக்கி முன்னம்⋆
நெடுங்காலம் இந்நிலமே⋆ நிலையாப் பூண்டு நீடுறைவான்⋆
சடங்கால் பெரிய தவங்கள் செய்தேன்⋆ என்ன தன்மை இதென்று⋆
இடம் காத்திருந்த⋆ திசைமுகன் தன்னை இகழ்ந்தனனே (6)

விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மையாலும்⋆
வேதங்கள் ஈரிரண்டும் விரித்தலாலும்⋆
கண்ணனை நான் கருத்துறவே காண்பன் என்னக்⋆
காணாமல் விலக்கிய தன் வினையைக் காணா⋆
எண்ணிய நல் புவனங்கள் ஏழுமாறும்⋆
இருமூன்று தீவமும் எட்டிடமும் விட்டுப்⋆
பண்ணிய நல் விரதமெலாம் பலிக்கும் என்று⋆
பாரதத்தில் பங்கயத்தோன் படிந்திட்டானே (7)

எத்திசை நிலனும் எய்தி⋆ அருந்தவம் செய்த அந்நாள்⋆
சத்தியவிரதம் செல்வாய் என்ற⋆ ஓருரையின் சார்வால்⋆
அத்திசைச் சென்றழைத்து⋆ அங்கமரர் இல்லெடுப்பான் தன்னை⋆
உத்தரவேதிசெய் என்று⋆ உரை அணங்கிறை உரைத்தான் (8)

உத்தம அமர்த்தலம் அமைத்ததோர்
எழில் தனுவின்⋆ உய்த்த கணையால்⋆
அத்திர அரக்கன் முடிபத்தும் ஒரு
கொத்தென⋆ உதிர்த்த திறலோன்⋆
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய்
வைத்ததுணும்⋆ அத்தன் இடமாம்⋆
அத்திகிரி பத்தர் வினை தொத்தற
அறுக்கும்⋆ அணி அத்திகிரியே (9)

திண்மணிகள் பொன்னுடனே சேர்தலாலும்⋆
    சிதையாத நூல் வழியில் சேர்த்தியாலும்⋆
வண்மை எழும் ஈரிரண்டு வண்ணத்தாலும்⋆
    வானவர்க்கும் வியப்பான வகுப்பினாலும்⋆
ஒண்மையுடை வாசி விளி ஓசையாலும்⋆
    ஒருகாலும் அழியாத அழகினாலும்⋆
மண்மகளார்க் கலங்காரம் என்ன⋆ மன்னும்
    மதிட்கச்சி நகர் கண்டு மகிழ்ந்திட்டானே (10)

காமங்கள் பலகொண்ட வேதம் கொண்டு⋆
    கைதவமே செய்வார்க்குக் காணகில்லாப்⋆
பூமங்கை கேள்வனை நான் கண்டு போற்றப்⋆
    புண்ணியத்தில் நிகரில்லா விரதம் பூண்டேன்⋆
சாமங்கள் கழிவதன் முன் சடக்கெனப்போய்த்⋆
    தன்னாற்றில் தனியிருந்து தவம் செய்கின்ற⋆
நாமங்கை வந்திட நீ அழைப்பாய் என்று⋆
    நன்மகனை நான்முகன் தான் நவின்றிட்டானே (11)

அன்னவடிவாள் அசையும் அன்னநடையாள்
    உயரும் அன்ன அரசேறி வருவாள்⋆
    அத்தன் அயன் அத்தனயன் உத்திதனை
    அத்திதென உத்திபுரியாள்⋆
நல் நடைவிடா நடம் இதென்ன நடவா
    நடுவு நண்ணு குவடேறி இழிவாள்⋆
    நற்பதிகள் அற்பதிகள் கற்புரள
    அற்புத மருள் கதியினால்⋆
கல் நடை விடா இடமில் உன்னதி
    சிறா விகட மன்னுகிரி கூடமிடியக்⋆
    கட்டவிடை இற்றுவிழ முற்றும்
    விழி உற்றடைய விட்டருகுற⋆
அன்ன நயசீர் அயனிதென்னென
    விழா அமரர் மன்னு பதியேறி மகிழ⋆

அச்சுதன் அணைத்தனுவில் அத்திசை
வரத்தகைய அற்றணுகினாள் (12)

அன்று நயந்த⋆ அயமேத மா வேள்வி⋆
பொன்ற உரை அணங்கு பூம்புனலாய்க்⋆ கன்றிவர
ஆதி அயனுக்கு⋆ அருள் செய்தணையானான்⋆
தாதை அரவணையான் தான் (13)

தரணியில் மன்னி அயனார்⋆ தனித்தவம் காத்தபிரான்⋆
கருணை எனும் கடலாடித்⋆ திருவணை கண்டதற்பின்⋆
திரள் நரகெண்ணிய⋆ சித்திரகுத்தன் தெரித்து வைத்த⋆
சுருணையில் ஏறிய⋆ சூழ்வினை முற்றும் துறந்தனமே (14)

சுகலேசம் எண்ணிய⋆ சூழ்வினை தீர்க்கத் துணிந்தயனார்⋆
அகலாத அன்புடன் கொண்ட அயமேத வேதியின் மேல்⋆
புகலோங்கு பொன்மலையன்ன ஓர்⋆ புண்ணிய கோடியுடன்⋆
பகலோன் பகல் விளக்காகப்⋆ பரஞ்சுடர் தோன்றியதே (15)

பெருமையுடை அத்திகிரிப் பெருமாள்வந்தார்⋆
பேராத அருள் பொழியும் பெருமாள் வந்தார்⋆
அருமறையின் உச்சிதனில் நின்றார் வந்தார்⋆
அங்கமுடன் அவையாகும் அரியோர் வந்தார்⋆
திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்⋆
திருவருளால் செழுங்கலைகள் தந்தார் வந்தார்⋆
மருவலர்க்கு மயக்குரைக்கும் மாயோர் வந்தார்⋆
வானேற வழி தந்தார் வந்தார் தாமே (16)

அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்⋆
ஆனைபரி தேரின்மேல் அழகர் வந்தார்⋆
கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்⋆
கருத வரம் தரு தெய்வப் பெருமாள் வந்தார்⋆
முத்திமழை பொழியு முகில் வண்ணர் வந்தார்⋆
மூலமென ஓலமிட வல்லார் வந்தார்⋆

உத்திர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்⋆
உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே (17)

‡இரு பரிதி இயைந்த மகுடமும்⋆
எழில் மதி திகழ்ந்த வதனமும்⋆
இருவகை இலங்கு குழைகளில்⋆
எதிர் பொர உகந்த மகரமும்⋆
ஒரு தகவுயர்ந்த திருமகள்⋆
ஒளி மறுவின் மன்னும் அகலமும்⋆
உருவருவுமிழ்ந்த உதரமும்⋆
உலகடைய நின்ற கழல்களும்⋆
மருவின் இடை பொங்கு புனலென⋆
மலை குனிய நின்ற மலையென⋆
மருளற விளங்கும் ஒளியென⋆
மலர் அயன் உகந்த பயனென⋆
அருவில் உறைகின்ற உயிரென⋆
அடியவர் உகந்த அமுதென⋆
அரு மறைகள் ஒன்றி அடிதொழ⋆
அருள் வரதர் நின்ற பெருமையே (18)

சித்தசித்தென விரித்துரைத்தன
அனைத்தமைத் துறையும் இறைவனார்⋆
சிறிய பெரிய உருவுடைய உடலமென
நடலம் இலதிலகுநிலையினார்⋆
சித்திரத்தெழிலை ஒத்த பத்தரொடு
முத்தர் பித்தி எனும் உணர்வினார்⋆
சிதைவில் மறைநெறியில் எறியவுரு முறைகள்
முறிய சிறை அரிய நிறைவினார்⋆
கத்துவிக்க வல கத்துவித்தை வழி
கற்றவர்க்கசைவில் மறையினார்⋆
கபிலர் கணசரணர் சுகதர் சமணர் அரர்
வழிகளழியும் அருள் மொழியினார்⋆

கத்திலக்கிலும் அருக் குலத்திலும்
அசித்தில் ஒக்கும் ஒரு முதல்வனார்⋆
கரணம் இடுகடிய பதினோர் இருடிகமும்
அடைய முடியும் அடி இருடியார்⋆
ஒத்தனைத்துலகும் ஒற்றியொற்றி வரும்
இப்பவத்திசையினிசைவினார்⋆
உருவம் அருவம் எனும் உலகின் முடுகிலதில்
உவமையிலதிலகு தலைவனார்⋆
உத்தமப் படி வகுத்த வித்தைகளில்
உத்தரிக்க உணர் குணவனார்⋆
உரிய கிரிசைகளில் அரியதொரு விரகு
தெரிய விரையும் அவர் பரிவினார்⋆
சத்தசத்தெனும் அனைத்தணைத்த வினை
தொத் தறுக்க வல துணிவினார்⋆
சரியும் அளவில் உரியவரை அறிவரிய
தமனி நெறி செருகு விரகினார்⋆
தத்துவத் திரள் உதைத்துதைத்தடைவு
தத்துவிக்கும் அவர் தலைவனார்⋆
தருகை உணரும் அவர்சரணம் அணுக
விடலரிய அருள் வரதர் அடியமே (19)

திருமகள் மண்மகள் நீளை முதலா⋆ எல்லாத்
தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கத்⋆
தருமம் இருமூன்று முதலனைத்தும் தோன்றத்⋆
தன்னனைய சூரியர் தன்னடிக்கீழ் வாழ⋆
அருமறைசேர் அளவில்லா அவனியின் கண்⋆
அரவணை மேல் வீற்றிருப்பால் அனைத்தும் காக்கும்⋆
கருமணியைக் கரிகிரி மேல் கண்டேன்⋆ என் தன்
கடுவினைகள் அனைத்தும் நான் கண்டிலேனே (20)

பெடை இரண்டை ஒர் அனம் அடைந்து
பிரிந்திடா வகை பேசலாம்⋆

பெருகும் அருவிகள் அருகு மருவிய
பெரிய மணிவரை பயிலலாம்⋆
பிடி இரண்டொடு களவம் ஒன்று
பிணைந்த பேரழகோதலாம்⋆
பிரிவில் ஒளியொடு நிழலும் அருகுறும்
இரவி இலகுதல் பரவலாம்⋆
கொடி இரண்டொடு விடவி ஒன்று
குளிர்ந்தவாறு குலாவலாம்⋆
குறைவில் சுருதியும் நினைவும் இலகிய
தரும அருநிலை என்னலாம்⋆
அடி இரண்டையும் அடையும் அன்பர்
அறிந்த பேரருளாளனார்⋆
அணுகுமலர்மகள் அவனி மகளொடு
கரடி கிரியினில் அவிர்தலே (21)

வேரொப்பார் விண் முதலாம் காவுக்கெல்லாம்⋆
விழியொப்பார் வேதமெனும் கண் தனக்குக்⋆
காரொப்பார் கருணைமழை பொழியு நீரால்⋆
கடலொப்பார் கண்டிடினும் காணாக் கூத்தால்⋆
நீரொப்பார் நிலமளிக்கும் தன்மை தன்னால்⋆
நிலமொப்பார் நெடும்பிழைகள் பொறுக்குநேரால்⋆
ஆரொப்பார் இவர் குணங்கள் அனைத்தும் கண்டால்⋆
அருளாளர் தாம் எனினும் தமக்கொவ்வாரே (22)

எந்நிலமும் குரத்தால்⋆ குறிசெய்த எழிற் பரிகொண்டு⋆
அன்னம் உயர்த்த செய்யோன்⋆ அன்றுவேள்விசெய் வேதியின்மேல்⋆
முன்னிலையாகிய மூர்த்தியன்⋆ நான்முக! மற்றும் உனக்கு⋆
என்ன வரம் தருவோம் என்று⋆ நாதன் இயம்பினனே (23)

சென்று மலர்பறித்து⋆ எந்நாதன் சேவடிப் போதுகந்து⋆
நன்றென நீர்சுடர்⋆ நன் முகவாசம் இலை கொடுத்துக்⋆
கன்னல் இலட்டுவத்தோடு⋆ அன்னம் சீடை கறிபடைத்துப்⋆
பின்னும் செவித்தவன்பாதம்⋆ பணிமின்கள் என்றனனே (24)

ஆழிநிலை வினை கடிவான்⋆ அயமேதமுடித்த தற்பின்⋆
வேழமலை நாயகனார்⋆ விடைகொடுக்க விண்ணேறி⋆
நாழிகையில் வானவரை⋆ மாற்றியிடு நான்முகன் தான்⋆
ஊழியெலாம் அழியாத⋆ உயோகம் அடைந்திருந்தானே (25)

ஆதியுகத்தயன் கண்டிட நின்ற⋆ அருள் வரதர்⋆
காதல் உயர்ந்த களிற்றைத்⋆ திரேதையில் காத்தளித்து⋆
வாதுயர் தேவகுருவுக்கிரங்கித்⋆ துவாபரத்தில்⋆
சோதி அனந்தன்⋆ கலியில் தொழுதெழ நின்றனரே (26)

‡புண்டரீகம் உயர்த்த புராணனார்⋆
பொய்யில் மாமக உத்தர வேதியில்⋆
கொண்டல் ஆரருள் மாரி பொழிந்திடக்⋆
கொண்டதோருயர் கூர்மதி அன்பினால்⋆
பண்டை நான்மறை மௌலி படிந்த யான்⋆
பாரில் மெய்விரதக் கவி பாடினேன்⋆
தொண்டை மண்டல வேதியர் வாழவே⋆
தூய தென்மறை வல்லவர் வாழவே (27)

‡உய்விரதம் ஒன்றின்றி அடைந்தார் உய்ய⋆
ஒருவிரதம் தான்கொண்ட உயர்ந்த மாலைச்⋆
செய்விரதம் ஒன்றாலும் தெளிய கில்லாச்⋆
சிந்தையினால் திசை படைத்த திசை முகன் தான்⋆
பொய்விரத நிலமெல்லாம் போயே மீண்டு⋆
புகலிதுவே புண்ணியத்துக்கென்று சேர்ந்த⋆
மெய்விரத நன்னிலத்து மேன்மை ஏத்தி⋆
வேதாந்த ஆசிரியன் விளங்கினானே (28)

‡சீராரும் தூப்புல்⋆ திருவேங்கடம் உடையான்⋆
தாரார் அருளாளர் தாள் நயந்து⋆-சீராக
மெய்விரத நன்னிலத்து⋆ மேன்மை இது மொழிந்தான்⋆
கையில் கனிபோலக் கண்டு (29)

‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ அடைக்கலப்பத்து ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡பத்தி முதலாம் அவற்றில்⋆ பதி எனக்குக் கூடாமல்⋆
எத்திசையும் உழன்றோடி⋆ இளைத்துவிழும் காகம் போல்⋆
முத்திதரு நகரேழில்⋆ முக்கியமாம் கச்சிதனில்⋆
அத்திகிரி அருளாளர்க்கு⋆ அடைக்கலம் நான் புகுந்தேனே (1)

சடைமுடியன் சதுர்முகனென்று⋆ இவர்முதலாம் தரமெல்லாம்⋆
அடைய வினைப்பயனாகி⋆ அழிந்துவிடும் படி கண்டு⋆
கடி மலராள் பிரியாத⋆ கச்சிநகர் அத்திகிரி⋆
இடமுடைய அருளாளர்⋆ இணையடிகள் அடைந்தேனே (2)

தந்திரங்கள் வேறின்றித்⋆ தமது வழி அழியாது⋆
மந்திரங்கள் தம்மாலும்⋆ மற்றுமுள்ள உரையாலும்⋆
அந்தரம் கண்டடிபணிவார்⋆ அனைவர்க்கும் அருள்புரியும்⋆
சிந்துர வெற்பிறையவனார்⋆ சீலம் அல்லதறியேனே (3)

காகம் இராக்கதன் மன்னர்⋆ காதலி கத்திரபந்து⋆
நாகம் அரன் அயன் முதலா⋆ நாகநகரார் தமக்கும்⋆
போகமுயர் வீடுபெறப்⋆ பொன்னருள் செய்தமை கண்டு⋆
நாகமலை நாயகனார்⋆ நல்லடிப் போதடைந்தேனே (4)

உகக்கும் அவை உகந்து⋆ உகவாவனைத்தும் ஒழிந்து⋆ உறவுகுணம்-
மிகத் துணிவு பெறவுணர்ந்து⋆ வியன் காவலென வரித்துச்⋆
சகத்தில் ஒரு புகலில்லாத்⋆ தவம் அறியேன் மதிட்கச்சி⋆
நகர்க் கருணை நாதனை⋆ நல்லடைக்கலமாய் அடைந்தேனே (5)

அளவுடையார் அடைந்தார்க்கும்⋆ அதன் உரையே கொண்டவர்க்கும்⋆
வளவுரை தந்தவன் அருளே⋆ மன்னிய மாதவத்தோர்க்கும்⋆
களவொழிவார் எமரென்ன⋆ இசைந்தவர்க்கும் காவலராம்⋆
துளவ முடி அருள் வரதர்⋆ துவக்கிலெனை வைத்தேனே (6)

உமதடிகள் அடைகின்றேன் என்று⋆ ஒரு கால் உரைத்தவரை⋆
அமையுமினி என்பவர் போல்⋆ அஞ்சலெனக் கரம் வைத்து⋆
தமதனைத்தும் அவர் தமக்கு⋆ வழங்கியும் தாம் மிக விளங்கும்⋆
அமைவுடைய அருளாளர்⋆ அடியிணையை அடைந்தேனே (7)

திண்மை குறையாமைக்கும்⋆ நிறைகைக்கும் தீவினையால்⋆
உண்மை மறவாமைக்கும்⋆ உளமதியில் உகக்கைக்கும்⋆
தண்மை கழியாமைக்கும்⋆ தரிக்கைக்கும் தணிகைக்கும்⋆
வண்மையுடை அருளாளர்⋆ வாசகங்கள் மறவேனே (8)

சுருதி நினைவிவையறியும்⋆ துணிவுடையார் தூமொழிகள்⋆
பரிதிமதி ஆசிரியர்⋆ பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்⋆
கருதியொரு தெளிவாளால்⋆ கலக்கம் அறுத்தத்திகிரிப்⋆
பரிதிமதி நயனமுடைப்⋆ பரமன் அடி பணிந்தேனே (9)

‡திருமகளும் திருவடிவும்⋆ திருவருளும் தெள்ளறிவும்⋆
அருமை இலாமையும் உறவும்⋆ அளப்பரிய வடியரசும்⋆
கருமம் அழிப்பளிப்பமைப்பும்⋆ கலக்கம் இலா வகைநின்ற⋆
அருள் வரதர் நிலை இலக்கில்⋆ அம்பென நான் அமிழ்ந்தேனே (10)

‡ஆறு பயன் வேறில்லா⋆ அடியவர்கள் அனைவர்க்கும்⋆
ஆறும் அதன் பயனும் இவை⋆ ஒருகாலும் பலகாலும்⋆
ஆறு பயன் எனவே கண்டு⋆ அருளாளர் அடியிணைமேல்⋆
கூறிய நற்குண உரைகள்⋆ இவை பத்தும் கோதிலவே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ அருத்தபஞ்சகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

அமலனவியாத சுடர்⋆ அளவில்லா ஆரமுதம்⋆
அமலவுருக் குணங்கள்⋆ அணி ஆயுதங்கள் அடியவர்கள்⋆
அமலவழியாத நகர்⋆ அழிந்தெழும் காவுடன் எல்லாம்⋆
கமலையுடன் அரசாளும்⋆ கரிகிரிமேல் காவலனே (1)

உள்ளபொருள் அனைத்துக்கும்⋆ உருவநிலை கருமங்கள்⋆
தெள்ளிசைவின் வசமாக்கித்⋆ திகழ்ந்துயிராய் உறைகின்றான்⋆
நள்ளிருள் தீர்த்தடியவர்க்கு⋆ நலங்கொடுக்கும் திருவுடனே⋆
வள்ளலருளாளர் எனும்⋆ வாரண வெற்பிறையவனே (2)

பூதவுடல் புலன்கள் மனம்⋆ புல்லாவி புந்தியெனும்⋆
யாதும் அலனாய் இலகி⋆ யானெனும் இன்னுண்ணறிவாய்ச்⋆
சேதனனாய் அடிமையுமாய்⋆ உயிர்க்கெல்லாம் திண்ணுயிராய்த்⋆
தீதலின்றித் திகழும் சீர்⋆ அத்திகிரித் திருமாலே (3)

தானடைத்த குணம் கருவி⋆ தன் கிரிசைவழி ஒழுக்கி⋆
ஊன் எடுத்துண்டு-மிழ்ந்துழலும்⋆ உயிர்க்கெல்லாம் உயிராகிக்⋆
கான் நடத்திக் கமலையுடன்⋆ கண்டுகந்து விளையாடும்⋆
தேனெடுத்த சோலைகள் சூழ்⋆ திருவத்தியூரானே (4)

உய்யும் உறவிசையாதே⋆ ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப்⋆
பொய்யுருவைத் தமக்கேற்றிப்⋆ புலன்கொண்ட பயனே கொண்டு⋆
ஐயுறவும் ஆரிருளும்⋆ அல்வழியும் அடைந்தவர்க்கு⋆
மெய்யருள் செய்திடும் திருமால்⋆ வேழமலை மேயவனே (5)

விதைமுளையின் நியாயத்தால்⋆ அடியில்லா வினையடைவே⋆
சதையுடல நால்வகைக்கும்⋆ சரணளிப்பான் எனத் திகழ்ந்து⋆
பதவியறியாது⋆ பழம் பாழில் உழல்கின்றார்க்கும்⋆
சிதைவில் அருள்தரும் திருமால்⋆ திருவத்தி நகரானே (6)

எம நியம ஆசனங்கள்⋆ இயலாவி புலனடக்கம்⋆
தமதறியுந் தாரணைகள்⋆ தாரையறா நினைவொழுக்கம்⋆
சமமுடைய சமாதி நலம்⋆ சாதிப்பார்க் கிலக்காகும்⋆
அமரர் தொழுமத்திகிரி⋆ அம்புயத்தாள் ஆரமுதே (7)

புகல் உலகில்லாது⋆ பொன்னருள் கண்டுற்றவர்க்கும்⋆
அகலகிலா அன்பர்க்கும்⋆ அன்றே தன்னருள் கொடுத்துப்⋆
பகலதனால் பழம் கங்குல்⋆ விடிவிக்கும் பங்கயத்தாள்⋆
அகலகில்லேன் என்றுறையும்⋆ அத்திகிரி அருள்முகிலே (8)

இருவிலங்கு விடுத்து⋆ இருந்த சிறைவிடுத்தோர் நாடியினால்⋆
கருநிலங்கள் கடக்கும் வழி⋆ காவலரால் கடத்துவித்துப்⋆
பெருநிலம் கண்டுயிருணர்ந்து⋆ பிரியாமல் அருள் செய்யும்⋆
உருநலம் கொண்டுறும் திருவோடு⋆ உயர் அத்திகிரியானே (9)

தம் திருமாதுடனே தாம்⋆ தனியரசாய் உறைகின்ற⋆
அந்தமில் பேரின்பத்தில்⋆ அடியவரோடெமைச் சேர்த்து⋆
முந்தி யிழந்தன எல்லாம்⋆ முகிழ்க்கத் தந்தாட்கொள்ளும்⋆
அந்தமிலா அருளாழி⋆ அத்திகிரித் திருமாலே (10)

அயன் பணியும் அத்திகிரி⋆ அருளாளர் அடியிணைமேல்⋆
நயங்கள்செறி கச்சிநகர்⋆ நான்மறையோர் நல்லருளால்⋆
பயன்கள் இவையனைத்தும் எனப்⋆ பண்டுரைத்தார் படியுரைத்த⋆
வியன்கலைகள் ஈரைந்தும்⋆ வேதியர்கட்கினியனவே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ ஸ்ரீ வைணவதினசரி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡வரியிருள் அழிவழி⋆ மனம் வரும் உணர்வொடு⋆
கரிகிரி மருவிய⋆ கரியவன் அடியிணை⋆
பரிவொடு பரவுநல்⋆ அடியவர் பழவுரை⋆
அரியரி அரியரி⋆ அரியரி அரியே (1)

வினைவகை ஒழுகிய⋆ வெறிநிலை அடையவும்⋆
நினைவுடை நிகழ்வெதிர்⋆ நிலை நலம் அணுகிட⋆
மனமுரை கிரிசைகள்⋆ மகிழ்மறை நெறிகொடு⋆
தனி முதல் அடியிணை⋆ அடிபவர் தமரே (2)

மலர்மகள் மருவிய⋆ மறுவுடை இறையவன்⋆
மலரடி கருதிய⋆ மனமுடை அடியவர்⋆
மலர்புனல் அமுதுடன்⋆ வகையன அடையவும்⋆
மலர்மதி எமதல⋆ என அறிபவரே (3)

நிறையுடை மலர்மகள்⋆ நலமுற மருவிய⋆
இறையவன் இனிதுற⋆ இனியவை எணுமவர்⋆
அறநெறி இலனெவன்⋆ அணுகிலும் அணுகிலர்⋆
துறை அலதெனும் ஒரு⋆ துறை படுகிலரே (4)

ஒளிமதி எனவொரு⋆ திருவுடன் உயர்பவன்⋆
நளிமதி முகநகை⋆ நல நிலவுகவுகள்⋆
தெளிபுனல் அமுதெனச்⋆ செழுமதி அடியவர்⋆
குளிமுதல் கிரிசைகள்⋆ குறைகிலர் வலவே (5)

வருவதொருறவென⋆ வளர் இளவரசென⋆
மருவுநன் மகனென⋆ வனமத கரியென⋆
அருவிலை மணியென⋆ அடியவர் அடைபவர்⋆
அருகணை இறைவனை⋆ அரு கணையுடனே (6)

விரைகமழ் மலர்மகள்⋆ மிகவுறும் இறையவன்⋆
குரைகழல் குறுகிய⋆ குளிர்மதி மதியொடு⋆
வரைநிலை அடியவர்⋆ மறைகளின் மறையெனும்⋆
உரைநிரை பரவுவர்⋆ உளம் அமுதுணவே (7)

துதிகளும் அறிவரு⋆ சுருதியின் இறுதியின்⋆
இதயம் இதென முனி⋆ இறையவர் உரைகளும்⋆
மதுரமன் உதவிய⋆ மறைகளும் அடியவர்⋆
விதிவகை பரவுவர்⋆ மிகவுளம் எழவே (8)

‡அறிவிலர் தலைமிசை⋆ அயனடி எழுதிய⋆
பொறிவகை எழுவதோர்⋆ பொறிநலம் உகவலர்⋆
உறுவதும் உடையதும்⋆ இதுவென வருவது⋆
நறுமலர் மகள்பதி⋆ நலமுறு நினைவே (9)

‡பெருகிய நலநிலை⋆ பெருமையின் மிகு மயல்⋆
உருகிய நிலைமனம்⋆ உயர்முகிழ் எழுமுடல்⋆
சொருகிய விழி திகழ்⋆ சுடர்மதி புகுமிறை⋆
கருகிய வுரு திகழ்⋆ கரிகிரி அரியே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ திருச்சின்னமாலை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

மன்னு திரு மந்திரத்தின் வாழ் துவயத்தின் பொருளும்
துன்னுபுகழ்க் கீதைதனில் சொன்னவெண்ணான்கின் பொருளும்
அன்னவயல் கச்சி அருளாளர் திருச்சின்ன ஒலி
இன்னபடி என்றுரைத்தான் எழில் வேதாந்தாரியனே

ஏகாந்த மூன்றும் எழிலால் உரைசெய்து
மாகாந்தம் செய்தருளும் வள்ளலாய்ச்-சாகாந்த
தேசிகனாம் தூப்புல் திருவேங்கடேச குரு
வாசகமே எங்களுக்கு வாழ்வு

பரிச்சின்னமான இருநாலெழுத்தின் பல்வண்மை எலாம்
விரிச்சு நலம்பெறவோதவல்லோர்க்கிந்த மேதினிக்கே
மரிச்சின்ன மீளப்பிறவாமல் வாழ்விக்கும் மால் வரதர்
திருச்சின்ன ஓசையின் இனிமை உண்டோ மற்றைத் தேவருக்கே

‡ஈருலகைப் படைக்க எண்ணி இருந்தார் வந்தார்
எழில்மலரோன் தன்னையன்றே ஈன்றார் வந்தார்
மாருத மண்ணீராகு மாயோர் வந்தார்
வானொடெரிதாம் ஆகும் மறையோர் வந்தார்
சூரியர்கள் தம்முடன் துலங்கு தூயோர் வந்தார்
சுரர்களுக்கன்றமுதருள் சுந்தரனார் வந்தார்
வாரிதிசூழ் வையகம் வாழ்வித்தார் வந்தார்
வண்மையுடன் வரம் தருவார் வந்தார் தாமே (1)

அருமறையை ஊழிதனில் காத்தார் வந்தார்
அதுதன்னை அன்றயனுக்களித்தார் வந்தார்
தருமவழி அழியாமல் காப்பார் வந்தார்
தாமரையாளுடன் இலங்குந் தாதை வந்தார்
திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளால் செழுங்கலைகள் தந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கும் மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே (2)

அனைத்துலகும் காக்கும் அருளாளர் வந்தார்
அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார்
தினைத்தனையும் திருமகளை விடாதார் வந்தார்
தேசொத்தார் மிக்காரும் இல்லார் வந்தார்
நினைக்க நமக்கின்னறிவு தந்தார் வந்தார்
நிலைநின்ற உயிர்தோன்ற நினைந்தார் வந்தார்
எனக்கிவர் நானிவர்க்கென்ன இனியார் வந்தார்
எழுத்தொன்றில் திகழ நின்றார் வந்தார் தாமே (3)

நாம் வணங்கத் தாமிணங்கா நிற்பார் வந்தார்
நம்மை அடைக்கலம் கொள்ளும் நாதர் வந்தார்
நாம் எமக்காம் வழக்கெல்லாம் அறுத்தார் வந்தார்
நமக்கிதுவென்றுரையாமல் வைத்தார் வந்தார்
சேமமெண்ணி எம்மை அன்பர்க்கடைத்தார் வந்தார்
செழுந்தகவால் திண் சரணாம் ஈசர் வந்தார்
தாமனைத்தும் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்
தமக்கேயாய் எமைக்கொள்வார் வந்தார் தாமே (4)

உலகெல்லாம் உள்ளே வைத்துமிழ்ந்தார் வந்தார்
உலகுடம்பாய்த் தாம் உயிராய் நின்றார் வந்தார்
அலை கடலாய் ஆனந்தம் அடைந்தார் வந்தார்
அளவில்லா அருளாழிப் பெருமாள் வந்தார்
திலகமெனும் திருமேனிச் செல்வர் வந்தார்
செழுங்குணங்கள் இருமூன்றும் உடையார் வந்தார்

இலகுசுடர் முழுநலமாம் இனியார் வந்தார்
    எல்லார்க்கும் கதியானார் வந்தார் தாமே (5)

அருளாலே விலங்கிரண்டும் அழிப்பார் வந்தார்
    அஞ்சிறையைக் கழித்தருளும் அன்பர் வந்தார்
மருள் வாரா வகை நம்மைக்காப்பார் வந்தார்
    வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்
தெருளாரும் தெளிவிசும்பு தருவார் வந்தார்
    திண் கழல்கீழ் வாழநமக்கருள்வார் வந்தார்
பெருவானில் அடிமை நம்மைக் கொள்வார் வந்தார்
    பிரியாமல் காத்தளிப்பார் வந்தார் தாமே (6)

அகலகிலாத் திருமகளார் அன்பர் வந்தார்
    அடியிரண்டும் ஆறாகத் தந்தார் வந்தார்
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்
    பொன்னுலகில் திருவுடனே திகழ்வார் வந்தார்
அகிலமெலாம் ஆனந்தம் ஆனார் வந்தார்
    அடியிணைக்கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்
பகல் நடுவே இரவழைக்க வல்லார் வந்தார்
    பகலொன்றாய் இரவழித்தார் வந்தார் தாமே (7)

தருமன் விடத்தாந் தூது போனார் வந்தார்
    தரணிபொறாத் திண் பாரந் தவிர்த்தார் வந்தார்
அருமறையின் பொருள் அனைத்தும் விரித்தார் வந்தார்
    அஞ்சின நீ என்னையடை என்றார் வந்தார்
தருமமெலாந் தாமாகி நிற்பார் வந்தார்
    தாமே நம் வினையனைத்தும் தவிர்ப்பார் வந்தார்
பரமெனது நீ புலம்பல் என்றார் வந்தார்
    பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே (8)

வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் வந்தார்
    மல்லர் மதகரிமாள மலைந்தார் வந்தார்
கஞ்சனைப்போர் கடும் சினத்தால் கடிந்தார் வந்தார்
    கண்ணுதல் முன் வாணன் தோள் கழித்தார் வந்தார்

வெஞ்சொல் தர வீடுகொடுத்துகந்தார் வந்தார்
விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்
பஞ்சவரைப் பலவகையும் காத்தார் வந்தார்
பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார் தாமே (9)

‡அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரிதேரின் மேல் அழகர் வந்தார்
கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரம் தரும் தெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியும் முகில்வண்ணர் வந்தார்
மூலமென ஓலமிட வல்லார் வந்தார்
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்
உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே (10)

‡மறைத்தலையில் இசை எழுத்தில் வணங்கும் வாக்கில்
மந்திரத்தில் நாலெழுத்தாம் திருநாமத்தில்
நிறைத்திலகு வேற்றுமையில் இரண்டாம் ஒன்றில்
நெடுமால் தன் கீதையெலாம் நிறைந்த சொல்லில்
உறைத்தவர் கண்டுரைத்த பொருளான எல்லாம்
உயர்விரத அருளாளப் பெருமாள் தேசின்
திறத்தில் இயை திருச்சின்னமாலை பத்தும்
செவிக்கினிதாம் சிற்றின்பம் இசையாதார்க்கே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ பந்திருநாமம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

பன்னிரு நாமம் திருவத்தியூர்ப் பரன் பாதமென்று⋆
நன்னிற நாமம் படை திக்கி யாவையும் நாமறியத்⋆
தென்னந் தமிழ்த் தொடைச் சீரார் கலித்துறை ஓதி ஈந்தான்⋆
மின்னுறு நூலமர் வேங்கடநாதன் நம் தேசிகனே

கார் கொண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி⋆
ஏர்கொண்ட கீர்த்தி இராமாநுசன் தன் இணையடிசேர்⋆
சீர்கொண்ட தூப்புல் திருவேங்கடாரியன் சீர்மொழியை⋆
ஆர்கொண்டு போற்றினும் அம்மால் பதத்தை அடைவிக்குமே

‡கேசவனாய் நின்று⋆ கீழைத் திசையிலும் நெற்றியிலும்⋆
தேசுடை ஆழிகள் நான்குடன்⋆ செம் பசும் பொன்மலைபோல்⋆
வாசிமிகுத்தெனை⋆ மங்காமல் காக்கும் மறையதனால்⋆
ஆசைமிகுத்த⋆ அயன் மக வேதியில் அற்புதனே (1)

நாரணனாய்⋆ நல் வலம்புரி நாலும் உகந்தெடுத்தும்⋆
ஊரணி மேகம் எனவே⋆ உதரமும் மேற்கு நின்றும்⋆
ஆரணநூல் தந்தருளால்⋆ அடைக்கலம் கொண்டருளும்⋆
வாரணவெற்பில்⋆ மழை முகில்போல் நின்ற மாயவனே (2)

மாதவ நாமமும்⋆ வான்கதை நான்கு மணிநிறமும்⋆
ஓதும் உறைப்படி ஏந்தி⋆ உரத்திலுமேலும் அல்கிப்⋆
போதலர் மாதுடன்⋆ புந்தியில் அன்பால் புகுந்தளிக்கும்⋆
தூதனும் நாதனுமாய⋆ தொல் அத்திகிரிச் சுடரே (3)

கோவிந்தன் என்றும் குளிர்மதியாகிக்⋆ கொடியவரை⋆
ஏவும் தனுக்களுடன்⋆ தெற்கிலும் உட்கழுத்து நின்று⋆
மேவும் திருவருளால்⋆ வினைதீர்த்தெனை ஆண்டருளும்⋆
பூவன் தொழ⋆ அத்திமாமலை மேல் நின்ற புண்ணியனே (4)

விட்டு வலவயிற்றின் கண்⋆ வடக்கும் விடாது நின்று⋆
மட்டவிழ் தாமரைத் தாது⋆ நிறங்கொண்ட மேனியனாய்த்⋆
தொட்டகலப்பைகள்⋆ ஈரிரண்டாலும் துயர் அறுக்கும்⋆
கட்டெழில் சோலைக்⋆ கரிகிரிமேல் நின்ற கற்பகமே (5)

மதுசூதனன் என் வலப்புயம்⋆ தென் கிழக்கென்றிவற்றில்⋆
பதியாய் இருந்து⋆ பொன் மாதுறை பங்கய வண்ணனுமாய்⋆
முது மாவினைகள் அறுக்கும்⋆ முயலங்கள் ஈரிரண்டால்⋆
மதுவார் இளம் பொழில்⋆ வாரண வெற்பின் மழைமுகிலே (6)

திருவிக்கிரமன் திகழ் தீ நிறத்தன்⋆ தெளிவுடைவாள்⋆
உருவிக் கரங்களில்⋆ ஈரிரண்டேந்தி வலக்கழுத்தும்⋆
செருவிக்கரமத்தரக்கர் திக்கும்⋆ சிறந்தாளுமிறை⋆
மருவிக் கரிகிரிமேல்⋆ வரம் தந்திடும் மன்னவனே (7)

வாமனன் என்றன் வாமோதரமும்⋆ வாயுவின் திசையும்⋆
தாமம் அடைந்து⋆ தருண அருக்கனிறத்தனுமாய்ச்⋆
சேமமரக்கலம்⋆ செம்பவி ஈரிரண்டால் திகழும்⋆
நாமங்கை மேவிய⋆ நான்முகன் வேதியில் நம்பரனே (8)

சீரார் சிரீதரனாய்ச்⋆ சிவன் திக்கும் இடப் புயமும்⋆
ஏரார் இடங்கொண்டு⋆ இலங்குவெண் தாமரை மேனியனாய்ப்⋆
பாராய பட்டயம்⋆ ஈர் இரண்டாலும் பயமறுக்கும்⋆
ஆராவமுது⋆ அத்திமாமலை மேல் நின்ற அச்சுதனே (9)

என் இருடிகேசன் இறை கீழ்⋆ இடக்கழுத்தென்றிவற்றில்⋆
நன்னிலை மின்னுருவாய்⋆ நாலு முற்கரம் கொண்டளிக்கும்⋆
பொன் அகில் சேர்ந்தலைக்கும்⋆ புனல் வேகை வடகரையில்⋆
தென்னன் உகந்து தொழும்⋆ தேனவேதியர் தெய்வம் ஒன்றே (10)

எம் பற்பநாபனும்⋆ என்பின் மனம் பற்றி மன்னிநின்று⋆
வெம்பொன் கதிரவன் ஆயிரம்⋆ மேவிய மெய்யுருவாய்⋆
அம்பொன் கரங்களில்⋆ ஐம்படை கொண்டஞ்சல் என்றளிக்கும்⋆
செம்பொன் திருமதிள் சூழ்⋆ சிந்துராசலச் சேவகனே (11)

‡தாமோதரன் என்றன் தாமங்கள்⋆ நாலு கரங்களில் கொண்டு⋆
ஆமோதரம் என⋆ ஆகத்தின் உட்புறம் பின் கழுத்தும்⋆
தாம் ஓர் இளங்கதிரோன் என⋆ என்னுள் இருள் அறுக்கும்⋆
மாமோக மாற்றும்⋆ மதிள் அத்தியூரின் மரகதமே (12)

‡கத்தித் திரியும் கலைகளை வெல்லும்⋆ கருத்தில் வைத்துப்⋆
பத்திக்குறுதுணை⋆ பன்னிருநாமம் பயில்பவர்க்கு⋆
முத்திக்கு மூலமெனவே மொழிந்த⋆ இம்மூன்று நான்கும்⋆
தித்திக்கும் எங்கள்⋆ திருவத்தியூரரைச் சேர்பவர்க்கே (13)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ திருமந்திரச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡நாவலர் மறை நாலொன்றும்⋆ நலந்திகழ் மறை ஒன்றோராது⋆
ஆவலிப்பலைக்கு மோகத்து⋆ அழுந்தி நின்றலமர்கின்றீர்⋆
தூவலம் புரியாம் ஒன்றில்⋆ துவக்கமாம் வண்ணம் ஒன்றால்⋆
காவலென்றகரத்தவ்வாய்க்⋆ கருத்துறக் காண்மினீரே (1)

இளக்கமில் மயக்கம் தன்னால்⋆ எனக்கு யான் உரியன் என்னும்⋆
களக்கருத்தொன்றே கொண்டு⋆ கடு நரகடைந்து நின்றீர்⋆
விளக்கும் அவ்வெழுத்தின் நாலாம்⋆ வேற்றுமை ஏற்றி வாங்கித்⋆
துளக்கமில் அடிமை பூண்டு⋆ தூயராய் வாழ்மினீரே (2)

அப்பொருள் இகந்து மற்றும்⋆ அழித்தழிந்தெழுவார் தாளில்⋆
இப்பொருள் இகந்தவன்பால்⋆ இரங்கினிர் வணங்கி வீழ்ந்தீர்⋆
உப்பொருள் உள்ளி மற்றோர்⋆ உயிர் தனக்குரிமை மாற்றி⋆
எப்பொருள் பயனும் ஈதென்று⋆ எண்ணினிர் எழுமினீரே (3)

என்றும் ஓர் ஏதமின்றி⋆ இரவியும் ஒளியும் போல⋆
ஒன்றி நின்றுலகளிக்கும்⋆ உகம் இகந்தடிமை வைத்தீர்⋆
ஒன்று மூன்றெழுத்தாய் ஒன்றும்⋆ ஒன்றில் ஒன்றுடைய முன்னே⋆
ஒன்றிய இரண்டை உள்ளி⋆ உளர் என உய்ம்மினீரே (4)

தத்துவம் அறுநான்கோடு⋆ தனியிறை அன்றி நின்ற⋆
சித்தினை உணராதென்றும்⋆ திரள் தொகையாகி நின்றீர்⋆
மத்தனைத் தனிவிடாதே⋆ மையிலா விளக்கமாக்கி⋆
உத்தமன் அடிமையான⋆ உயிர்நிலை உணர்மினீரே (5)

தனதிவை அனைத்தும் ஆகத்⋆ தான் இறையாகும் மாயன்⋆
உனதெனும் உணர்த்தி தாராது⋆ உமக்குநீர் உரிமை உற்றீர்⋆
எனதிவை அனைத்தும் யானே⋆ இறையெனும் இரண்டும் தீர⋆
மந எனும் இரண்டின் மாறா⋆ வல்வினை மாற்றுவீரே (6)

அழிவிலா உயிர்கட்கெல்லாம்⋆ அருக்கனாய் அழியாவீசன்⋆
வழியலா வழிவிலக்கும்⋆ மதியெழ மாய மூர்த்தி⋆
வழுவிலாதிவை அனைத்தும்⋆ வயிற்றில் வைத்துமிழ்ந்த மாலை⋆
நழுவிலா நாரவாக்கில்⋆ நாடி நீர் நணுகுவீரே (7)

வயனம் ஒன்றறிந்துரைப்பார்⋆ வன்கழல் வணங்க வெள்கி⋆
நயனம் உள்ளின்றி நாளும்⋆ நள்ளிருள் நண்ணி நின்றீர்⋆
அயனம் இவ்வனைத்துக்கும் தான்⋆ அவை தனக்கயனம் என்னப்⋆
பயனுமாய்ப் பதியுமான⋆ பரமனைப் பணிமினீரே (8)

‡உயர்ந்தவர் உணர்ந்த வாற்றால்⋆ உவந்த குற்றேவலெல்லாம்⋆
அயர்ந்து நீர் ஐம்புலங்கட்கு⋆ அடிமை பூண்டலமர்கின்றீர்⋆
பயந்திவை அனைத்தும் ஏந்தும்⋆ பரமனார் நாமம் ஒன்றில்⋆
வியந்த பேரடிமை தோற்றும்⋆ வேற்றுமை மேவுவீரே (9)

‡எண் திசை பரவும் சீரோர்⋆ எங்களுக்கீந்தவெட்டில்⋆
உண்டவாறுரைப்பார் போல⋆ ஒன்பது பொருள் உரைத்தோம்⋆
பண்டுநான் மறையோர் காக்கும்⋆ மாநிதி இவை அனைத்தும்⋆
கண்டவர் விள்ளார் விள்ளக்⋆ கருதுவார் காண்கிலாரே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ துவயச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡இன்னமுதில் பிறந்தாள்⋆ இதம் கேட்க உரைத்த பிரான்⋆
பொன்னருளால் மறை மௌலியில்⋆ பூண்ட இரண்டிசைத்து⋆
தன்னுரை மிக்கதனம் இதெனத்⋆ தந்த வேதகத்தில்⋆
துன்னு பொருள்கள் பத்தும்⋆ தொலையா நிதி ஆகின்றவே (1)

அருவுருவானவை தன்னை அடைந்திடத்⋆ தான் அடைந்து⋆
வெருவுரை கேட்டவை கேட்பித்து⋆ அகற்றும் வினை விலக்கி⋆
இருதலை அன்புதனால்⋆ எமை இன்னடி சேர்த்தருளும்⋆
திருவுடனே திகழ்வார்⋆ செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே (2)

ஓர் உயிராய் நின்ற⋆ ஒண் சுடர் இன்ப உருத்தனிலும்⋆
பேர் உருவத்திலும்⋆ பின்னதில் தோற்றும் உருக்களிலும்⋆
ஓர் உருவான உலகிலும்⋆ ஏற்கும் உருக்களினால்⋆
சேருதல் மன்னு செய்யாள் அன்பர்⋆ நம் மனம் சேர்ந்தனரே (3)

காரணமாய் இறையாய்க்⋆ கதியாய் அமரும் பதியாய்⋆
ஆரணம் ஓதும் அனைத்துறவாய்⋆ அகலா உயிராய்ச்⋆
சீர் அணியும் சுடராய்ச்⋆ செறிந்தெங்குந் திகழ்ந்து நின்ற⋆
நாரணனார் நமக்காய் நல்கி⋆ நாம் தொழ நின்றனரே (4)

வானமர் மன்னுருவாய்⋆ வகையால் அதில் நாலுருவாய்⋆
மீனமதாமை கேழல்⋆ முதலாம் விபவங்களுமாய்⋆
ஊனமர் உள்ளுருவாய்⋆ ஒளியாத அருச்சையுமாம்⋆
தேனமர் செங்கழலான்⋆ சேர்த்தனன் கழல் எம் மனத்தே (5)

வேறொர் அணங்கு தொழும்⋆ வினை தீர்த்தெமையாண்டிடுவான்⋆
ஆறும் அதன் பயனும்⋆ தந்தளிக்கும் அருளுடையான்⋆
மாறிலதாய் இலகும்⋆ மது மெல்லடிப் போதிரண்டால்⋆
நாறுதுழாய் முடியான்⋆ நமக்குச் சரண் ஆயினனே (6)

பெறுவது நாம் பெரியோர்⋆ பெறும்பேறென நின்றவெம்மை⋆
வெறுமை உணர்த்தி⋆ விலக்காத நன்னிலை ஆதரிப்பித்து⋆
உறுமதியால் தனை⋆ ஒண் சரணென்ற உணர்வு தந்த⋆
மறுவுடை மார்பனுக்கே⋆ மன்னடைக்கலம் ஆயினமே (7)

அருமறை யாதும் துறவோமென⋆ அறிந்தார் கவரும்⋆
கருமமும் ஞானமும் காதலும் கண்டு⋆ முயலகிலோம்⋆
வருவதும் இந்நிலையாய்⋆ மயலுற்ற எமக்குளதோ⋆
திருமகளார் பிரியாத்⋆ திருமால் அன்றி நல் சரணே (8)

சுருங்கா அகிலமெல்லாம்⋆ துளங்கா அமுதக் கடலாய்⋆
நெருங்காதணைந்துடனே நின்ற⋆ நம் திருநாரணனார்⋆
இரங்காத காலங்களெல்லாம்⋆ இழந்த பயன்பெற⋆ ஓர்
பெருங்காதல் உற்றினிமேல்⋆ பிரியாமை உகந்தனமே (9)

கடிசூடு மூன்றும்⋆ கழல் பணிந்தார்க்குக் கடிந்திடவே⋆
முடிசூடி நின்ற⋆ முகில் வண்ணனார் முன் உலகளந்த⋆
அடிசூடும் நாமவர் ஆதரத்தால்⋆ உடுத்துக் களையும்⋆
படி சூடி அன்புடனே⋆ பணிசெய்யப் பணிந்தனமே (10)

‡தனதன்றிவையெனத்⋆ தானன்றென மறை சொன்ன வெலாம்⋆
எனதென்றும் யானென்றும்⋆ எண்ணுதலால் வரும் ஈனமெலாம்⋆
மனதொன்றி இன்று⋆ நம என்றதே கொண்டு மாற்றுதலால்⋆
தனதன்றி ஒன்றுமில்லாத்⋆ தனித்தாதை சதிர்த்தனனே (11)

‡சேர்க்கும் திருமகள்⋆ சேர்த்தியின் மன்னுதல் சீர்ப் பெரியோற்கு⋆
ஏற்கும் குணங்கள்⋆ இலக்காம் வடிவில் இணையடிகள்⋆
பார்க்கும் சரணதில்⋆ பற்றுதல் நம்நிலை நாம் பெறும் பேறு⋆
ஏற்கின்றவெல்லைகள் எல்லாம்⋆ களையறவெண்ணினமே (12)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ சரமச்லோகச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡கல்லார் அகலும் கருமமும் ஞானமும் காதலும்⋆ மற்று
எல்லா நிலைகளுக்கேற்ப⋆ விதித்த கிரிசைகளும்⋆
வல்லார் முயல்க⋆ வலியிழந்தார் என் தனைத் தொழுகென்று⋆
எல்லாத் தருமம் உரைத்தவன்⋆ இன்னடி சேர்ந்தனமே (1)

வெறுமை உணர்ந்தது முன்னிட்டு⋆ வேறங்கம் இல்லையெனக்⋆
குறியவன் இன்னறவெட்டக்⋆ குறித்திடும் கோணை துறந்து⋆
உறுமயன் அத்திரமென்னப்⋆ பொறாநிலை ஓர்ந்திட ஓர்⋆
அறநெறி அன்றுரைத்தான்⋆ அழியா அறமாயினனே (2)

வாரிதி விட்டு⋆ மலர்மகளோடு மதுரை வந்து⋆
பாரத வெஞ்சமர்⋆ பார்மகள் பாரம் செகவுகந்து⋆
சாரதியாய் முன்பு தூதனுமாய்த்⋆ தளரும் விசயன்⋆
தேரதில் நின்றவனைத்⋆ தேற்றினான் திறம் ஆயினமே (3)

தன்னருளால் பெறும் சாதனம்⋆ சாதகன் என்றிவற்றைத்
தன்னுடன் எண்ணுதல் நீங்கத்⋆ தனித்தொரு சாதனமாய்ப்⋆
பொன் அருளோடும் அப்பூமகளோடும்⋆ புகழ நின்ற⋆
இன்னுரை ஈசனையே⋆ ஏகம் எண்ண இசைந்தனமே (4)

ஊனில் இணைத்துழல் விக்கும்⋆ வினைக் கடலுள் விழுந்த⋆
யான் எனதான குணங்கள்⋆ எனக்கிசை நல்வழியும்⋆
தான் உதவித் தனைத் தந்திட நின்ற⋆ தனித்தருமம்⋆
நான் இனி வேறோர் பரம்⋆ நணுகாவகை நல்கியதே (5)

கடுவினை நாம்பெறும்⋆ பேற்றைத் தகைந்தமை கண்டு நம்மேல்⋆
தொடை விலகாமல் இசைந்து⋆ ஒருகாலம் துணிவுடனே⋆
உடைமை அடைக்கலமாக⋆ அடைக்கும் உகப்பதனால்⋆
அடையென என்றுரைத்தான்⋆ அடைவித்தனன் தன்னடியே (6)

கானென்ற வேதங்கள்⋆ காக்கும் பரனென்று காட்ட நின்றோன்⋆
தானென்றறியகிலார்க்கு⋆ அறிவிக்கும் தனித்திறலோன்⋆
வான் ஒன்றினாரொடு⋆ மானிடன் என்ன அவதரிப்பான்⋆
நானென்ற நம் திருமால்⋆ நம்மை நற்பதம் சேர்த்திடுமே (7)

தன்னிலை காட்டித்⋆ தனிமை உகந்து தனித்தகவால்⋆
அன்னிலை தீர அடைக்கலம் கொண்டு⋆ அடிசேர்த்திடவே⋆
பன்னிலை மூல எழுத்திலும்⋆ பாண்டவன் தேர்தனிலும்⋆
முன்னிலை கொண்ட பிரான்⋆ எம்மை முன்னிலை
கொண்டனனே (8)

காடுகளோ நரகோ⋆ கடிதாம் கரளத் திரளோ⋆
சூடுவிடா அனலோ⋆ தொலையா நிலை நள்ளிருளோ⋆
சாடுபடச் சரணால்⋆ அன்று சாடிய சாரதியார்⋆
வீடு செய்வித்து நம்மை⋆ விடுவிக்கின்ற பாவங்களே (9)

‡சென்றுயர் வான் அமர்ந்து⋆ அவ்வடியாருடன் சேர்ந்திடவே⋆
இன்றெனில் இன்று⋆ நாளை எனில் நாளை இனிச்செறிந்து⋆
நின்ற நிலை நின் அனைத்து வினையும்⋆ நின் விட்டகலக்⋆
கன்றி விடுப்பன் என்றான்⋆ கருத்தால் நம்மைக் காத்திடுமே (10)

‡அறிவும் அனைத்தும் இலா அடியோமை⋆ அடைக்கலம் கொண்டு⋆
உறவென நின்றதெலாம்⋆ உறவே நின்ற தான் எமக்காய்⋆
மறு பிறவித் துயர் வாராவகை⋆ மனம் கொண்டகலா⋆
இறையவன் இன்னருளால்⋆ எங்கள் சோகம் தவிர்த்தனனே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ கீதார்த்தசங்கிரகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

கட்டப் பொருள் விரித்த காசினியில் நான்மறையில்
இட்டப் பொருள் இயம்பும் இன்பொருளைச்-சிட்டர் தொழும்
வேதாந்த தேசிகனை மேவுவார் தங்கள் திருப்
பாதாம்புயம் அடியேன் பற்று (1)

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனார்
பாதார விந்தமலர் பற்று (2)

‡கருமமு ஞானமும் கொண்டெழும்⋆ காதலுக்கோர் இலக்கென்று⋆
அருமறை உச்சியுள்⋆ ஆதரித்தோதும் அரும் பிரமம்⋆
திருமகளோடு வரும்⋆ திருமால் என்றுதான் உரைத்தான்⋆
தருமம் உகந்த தனஞ்சயனுக்கு⋆ அவன் சாரதியே (1)

உகவை அடைந்த உறவுடையார்⋆ பொரலுற்ற அந்நாள்⋆
தகவுடன் அன்பு கரைபுரளத்⋆ தருமத்தளவில்⋆
மிக உளம் அஞ்சி விழுந்து⋆ அடி சேர்ந்த விசயனுக்கோர்⋆
நகையுடன் உண்மையுரைக்க⋆ அமைந்தனன் நாரணனே (2)

உடலம் அழிந்திடும்⋆ உள்ளுயிர் ஒன்றழியாதெனைப்போல்⋆
விடுமது பற்று⋆ விடாததடைத்த கிரிசைகளே⋆
கடுக உனக்குயிர் காட்டு நினைவு⋆ அதனால் உளதாம்⋆
விடு மயல் என்று⋆ விசயனைத் தேற்றினன் வித்தகனே (3)

சங்கம் தவிர்ந்து⋆ சகம் சதிர் பெற்ற தனஞ்சயனே⋆
பொங்கும் குணங்கள்⋆ புணர்ப்பனைத்தும் புக விட்டவற்றுள்⋆
நங்கண் உரைத்த கிரிசை எலாம்⋆ எனவும் நவின்றார்⋆
எங்கும் அறிவர்களே என்று⋆ நாதன் இயம்பினனே (4)

பிறவாமை தந்திடத்⋆ தானே பிறக்கும் பெருமைகளும்⋆
துறவாக் கிரிசைகள்⋆ தூய்மதி தன்னால் துலங்குகையும்⋆
இறவா உயிர் நன்னிலை கண்டிடும்⋆ உலகின் நிலையும்⋆
மறைவாழு மாயவன்⋆ நேயனுக்-கன்றறி-வித்தனனே (5)

கண்டெளி தாம் கருமம்⋆ உயிர்காட்டக் கடுகுதலும்⋆
மண்டி அதன் படியில்⋆ மனம் கொள்ளும் வரிசைகளும்⋆
கண்டறியா உயிரைக்⋆ காணலுற்ற நினைவுகளும்⋆
வண் துவரேசன் இயம்பினன்⋆ வாசவன் மைந்தனுக்கே (6)

யோக முயற்சியும்⋆ யோகில் சமநிலை நால்வகையும்⋆
யோகின் உபாயமும்⋆ யோகுதன்னால் வரும் பேறுகளும்⋆
யோகுதனில் தன் திறமுடை⋆ யோகுதன் முக்கியமும்⋆
நாகணை யோகி நவின்றனன்⋆ நன்முடி வீரனுக்கே (7)

தான் நின்ற உண்மையைத்⋆ தன் தனி மாயை மறைத்தமையும்⋆
தானன்றி மாயைதனைத் தவிர்ப்பான்⋆ விரகற்றமையும்⋆
மேனின்ற பத்தர்கள் நால்வரில்⋆ ஞானிதன் மேன்மைகளும்⋆
தேன் நின்ற செங்கழலான்⋆ தெளிவித்தனன் பார்த்தனுக்கே (8)

ஆராத செல்வமும்⋆ ஆருயிர் காணும் அரும் பயனும்⋆
பேராது தன் கழற்கீழ்⋆ அமரும் பெரு வாழ்ச்சிகளும்⋆
சோராதுகந்தவர்⋆ தூமதி கொள்வதும் செய்வனவும்⋆
தேரா விசயனுக்குத்⋆ திருநாரணன் செப்பினனே (9)

தன் மேன்மையும்⋆ தன் பிறப்பில் தளராத் தனி நிலையும்⋆
பன்மேனி நண்ணினன்பால்⋆ பிரியா அன்பர் ஆசைகளும்⋆
புன்மேனி விண்ணவர்பால்⋆ புரியாத தன் பத்தியையும்⋆
நன்மேனி நாரணன் தான்⋆ நரனுக்கு நவின்றனனே (10)

எல்லையில்லாத தன் சீலமாம்⋆ இன்னமுதக் கடலும்⋆
எல்லையில்லாத விபூதி எலாம்⋆ தனதானமையும்⋆
எல்லையில் பத்தி தனை⋆ எழுவிக்கத் திருவருளால்⋆
எல்லையில் ஈசன் இயம்பினன்⋆ இந்திரன் மைந்தனுக்கே (11)

எல்லாம் தனக்குருவாய் இலங்கும்வகை⋆ தானுரைத்துச்⋆
சொல்லால் அறிந்தது⋆ சோராமல் கண்டிட வேண்டும் என்ற⋆
வில்லாளனுக்கன்று⋆ மெய்க்கண் கொடுத்திது வேறுமுண்டோ⋆
நல்லார்கள் காண்பாரென்று⋆ நவின்றான் நங்கள் நாயகனே (12)

தன்கழலில் பத்தி தாழாததும்⋆ அதன் காரணமாம்⋆
இன் குண சிந்தையும்⋆ ஈதறியார்க்கவ்வடிமைகளும்⋆
தன் கருமங்கள் அறியாதவர்க்கு⋆ இலகு நிலையும்⋆
தன் கழல் அன்பர்க்கு⋆ நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே (13)

ஊனின் படியும்⋆ உயிரின் பிரிவும் உயிர் பெறுவார்⋆
ஞானம் பெறுவகையும்⋆ ஞானம் ஈன்ற உயிர்ப்பயனும்⋆
ஊன் நின்றதற்கடியும்⋆ உயிர் வேறிடும் உள் விரகும்⋆
தேன் நின்ற பாதன்⋆ தெளிவித்தனன் சிலைப் பார்த்தனுக்கே (14)

முக்குணமே உயிர் முற்றவும் கட்டிட⋆ மூண்டமையும்⋆
முக்குணமே அனைத்தும் வினை கொள்ள⋆ முயன்றமையும்⋆
முக்குண மாயை கடத்தலும்⋆ முக்கதி தந்தளிப்பும்⋆
முக்குணம் அற்றபிரான்⋆ மொழிந்தான் முடியோன் தனக்கே (15)

மூவெட்டிலும்⋆ அதின் மோகம் அடைந்த உயிர்களிலும்⋆
நாவெட்டெழுத்தொடு⋆ நல்வீடு நண்ணின நம்பரிலும்⋆
மேவெட்டு வன்குண விண்ணோர்களினும்⋆ விசயனுக்குத்
தாவிட்டுலகளந்தான்⋆ தனை வேறென்று சாற்றினனே (16)

ஆணை மறாதவர் தேவர்⋆ அல்லா வழக்கோர் அசுரர்⋆
கோணை மராத குணச்செல்வ⋆ நீ குறிக்கொள் மறையைப்⋆
பேணிய தத்துவமும்⋆ பிணியற்ற கிரிசைகளும்⋆
காண் இதனால் விசயா என்று⋆ கண்ணன் இயம்பினனே (17)

மறை பொருந்ாதவை⋆ வல் அசுரர்க்கு வகுத்தமையும்⋆
மறைபொருந்தும் நிலையும்⋆ வண் குணப்படி மூவகையும்⋆
மறை நிலை தன்னை வகுக்கும்⋆ குறி மூன்றின் மேன்மையும் அம்⋆
மறை உமிழ்ந்தான் உரைத்தான்⋆ வாசவன் தன் சிறுவனுக்கே (18)

சத்துவ வீடுடை நற்கருமம்⋆ தான் உகந்தமையும்⋆
சத்துவமுள்ளது⋆ தான் குறிக்கொள் வகை செய்ததுவும்⋆
சத்துவ நற்கிரிசைப் பயனும்⋆ சரணாகதியும்⋆
சத்துவமே தருவான் உரைத்தான்⋆ தனிப் பார்த்தனுக்கே (19)

‡வன் பற்றறுக்குமருந்தென்று⋆ மாயவன் தான் உரைத்த⋆
இன்பக்கடல் அமுதாம் என நின்ற⋆ இக்கீதை தனை⋆
அன்பர்க்குரைப்பவர் கேட்பவர்⋆ ஆதரித்தோதும் அவர்⋆
துன்பக் கடலில் துளங்குகை நீங்கித்⋆ துலங்குவரே (20)

‡தீதற்ற நற்குணப் பாற்கடல்⋆ தாமரைச் செம் மலர்மேல்⋆
மாதுற்ற மாயன் மருவ⋆ இன் கீதையின் வண்பொருளைக்⋆
கோதற்ற நான்மறை மௌலியின்⋆ ஆசிரியன் குறித்தான்⋆
காதல் துணிவுடையார்⋆ கற்கும் வண்ணம் கருத்துடனே (21)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ மும்மணிக்கோவை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡அருள் தரும் அடியவர்பால் மெய்யை வைத்துத்⋆
தெருள் தர நின்ற தெய்வநாயக!⋆ நின்
அருளெனும் சீரோர் அரிவையானதென⋆
இருள் செக எமக்கோர் இன்னொளி விளக்காய்⋆
மணிவரை அன்ன நின் திருவுருவில்⋆
அணியமர் ஆகத்தலங்கலாய் இலங்கி⋆
நின்படிக்கெல்லாந் தன்படி ஏற்க⋆
அன்புடன் நின்னோடவதரித்தருளி⋆
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து⋆
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று⋆
தன்னடி சேர்ந்த தமருனை அணுக⋆
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே (1)

திருமால் அடியவர்க்கு மெய்யனார்⋆ செய்ய
திருமாமகள் என்றும் சேரும்⋆ திருமார்பில்
இம் மணிக்கோவை⋆ உடன் ஏற்கின்றார்⋆ என்றன் இம்
மும்மணிக்கோவை மொழி (2)

மொழிவார் மொழிவன மும்மறையாகும்⋆ அயிந்தையில் வந்து⋆
இழிவார் இழிகவென்று⋆ இன்னமுதக் கடலாகி நின்ற⋆
விழிவார் அருள் மெய்யர் மெல்லடி வேண்டிய⋆ மெல்லியல் மேல்⋆
பொழிவார் அனங்கர் தம்⋆ பூங்கரும்புந்திய பூ மழையே (3)

மழையில் எழுந்த மொக்குள் போல் வையம்⋆
    அழியவொன்றழியா அடியவர் மெய்ய⋆
    அருமறையின் பொருள் ஆய்ந்தெடுக்குங்கால்⋆
    திருவுடன் அமர்ந்த தெய்வநாயக⋆
நின் திருத் தனக்கு நீ திருவாகி⋆
    இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை⋆
    நந்துதல் இல்லா நல் விளக்காகி⋆
    அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி⋆
பாற்கடல் தன்னில் பன்மணி அன்ன⋆
    சீர்க்கணம் சேர்ந்த சீலம் எல்லையிலை⋆
    அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது⋆
    அடைய ஆண்டருளும் அரசனும் நீயே⋆
உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை⋆
    அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய்ச்⋆
    சித்திர மணியெனத் திகழுமன்னுருவில்⋆
    அத்திரம் அணியென அனைத்தும் நீ அணுகி⋆
விண்ணுள் அமர்ந்த வியன் உருவதனால்⋆
    எண்ணிய ஈரிரண்டுருக்களும் அடைதி⋆
    பன்னிரு நாமம் பலபல உருவாய்⋆
    இன்னுருவெங்கும் எய்தி நீ நிற்றி⋆
மீனோடாமை கேழல் கோளரியாய்⋆
    வானோர் குறளாய் மழுப்படை முனியாய்ப்⋆
    பின்னும் இராமர் இருவராய்ப் பாரில்⋆
    துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க்⋆
கலி தவிர்த்தருளும் கற்கியாய் மற்றும்⋆
    மலிவதற்கெண்ணும் வல்வினை மாற்ற⋆
    நானா உருவம் கொண்டு நல் அடியோர்⋆
    வானார் இன்பமிங்குறவருதி⋆
ஓருயிர் உலகுக்கென்னு நீ திருவோடு⋆
    ஏர் உயிரெல்லாம் ஏந்தி இன்புறுதி⋆
    யாவரும் அறியாதெங்கு நீ கரந்து⋆
    மேவுருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி⋆

கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில்⋆
கண்டிலம் கதி உனையன்றி மற்றொன்றும்⋆
பல்வகை நின்ற நின்படி அனைத்தினும்⋆
தொல்வகை காட்டும் துணிந்து தூமறையே (4)

தூமறையின் உள்ளம்⋆ துளங்காத் துணிவு தரும்⋆
ஆமறிவால் ஆர்ந்தடிமை ஆகின்றோம்⋆ பூமறையோன்
பாராயணத்தில் பணியும்⋆ அயிந்தை நகர்⋆
நாராயணனார்க்கே நாம் (5)

ஆர்க்கும் கருணை பொழிவான்⋆ அயிந்தையில் வந்தமர்ந்த⋆
கார்க்கொண்டலைக் கண்ட காதல்⋆ புனமயில் கண்பனியா⋆
வேர்க்குமுகிழ்க்கும் விதிர்விதிர்க்கும்⋆ வெள்கி வெவ்வுயிர்க்கும்⋆
பார்க்கின்றவர்க்கிது நாம் என்கொல் என்று⋆ பயிலுவமே (6)

பயின் மதி நீயே பயின் மதி தருதலின்⋆
வெளியும் நீயே வெளியுற நிற்றலின்⋆
தாயும் நீயே சாயை தந்துகத்தலின்⋆
தந்தையும் நீயே முந்தி நின்றளித்தலின்⋆
உறவும் நீயே துறவாதொழிதலின்⋆
உற்றதும் நீயே சிற்றின்பம் இன்மையின்⋆
ஆறும் நீயே ஆற்றுக்கருள் தலின்⋆
அறமும் நீயே மறநிலை மாய்த்தலின்⋆
துணைவனும் நீயே இணை இலையாதலின்⋆
துய்யனும் நீயே செய்யாள் உறைதலின்

காரணம் நீயே நாரணன் ஆதலின்⋆
கற்பகம் நீயே நற்பதம் தருதலின்⋆
இறைவனும் நீயே குறை ஒன்றிலாமையின்⋆
இன்பமும் நீயே துன்பம் துடைத்தலின்⋆
யானும் நீயே யென்னுள் உறைதலின்⋆
எனதும் நீயே உனதன்றி இன்மையின்⋆
நல்லாய் நீயே பொல்லாங்கிலாமையின்⋆
வல்லாய் நீயே வையமுண்டுமிழ்தலின்⋆

எங்ஙனமாகுமெய்ய நின் இயல்பெ⋆
    அங்ஙனேயொக்க அறிவதாரணமே (7)

ஆரணங்கள் தேட⋆ அயிந்தைநகர் வந்துதித்த⋆
    காரணராய் நின்ற கடல்வண்ணர்⋆ நாரணனார்
இப்படிக்குமிக்கன்றெடுத்த⋆ பாதம் கழுவ⋆
    மெய்ப்படிக்கம் ஆனது பொன் வெற்பு (8)

‡வெற்புடனொன்றி⋆ அயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்று⋆
    அற்புதமாக அமர்ந்தமை கேட்டு⋆ அருள் வேண்டி நிற்கப்⋆
பற்பில் அமர்ந்த செய்யாள்⋆ படிகாட்டிய பண்புடை⋆ எம்
    வில் புருவக்கொடிக்கோர்⋆ விலங்கா மயல் பெற்றனமே (9)

‡பெற்றனை நீயே மற்றுளதெல்லாம்⋆
    பெறுவது நின்னை உறுவது கொள்வார்⋆
நின்னால் அன்றி மன்னார் இன்பம்⋆
    நின் பொருட்டு நீ என் பொருட்டிலை⋆
நின் உருநின்று மின் உருத்தோன்றும்⋆
    நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார்⋆
நின் பால் அன்றி அன்பால் உய்யார்⋆
    வாரணம் அழைக்க வந்த காரணனே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ நவமணிமாலை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡ஒருமதி அன்பர் உளம் கவர்ந்தன⋆
உலகம் அடங்க வளர்ந்தளந்தன⋆
ஒருசடை ஒன்றிய கங்கை தந்தன⋆
உரக படங்கள் அரங்கு கொண்டன⋆
தருமம் உயர்ந்ததிதென்ன நின்றன⋆
தருமன் இரந்ததிசைந்து சென்றன⋆
சகடம் உடைந்து கலங்க வென்றன⋆
தமர்கள் அருந்துமருந்திதென்பன⋆
திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின⋆
திகழ் துளவுந்து மணம் கமழ்ந்தன⋆
செழுமணி கொண்ட சிலம்பிலங்கின⋆
சிலைதனில் அன்றோர் அணங்குமிழ்ந்தன⋆
அருமறையந்தம் அமர்ந்த பண்பின⋆
அயன் முடி தன்னில் அமர்ந்துயர்ந்தன⋆
அருள் தரவெண்ணி அயிந்தை வந்தன⋆
அடியவர் மெய்யர் மலர்ப் பதங்களே (1)

மகரம் வளரு மளவில் பௌவம் அடைய உற்றலைத்தனை⋆
வடிவு கமடமென அமர்ந்து கிரிதனைத் தரித்தனை⋆
மலியும் அசுரனுரம் இடந்து வசுதையைப் பெயர்த்தனை⋆
வலிகொள் அவுணன் உடல் பிளந்து மதலை மெய்க்குதித்தனை⋆
பகரும் உலகம் அடி அளந்து தமர்களுக்களித்தனை⋆
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவரைத் துணித்தனை⋆

பணிய விசைவில் தசமுகன் தன் முடிகள் பத்துதிர்த்தனை⋆
படியும் உருவில் வரு பிலம்ப அசுரனைத் தகர்த்தனை⋆
நகரிதுவரையென உகந்து வரை கரத்தெடுத்தனை⋆
நடமொடியலு பரியில் வந்து நலிவறுக்கவுற்றனை⋆
நலியும் வினைகள் செகுமருந்தின் நலமுறைந்த வெற்பினை⋆
நணுகு கருட நதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை⋆
அகர முதல வுரைகொள் மங்கை கணவனுக்களித்தனை⋆
அடையும் வினதை சிறுவனுய்ய அருள் கொடுத்துயர்த்தினை⋆
அடியும் அணையும் எனும் அனந்தன் அடிதொழக் களித்தனை⋆
அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே (2)

புரம் உயர்த்த அசுரர்கட்கோர்⋆ புறம் உரைத்த பொய்யினான்⋆
வரை எடுத்து மழை தடுத்த⋆ மழையொடொத்த மெய்யினான்⋆
திரை நிரைத்த கடலெரித்த⋆ சிலைவளைத்த கையினான்⋆
அருள் கொடுத்து வினை தவிர்க்கும்⋆ அடியவர்க்கு மெய்யனே (3)

தேசொத்தார் இல்லை எனும்⋆ தெய்வ நாயகனார்⋆
வாசக் குழல் மாமலராள்⋆ மணவாளர்⋆
வாசித்தெழுமன்மதனார்⋆ மணல் தோப்பில்⋆
மாசிக் கடலாடி⋆ மகிழ்ந்து வருவாரே (4)

உருளும் சகடம் ஒன்றுதைத்தாய்⋆
உலகம் ஏழும் உண்டுமிழ்ந்தளந்தாய்⋆
பொருளும் அழலுமிறையாகப்
பூண்டேன்⋆ அடிமையினில் மீண்டேன்⋆
இருளும் மருளும் தரும் அந்நாள்⋆
எழிலார் ஆழி சங்கேந்தி⋆
அருளும் தெருளும் தர என்பால்⋆
அடியோர் மெய்ய! வந்தருளே (5)

வஞ்சனைசெய் பூதனையை மலியும் சாட்டை⋆
மல்லரையோர் மதக்களிற்றை வானோர் அஞ்சும்⋆
கஞ்சனை முன் கடிந்தவனி பாரம் தீர்த்த⋆
காவலனே! கோவலனாய் நின்ற கோவே⋆

அஞ்சனமும் காயாவும் அனைய மேனி⋆
அடியவர்க்கு மெய்யனே அயிந்தை வாழும்⋆
மஞ்செனவே அருள் பொழியும் வள்ளலே⋆ நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே (6)

மையுமா கடலுமயிலும் மாமழையும்⋆
மணிகளும் குவளையும் கொண்ட
மெய்யனே⋆ அடியோர் மெய்யனே விண்ணோர்
ஈசனே⋆ நீசனேன் அடைந்தேன்⋆
கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே⋆
காலனார் தமரெனைக் கவராது⋆
ஐயனே! வந்தன்றஞ்சல் என்றருள்⋆ தென்
அயிந்தை மாநகர் அமர்ந்தானே (7)

‡மஞ்சுலாவு சோலைசூழ் அயிந்தை மன்னு மன்னுசீர்⋆
வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசுதேவனே⋆
செஞ்சொலன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனாய்த்⋆
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வ நாயக⋆
வெஞ்சொலாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென்மேல்⋆
விழுந்தழுந்தி யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்ன நீ⋆
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்றளிக்க வேண்டும் அச்சுதா⋆
அடியவர்க்கு மருளியக்கும் அடியவர்க்கு மெய்யனே (8)

‡பொருத்தம் பொருந்தலும்⋆
போகும் தவற்றுடன் பொய்ம் மதிமேல்⋆
விருத்தம் கலித்துறை⋆ மேவும்
அழல் மதம் வேறினியென்⋆
திருத்தமனத்தினில்⋆ சேரா
எமைத் தெய்வநாயக⋆ நின்
வருத்தம் பொறா அருளால்⋆
மன் அடைக்கலம் கொண்டருளே (9)

‡அந்தமில்சீர் அயிந்தைநகர் அமர்ந்த நாதன்⋆
அடியிணைமேல் அடி உரையால் ஐம்பதேத்திச்⋆

சிந்தை கவர் பிராகிருத நூறு கூறிச்⋆
செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்துப்⋆
பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல்⋆
பரவு நவமணிமாலை இவையும் சொன்னேன்⋆
முந்தை மறை மொழிய வழி மொழி நீயென்று⋆
முகுந்தன் அருள் தந்த பயன் பெற்றேன் நானே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ ப்ரபந்தசாரம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று
நாரணனார் தாள்களிலே நாலாயிரம் தமிழால்
நண்ணியுரை செய்தவற்றை நாடி வகை தொகை செய்தாய்
பூரண மாஞானியர் சேர் பொங்கு புகழ்த் தூப்புல் வரும்
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியர் புகழ் வேங்கடவா
தாரணியோர் இங்குகக்கச் சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து வாழுமனம் தந்தருளாய் என்றனக்கே

ஆதிமறையோதி மகிழ் அயக்கிரிவர் தம்மருளால்
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்தே இங்கு வந்த
வாதியரை வென்று வந்து வன்புவிமேல் எதிராசர்
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து
நீதிநெறி தவறாமல் நிறுத்தியிடும் வேங்கடவா
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளையெல்லாம் உணர்ந்து
சாதுசனம் வாழவென்று சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து வாழுமனம் தந்தருளாய் என்றனக்கே

‡ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள்⋆
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த⋆
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்⋆
வகையான தொகை இலக்கம் மற்றுமெல்லாம்⋆
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்⋆
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள்⋆

நீள் பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும்⋆
நேசமுடன் அடியேன் தன் நெஞ்சு தானே (1)

அருள் மிகுத்த ஒரு வடிவாய்க் கச்சிதன்னில்⋆
ஐப்பசீ மாதத் திருவோணத்து நாளில்⋆
பொருள் மிகுத்த மறை விளங்கப் புவியோர் உய்யப்⋆
பொய்கைதனில் வந்துதித்த புனிதா! முன்னாள்⋆
இருளதனில் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
இருவருடன் நிற்கவும் மால் இடை நெருக்கத்⋆
திருவிளக்காம் எனும் வையந்தகளி நூறும்⋆
செழும் பொருளா எனக்கருள் செய் திருந்த நீயே (2)

கடன்மல்லைக் காவலனே! பூதவேந்தே⋆
காசினிமேல் ஐப்பசியில் அவிட்ட நாள் வந்து⋆
இடர்கடியும் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க⋆
நடுவில் இவர் ஒருவரும் என்றறியாவண்ணம்⋆
நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்-
சுடர் விளக்கேற்றிய⋆ அன்பே தகளியான
தொடைனூறும்⋆ எனக்கருள் செய் துலங்க நீயே (3)

மாமயிலைப் பதியதனில் துலா மாதத்தில்⋆
வரும் சதயத்தவதரித்துக் கோவலூரில்⋆
தூமுனிவர் இருவருடன் துலங்க நின்று⋆
துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்றச்⋆
சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத்⋆
திருக்கண்டேன் என உரைத்த தேவே⋆ உன் தன்
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்⋆
பழவடியேனுக்கருள் செய் பரம நீயே (4)

தைம்மகத்தில் வரும் மழிசைப்பரனே!⋆ மற்றைச்
சமயங்கள் பல தெரிந்து⋆ மாயோன் அல்லால்
தெய்வம் மற்றில்லை என உரைத்த⋆ வேதச்
செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்⋆

மெய்ம்மிகுத்த திருச்சந்தவிருத்தப் பாடல்⋆
　　விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல்⋆ மெய்யே
வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும்
　　வகை⋆ அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே (5)

‡முன் உரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்⋆
　　முறையின் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்⋆
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி⋆
　　மறவாதபடி எண்பத்தேழு பாட்டும்⋆
பின் உரைத்ததோர் திருவாய்மொழி⋆ எப்போதும்
　　பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்⋆
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்⋆
　　எழில் குருகை வருமாறா! இரங்கு நீயே (6)

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில்⋆
　　சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி⋆
ஆறிய நல் அன்புடனே குருகூர் நம்பிக்கு⋆
　　அனவரதம் அந்தரங்க அடிமை செய்து⋆
மாறனை அல்லால் என்று மறந்தும்⋆ தேவு
　　மற்றறியேன் எனுமதுரகவியே⋆ நீ முன்
கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பதனில் பாட்டுக்⋆
　　குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே (7)

பொன் புரையும் வேல் குலசேகரனே!⋆ மாசிப்
　　புனர்பூசத்தெழில் வஞ்சிக் களத்துத் தோன்றி⋆
அன்புடனே நம்பெருமாள் செம்பொற்கோயில்⋆
　　அனைத்துலகின் பெருவாழ்வும் அடியார் தங்கள்⋆
இன்ப மிகு பெருங்குழுவும் காண⋆ மண்மேல்
　　இருளிரிய என்றெடுத்த இசையில் சொன்ன⋆
நன் பொருள் சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்⋆
　　நன்றாக எனக்கருள் செய் நல்கி நீயே (8)

பேர் அணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில்⋆
　　பெருஞ்சோதி தனில் தோன்றும் பெருமானே!⋆ முன்

சீர் அணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில்⋆
தியக்கற மால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி⋆
வாரணமேல் மதுரை வலம் வரவே⋆ வானில்
மால் கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்தும்⋆
ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு⋆ நானூற்று
எழுபத்தொன்றிரண்டும் எனக்குதவு நீயே (9)

‡வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்⋆
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன்⋆
தூய திருமகளாய் வந்தரங்கனார்க்குத்⋆
துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே⋆
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்⋆
நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை⋆
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும்⋆
அன்புடனே அடியேனுக்கருள் செய் நீயே (10)

மன்னு மதிள் திருமண்டங்குடி தான் வாழ⋆
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து⋆
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே!⋆ நீ முன்
துழாய் மாலை பணியடிமை செய்து நாளும்⋆
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச்
செப்பிய⋆ நல் திருமாலை நாற்பத்தைந்தும்⋆
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்⋆
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே (11)

உலகறிய மலி புகழ்க் கார்த்திகை மாதத்தில்⋆
உரோகிணி நாள் உறந்தை வளம் பதியில் தோன்றித்⋆
தலம் அளந்த தென்னரங்கர் பால்⋆ உலோக
சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து⋆
பலமறையின் பொருளால் பாண் பெருமாளே!⋆ நீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த⋆
சொலவமலனாதிபிரான் பத்துப் பாட்டும்⋆
சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே (12)

‡அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்⋆
ஆயிரத்தோடெண்பத்துநாலு பாட்டும்⋆
குறியதொரு தாண்டகம் நாலைந்தாறைந்தும்⋆
குலா நெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும்⋆
சிறிய மடல் பாட்டு முப்பத்தெட்டிரண்டும்⋆
சீர் பெரிய மடல் தனில் பாட்டெழுபத்தெட்டும்⋆
இறையவனே! கார்த்திகையில் கார்த்திகை நாள்⋆
எழில் குறையல் வரு கலியா இரங்கு நீயே (13)

‡தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில்⋆
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றிக்⋆
காசினிமேல் வாதியரை வென்று⋆ அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா!⋆ முன்
பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார்⋆ உன்
பொன்னடிமேல் அந்தாதியாகப் போற்றிப்⋆
பேசிய நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்⋆
பிழை அறவே எனக்கருள் செய் பேணி நீயே (14)

எண்ணின் முதலாழ்வார்கள் மூன்று நூறும்⋆
எழில் மழிசைப்பிரான் இருநூற்றொரு பத்தாறும்⋆
உண்மைமிகு மாறன் மறை ஆயிரத்தோடு
உற்ற⋆ இருநூற்றுத் தொண்ணூறுமாறும்⋆
வண்மையுடை மதுரகவி பத்தும் ஒன்றும்⋆
வஞ்சியர்கோன் நூற்றைந்தும்⋆ பட்டநாதன்
பண்ணியல் நானூற்றேழு பத்து மூன்றும்⋆
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே (15)

‡பத்தரடிப்பொடி பாடல் ஐம்பத்தைந்தும்⋆
பாணர் புகழ் பத்துடனே பரகாலன் சொல்⋆
அத்தன் உயர் வேங்கடமாற்காயிரத்தோடு⋆
ஆன இருநூற்றோர் ஐம்பத்து மூன்றும்⋆
முத்தி தரும் எதிராசர் பொன்னடிக்கே
மொழிந்த⋆ அமுதர் பாடல் நூறும் எட்டும்⋆

எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த
இவை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (16)

‡வையகமெண் பொய்கை பூதம் பேயாழ்வார்⋆
மழிசையர்கோன் மகிழ் மாறன் மதுரகவிகள்⋆
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுசித்தன்⋆
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணாழ்வார்⋆
ஐயன் அருள் கலியன் எதிராசர் தம்மோடு⋆
ஆறிருவர் ஓரொருவர் அவர் தாம் செய்த⋆
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின்
தொகை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (17)

‡அந்தமிலா ஆரண நாலாகி நின்ற⋆
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துச்⋆
செந்தமிழால் அருள் செய்த வகை தொகையும்⋆
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று⋆
சந்த மிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும்⋆
வேதாந்தகுரு மொழிந்த ப்ரபந்தசாரம்⋆
சிந்தையினால் அனு தினமும் சிந்திப்போர்க்குச்⋆
சேமமதாம் திருமால் தன் கருணை யாலே (18)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ ஆகாரநியமம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

சீராரும் வேதாந்த தேசிகர் கோன்
செழுமறையின் உட்பொருளைச் சிந்தை செய்தே
ஆராய்ந்து வாழ்வுற இப்புவியோர் தங்கட்கு
அன்புடனே ஆகார நியதி சொன்னான்
ஏராரும் எதிராசர் அருளினாலே
எதிர்ந்தவர்கள் சிங்கமென இங்கு வந்தோன்
சீராரும் வேங்கடவன் தூப்புல் பிள்ளைச்
செழும் திருத்தாள் இணைமலர் என் சென்னி மேலே

‡ஆகாரத் திருவகையாம் நன்றும் தீதும்
அருமறை கொண்டெதிராசர் இவை மொழிந்தார்
ஆகாத வழிவிலக்கி யாக்கும் கண்ணன்
அனைத்துலகும் வாழவிது சாற்றி வைத்தான்
போகாது போக்குவிக்கு முனிவர் சொன்ன
பொய்யாத மொழிகளையும் பொருந்தக் கேண்மின்
ஆகாதென்றிவை தவிர்ந்தாமதுவே கொண்ட
அசகரனும் ஆகம் காத்தருள் பெற்றானே (1)

வாயிலல்லா வாயிலினால் வந்த சோறும்
வரகு முதல் ஆகாதென்றுரைத்த சோறும்
வாயினின்றும் விழுமவை தாம் பட்ட சோறும்
வாய்க்கொண்ட கவளத்தின் மிகுந்த சோறும்
தீயவர்கண் படும் சோறும் தீதற்சோறும்
சீரையுரை தும்மல் இவை பட்ட சோறும்

நாய் முதலானவை பார்க்கும் தீண்டும் சோறும்
நாள் தூய்தல்லாச் சோறும் நண்ணாச் சோறே (2)

மனிசர் பசு முதலானோர் மோந்த சோறும்
மனிசர் தமில் ஆகாதார் தீண்டும் சோறும்
இனிமையுடன் ஆதரமில்லாதார் சோறும்
ஈப் புழு நூல் மயிர் உகிர்கள் இருக்கும் சோறும்
முனிவரெனும் துறவறத்தோர் ஈந்த சோறும்
முனிவர் தங்கள் பாத்திரத்தில் பட்ட சோறும்
மனிசர் எலி குக்குடங்கள் காகம் பூனை
வாய்க்கொண்ட கறிசோறு மருவாச் சோறே (3)

அத்திகள் பேரார்க்கிறலி வெண்கத்தாரி
ஆல் அரசு நறுவிலி புங்காயில் ஆரை
புத்தி கொல்லி குறிஞ்சி தான்றி குசும்பை வேளை
புனமுருங்கை முருங்கை சுக முளரி உள்ளி
சிற்றவரை கொம்மட்டி பண்ணை தொய்யில்
சீங்காடன் தேறல் ஊவை பனை மயூரன்
சுத்தியிலா நிலத்தில் இவை கடம்பு காளான்
சுரை பீர்க்குச் சணம் தின்னார் சுருதி யோரே (4)

சிறுகீரை செவ்வகத்தி முருக்கிரண்டும்
சிறுபசளை பெரும்பசளை அம்மணந்தாள்
பறித்தொருவர் கொடாதிருக்கத் தானே சென்று
பாய்ந்தெடுத்துக் கொள்ளும் அவை பகிராக்கூறும்
குறித்தாலும் தின்னவொணாக் கைப்புவர்ப்பும்
கூர்க்கும் அவை யழலும் அவை கொடும் புளிப்பும்
கறிக்காகா இவையென்று கண்டுரைத்தார்
கார்மேனி அருளாளர் கடகத்தாரே (5)

மால் அமுது செய்யாமல் வந்தவெல்லாம்
வருவிருந்தில் வழங்காமல் வைத்தவெல்லாம்
காலம் இதுவன்றென்று கழித்த வெல்லாம்
கடையில் வரும் கறி முதலக் கழுவாவெல்லாம்

நூல் இசையா வழிகளினால் வந்தவெல்லாம்
நுகராததுடன் பாகம் செய்தவெல்லாம்
சீலமில்லாச் சிறியோர் ஆக்கினவும் நல்லோர்
செலமலங்கள் பட்டனவும் தின்னார் தாமே (6)

தேவர்களுக்கிவை என்று வைத்த வெல்லாம்
சிவன் முதலாம் தேவர்களுக்கிட்டவெல்லாம்
ஆவிமுதலான அவற்றுக்காகாவெல்லாம்
அதுவிதுவென்றறிய அரிதானவெல்லாம்
நாவில் இடுவதற்கரிதாய் இருப்பவெல்லாம்
நன்றென்று தம்முள்ளம் இசையாவெல்லாம்
ஓவியநாள் ஓவாத பூவும் காயும்
உத்தமர்கள் அட்டுப்பும் உகவார் தாமே (7)

கிளிஞ்சில் முதல் சுட்டன சுண்ணாம்பு தானும்
கிளர் புனலில் எழுங்குமிழி நுரைகள் தாமும்
விளைந்ததனில் முதல் மாலுக்கீயாவெல்லாம்
விளைந்த நில மறு காம்பென்றெழுந்தவெல்லாம்
களைந்த மனத்தார் மற்றும் கழித்தவெல்லாம்
கடியமுதின் நியமத்தார் கழித்தவெல்லாம்
தெளிந்த புனல் திருவேங்கடத்து மால் தன்
திருவாணை கடவாதார் தின்னார் தாமே (8)

மோரலது சாரங்கள் வாங்கிற்றெல்லாம்
முழுப்பகலில் விளங்கனியும் தானம் தானும்
ஓரிரவில் எள்ளுடனே கூடிற்றெல்லாம்
எள்ளதனில் எண்ணெய் தயிர் தரு பண்டங்கள்
ஓர் தவத்தை மந்திரத்தை ஒழிப்பவெல்லாம்
உண்ணாத நாட்களில் ஊண் அந்திப்போதூண்
நாரணனார் அடிபணியும் நல்லோர் நாளும்
நள்ளிரவில் ஊணுமிவை உண்ணார் தாமே (9)

குளி முதலானவை செய்யாதுண்ணும் ஊணும்
கூட்டல்லாப் பந்தியில் ஊண் பிறர் கை ஊணும்

நளிமதி தீ விளக்காக உண்ணும் ஊணும்
நள்ளிரவில் விளக்கின்றி உண்ணும் ஊணும்
கிளிமொழியாள் உண்ணா நிற்கக் கணவன் ஊணும்
கீழோரை நோக்கூணும் இடக்கை ஊணும்
ஒளிமறையோர் மற்றும் உகவாத ஊணும்
ஒளி அரங்கர் அடிபணிவார் உகவார் தாமே (10)

எச்சில் தனில் வார்க்கும் நெய் இருபாகங்கள்
இரும்பாலும் கையாலும் இட்டவெல்லாம்
பச்சையலால் கடித்தகுறை பழைய வூசல்
பிறர் அகத்துப் பாகம் செய்தெடுத்த அன்னம்
நச்சினவை பழித்தவை மண்ணாற்றம் தீதும்
நகத்தாலே விண்டவை தாம் காணும் உப்பும்
பிச்சுளதாம் அவை காடி பின்ன பாகம்
பிசின்கள் தன்னில் சிவந்ததுவும் பிழையூணாமே (11)

தாதை நல் ஆசிரியன் முதல் தமையன் எச்சில்
தரணிசுரர் சோமத்தில் அருந்தும் எச்சில்
மாதர்கட்குக் கணவன் இதமான எச்சில்
மயிர் புழு நூல் விழுந்தாலும் புனிதமாகும்
மாதவத்துக் கூவிளங்காய் முகவாசத்து
மாதுளங்காய் மரணம் வரில் கழித்தவெல்லாம்
ஓதி வைத்த வுண்ணாநாள் உகந்த எட்டும்
உள என்றும் கழித்தவற்றில் நன்றாம் ஊணே (12)

மாகரும்பின் சாறு தயிர் பால் நெய் பாக்கு
வளை மிளகு தேன் ஏலம் பனிநீர் ஆதி
ஆகரசம் தூய்தாகும் அறியாவெல்லாம்
அறியாதார்க்கறி அளவும் தூய வாகும்
சாகரங்க தூயனவாம் உவாக்கள் கூடில்
சலமெல்லாம் கங்கையதாம் உபராகத்தில்
மாகரங்கள் பிணமுதலாம் அனைத்தும் கொண்டு
வருபுனலும் தூய்தாகும் வேகத்தாலே (13)

தீயாலே நீரொழிய வெந்தவெல்லாம்
    தீயிடுதல் ஒழிந்திடவே பழுத்தவெல்லாம்
தீயாலும் நீராலும் வெந்தவற்றில்
    தேறவுலர் நெல்லுமுதலான வெல்லாம்
ஊசாத மாவடகம் அப்பம் சீடை
    ரொட்டி முதலாம் அவற்றில் பழைய தேனும்
கூசாதே கொண்டிடுமின் புதிய தேனும்
    கொள்ளேன்மின் தன்னிரதம் குலைந்தக் காலே (14)

தலைப்பயனாம் விகாரங்கள் சாகடங்கள்
    சக்கரங்கள் தனக்கடைத்த மருந்து தானும்
கலக்கமிலா நன்னீரில் வைத்த சோறும்
    கறிமோர்நெய் பால் தயிர்கள் கலந்த சோறும்
விலக்கமிலா மாக்கன்னல் கோது மத்தால்
    விளைவுறவாக்கிய நல் விகாரம் தானும்
இலைக்கறி போல் இவை அனைத்தும் பழைய வேனும்
    எந்நாளும் வைத்துண்ண இசைகின்றாரே (15)

தயிர் தன்னில் விகாரங்கள் பூவில் காயில்
    பழத்தில் வரும் சாறுரசல் தூய வாகும்
உயிர் அழியாமைக்குண்ணா ஊசல் உண்ணில்
    உறக்கழுவி நெய் தேனிட்டுண்ணலாகும்
பயின்மறை நூல் உரையாத பழைய ஊசல்
    பழிப்பிலதாம் நெய்யால் என்றுரைத்தான் சங்கன்
மயிர் முதலானவை பின்னும் பட்ட தாயின்
    மண் ணீர் மற்றுரைத்தவற்றால் வரங்களாமே (16)

ஒரு குளம்பி இரு கன்றி ஒட்டகப்பால்
    உப்புடன் பால் மோருடன் பால் மாதர் தம் பால்
கருவுடைய அவற்றின் பால் கன்றிலாப் பால்
    மறு கன்றால் கறந்திடும் பால் திரிந்திடும் பால்
திருமகளார் கணவனலாத் தெய்வத்தின் பேர்
    சின்னமுடை அவற்றின் பால் செம்மறிப் பால்

பரிவதில் அந்தணர் விலைப் பால் செம்பினில் பால்
தீதாம் பால் இவையனைத்தும் பருகாப் பாலே (17)

கங்கை அல்லதிரண்டாநாள் வைத்த நீரும்
கால் கழுவி மிகு நீரும் கலங்கல் நீரும்
தெங்கின் உளதாய்த் தீயால் காய்ந்த நீரும்
சிறுகுழி நீர் வழித்தண்ணீர்ப் பந்தல் நீரும்
சங்கையுடை நீர் வண்ணான் துறையின் நீரும்
தாரையினால் எச்சில் இதுவென்ற நீரும்
சங்கு கலமாக்கொண்டு பருகு நீரும்
தரையில் விழா மழைநீரும் தவிரும் நீரே (18)

வெற்றிலை முன் தின்னாதே தின்னும் பாக்கும்
வெற்றிலையில் அடி நுனியும் நடுவில் ஈர்க்கும்
வெற்றிலையும் பாக்குமுடன் கூட்டித் தின்னும்
விதவைக்கு முதன் முடிவாச்சிரமத்தார்க்கும்
வெற்றிலையும் சுண்ணாம்பின் இலையு மற்றும்
விரதம் கொண்டிடு நாள் வெற்றிலையும் பாக்கும்
வெற்றிலை தின்னா நிற்கப் பருகு நீரும்
விதையென வைத்தது தினலும் விலக்கினாரே (19)

சாதிகுணம் ஆச்சிரமம் தேசம் காலம்
தருமங்கள் நிமித்தங்கள் முதலாவோதும்
பேதமுதலாக ஒரு திரவியந்தான்
பரிந்து நலம் தீங்கினையும் பெற்று நிற்கும்
பாதமிசைப் பிறந்தோர்க்குக் கபிலையின் பால்
பருகிடல் ஆகாதென்று மறையோர் சொன்னார்
ஆதலினால் ஓதி உணர்ந்தவர் பால் எல்லாம்
அடிக்கடியும் கேட்டயர்வு தீர்மினீரே (20)

‡கங்கிருளால் விடியாத உலகுக்கெல்லம்
கைவிளக்காம் இவையென்று கண்ணன் காட்டும்
பொங்கு புகழ் ஆகமங்கள் தெளியச் சொன்ன
பொருளிவை நாம் புண்ணியர்பால் கேட்டுச் சொன்னோம்

மங்குடலும் பொருளும் அல்லதறியா மாந்தர்
    வலையுள் அகப்பட்டு வரம் அழியாதென்றும்
பங்கய மாதுற்ற அருளாளர் தம்பால்
    பத்திமிகு பவித்திரங்கள் பயின்மினீரே (21)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ பிள்ளையந்தாதி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதியென்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக்கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ்வுலகுய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே

‡மாமலர் மன்னிய மங்கை⋆ மகிழ்ந்துறை மார்பினன் தாள்⋆
தூமலர் சூடிய தொல்லருள்⋆ மாறன் துணை அடிக்கீழ்
வாழ்வை உகக்கும்⋆ இராமானுசமுனி வண்மை போற்றும்
சீர்மையன்⋆ எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே (1)

சென்னி வணங்கச்⋆ சிறு பனி சோரவெங்கண் இணைகள்⋆
வெந்நரகங்களும் வீய வியன் கதி இன்பமேவ⋆
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள்
மன்னிய⋆ நாள்களும் ஆகுங்கொல்⋆ மாநிலத்தீர் நமக்கே (2)

மாநிலத்தோதிய⋆ மாமறை மன்னிய நற்கலைகள்⋆
ஆனவை செய்யும் அரும் பொருள் அத்தனையே அருளும்⋆
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரம் செய்⋆
ஊனமில் தூப்புல் அய்யன்⋆ ஓர் புகழன்றி உய்வில்லையே (3)

உய்யும் வகை இல்லை⋆ உத்தரவேதியுள் வந்துதித்த⋆
செய்யவள் மேவிய சீர் அருளாளரைச்⋆ சிந்தை செய்யும்
மெய்யவன் எந்தை⋆ இராமானுசன் அருள் மேவி வாழும்
ஐயன்⋆ இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே (4)

அன்றிவ்வுலகினை ஆக்கி⋆ அரும் பொருள் நூல் விரித்து⋆
நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி⋆ பின்னும்
வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய்⋆
நின்று நிகழ்ந்து⋆ மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே (5)

வித்தகன் வேதியன்⋆ வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்⋆
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள்⋆
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்⋆
கைத்தவன் என்றுரைத்தேன்⋆ கண்டிலேன் என் கடுவினையே (6)

வினைகாள் உமக்கு⋆ இனி வேறோரிடம் தேடவேண்டும்⋆ எனைச்-
சினமேவி முன் போல் சிதைக்கும் வகை இங்கரிது கண்டீர்⋆
எனெனில் இராமானுசமுனி இன்னுரை சேரும்⋆ தூப்புல்
புனிதன்⋆ என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே (7)

பொருந்திப் புவிதனில்⋆ பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள்⋆
இருந்து நரகின் இடர் கெடும் ஆற்றை அறிகின்றிலீர்⋆
பொருந்தும் பொருளொன்று கேளீர்⋆ பொங்கும் இவ்விடர்க் கடற்கு
வருந்தாது⋆ தூப்புல் மாபூருடன் பாதம் வணங்குமினே (8)

வணக்கம் ஒடுக்கம்⋆ வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும்⋆
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் இகந்து நிற்கும்⋆
குணக்குலம் ஓங்கும் இராமானுசன் குணம் கூறும்⋆ தூப்புல்
அணுக்கனைப் பிள்ளைதனை⋆ அரணாக அடைபவர்க்கே (9)

அடைபவர் தீவினை மாற்றி⋆ அருள்தரும் தூப்புல் ஐயா⋆
இடர் தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமிழ்ந்த என்னைக்⋆
கடையறப் பாசம் கழற்றி நின் தாளிணை காணும் வண்ணம்⋆
உடையவனே! அருளாய்⋆ உணர்ந்தார் தங்கள் கற்பகமே (10)

கற்பகமே என்று⋆ காசினியோரைக் கதிக்க மாட்டேன்⋆
வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன்⋆
பற்பல கலைவல்ல பாவலனே பத்தர் ஏத்தும் தூப்புல்⋆
அற்புதனே அருளாய்⋆ அடியேனுக்கரும் பொருளே (11)

பொருளானதொன்றும்⋆ என்னில் பொருந்தாததும் அன்றி அந்தோ⋆
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன்⋆
தெருளார் மறைமுடித் தேசிகனே⋆ எங்கள் தூப்புல் தேவே!
அருளாய்⋆ இனி எனக்குன் அருளே அன்றி ஆறில்லையே (12)

ஆறாகவெண்ணும்⋆ அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு⋆
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரத்தி இல்லை⋆
தேறாது திண்மதி சீரார் கதியிலும் செம்பொன் மேனி⋆
மாறாத தூப்புல் மாலே!⋆ மறவேன் இனி நின் பதமே (13)

நின்பதம் தன்னிலும்⋆ நேரே எனக்கில்லை அன்பு கண்டாய்⋆
நின்பதம் ஒன்றியவன் பரிலும் நேசமில்லை அந்தோ⋆
என்படி கண்டினி என்பயன் ஏதமில் தூப்புல் எந்தாய்!⋆
உன்படியே அருளாய்⋆ உதவாய் எனக்குன்னருளே (14)

உன்னருள் அன்றி⋆ எனக்கொரு நற்றுணை இன்மையினால்⋆
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி⋆
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே⋆
பொன் அருளால் அருளாய்⋆ புகழ் தூப்புல் குலவிளக்கே (15)

விளக்காகி⋆ வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள்⋆
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார்⋆
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக்⋆
களக்காதல் செய்யும் நிலை கடியாய்⋆ தூப்புல் காவலனே (16)

‡காவலர் எங்கள்⋆ கிடாம்பிக் குலபதி அப்புளார் தம்⋆
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து⋆ அவர் தம் அருளால்
நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற⋆ நம்பி
காவல தூப்புல் குலத்தரசே!⋆ எம்மைக் காத்தருளே (17)

அருள் தரும் ஆரண தேசிகனே!⋆ எங்கள் தூப்புல் தேவே⋆
வருகவி தார்க்கிகசிங்கமே!⋆ வாதியர் வாழ்வறுத்தாய்⋆
இருகையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய்⋆
உருவவெனக்கருளாய்⋆ எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே (18)

‡தொண்டர் உகக்கும் துணையடி வாழி!⋆ நின் தூமுறுவல்
கொண்ட முகம் வாழி!⋆ வாழி வியாக்கியா முத்திரைக்கை⋆
வண் திருநாமமும் வாழி⋆ மணிவட முப்புரி நூல்
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே!⋆ வாழி நின் வடிவே (19)

‡வடிவழகார்ந்த⋆ வண் தூப்புல் வள்ளல் மென்மலர் அடிமேல்⋆
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன்⋆
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்தோதும் அன்பர்⋆
முடியிடை நேர்படும்⋆ தூப்புல் அம்மான் பத மாமலரே (20)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥